தொல்காப்பியம் உரைவளம்

பொருளதிகாரம்

மெய்ப்பாட்டியல்

யாதும் ஊரே யாவரும் கேளிர்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

தொகுப்பும் குறிப்பும்

ஆ. சிவலிங்கனார்

தொல்காப்பியம் உரைவளம்
பொருளதிகாரம்

மெய்ப்பாட்டியல்

தொகுப்பும் குறிப்பும்
ஆ. சிவலிங்கனார்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
டி.டி.டி.ஐ. (அஞ்சல்), தரமணி, சென்னை - 600 113

தொல்காப்பியம்-உரைவளம்
வெளியீட்டுத் திட்டம்

வெளியீடு

BIBLIOGRAPHICAL DATA

Title	:	Tolkappiyam-Meyppattiyal
Subject	:	Compilation of the Commentaries of Tolkappiyam Meyppattiyal .
Editor	:	A. Sivalinganar
Publisher & Copyright	:	International Institute of Tamil Studies, C.I.T. Campus, Adyar, Chennai - 600 113
Publication No	:	283
Language	:	Tamil
Date of Publication	:	1998
Edition	:	First
Paper Used	:	16kg T.N.P.L. Super Printing
Size of the Book	:	21x 14 cms
No. of Copies	:	1000
No. of Pages	:	vii+119
Price	:	Rs. 30/-
Printer	:	Annam Offset Printers 25, C.N.K. Salai, Chepauk, Chennai - 600 005

டாக்டர் ச. சு. இராமர் இளங்கோ
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை-600 113

அணிந்துரை

"திங்களொடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும்
உடுக்க ளோடும்
மங்குல்கடல் இவற்றோடும் பிறந்ததமி ழுடன்பிறந்தோம்
நாங்கள்!"

என்று பாவேந்தர் பாரதிதாசன் தமிழினத்தின் பெருமையைப் பாடுவார்.

தமிழினத் தொன்மைக்குக் கட்டியங்கூறும் தொல்காப்பியம், எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டுமன்றிப் பொருளுக்கும் இலக்கணம் வகுத்த பெருமை உடையது. இதற்கு வெளிவந்த உரைகளே இதன் ஆழத்தையும், அகலத்தையும் வெளிக் கொணரும். எனவே, தொல்காப்பியத்தின் பெருமையை எடுத்தியம்பும் வகையில் உரைவளம் எழுதும் திட்டப்பணிக்காகப் பேராசிரியர் ஆ. சிவலிங்கனார் அவர்கள் இந் நிறுவனத்தில் 1980ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார். அவருடைய முதல் திட்டப்பணி நூலான 'தொல்காப்பியச் சிறப்புப் பாயிர உரைவளம்' 27-9-80-ல் அப்போதைய மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் வ. சுப. மாணிக்கம் அவர்களால் வெளியிடப்பெற்றது.

தொடர்ந்து எழுத்ததிகாரத்திற்கும், சொல்லதிகாரத்திற்கும் அவர் தொகுத்த உரைவளம் வெளிவந்தது. பொருளதிகாரத்தில், மரபியல் 1981-லும், அகத்திணையியல் 1991-லும், கற்பியல் 1993-லும், பொருளியல், களவியல் 1994-லும், புறத்திணையியல் பகுதி-1, பகுதி-2 1996-லும், செய்யுளியல் பகுதி-1 1997-லும் வெளிவந்தன.

தொல்காப்பிய உரைவளத் திட்டத்தின் 31 ஆவது வெளியீடாகச் மெய்ப்பாட்டியல் எனும் இந் நூல் இப்போது வெளிவருகிறது.

பேராசிரியர் ஆ. சிவலிங்கனார் அவர்கள் நுண்மாண் நுழைபுலம் பெற்ற பெரும் புலவர்; பழம்பெரும் தொல்காப்பிய உரையாசிரியர்களான இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பேராசிரியர் ஆகியோரது உரைகளையும் தொகுத்து அவற்றுடன் தம்முடைய உரையினையும் இணைத்து இந் நூலினை அமைத்துள்ளார். தொல்காப்பியத்தில் ஆய்வினை மேற்கொண்டு முனைவர் பட்டம் பெற்ற முனைவர் சி. இலக்குவனார் அவர்களின் ஆங்கில மொழிபெயர்ப்பையும் மேற்கோள் காட்டியுள்ளார்.

இவரது தொல்காப்பியப் புலமையைப் பாராட்டும்முகத்தான் 4, 5, 6-8-97களில் நடைபெற்ற ‘தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள்’ தேசியக் கருத்தரங்கின்போது நிறுவனம் இவருக்குத் ‘தொல்காப்பியச் செம்மல்’ என்னும் விருது வழங்கிப் பாராட்டிச் சிறப்பித்தது.

இந் நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகின்ற நிறுவனத் தலைவர் மற்றும் தமிழ் ஆட்சிமொழி - பண்பாடு மற்றும் இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறைச் செயலாளர், திருமிகு த. இரா. சீனிவாசன், இ.ஆ.ப. அவர்களுக்கும் நிறுவனத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந் நூலின் படிகளை மெய்ப்புத் திருத்திய பெரும்புலவர் அ. நக்கீரன் அவர்களுக்கும், நூலின் முதலில் அமைந்துள்ள சூத்திர நுவல்பொருள், இறுதியில் அமைந்துள்ள சூத்திர முதற்குறிப்பு அகராதி, சொல்லகராதி ஆகியவற்றைச் செய்து தந்த திருமிகு கோ. உத்திராடம் அவர்களுக்கும், இந் நூலினைக் கவினுற அச்சடித்துத் தந்த அன்னம் மறுதோன்றி அச்சகத்திற்கும் எங்கள் நன்றி.

இயக்குநர்

SYSTEM OF TRANSLITERATION

உயிரெழுத்துகள் Vowels

அ	a	எ	e
ஆ	ā	ஏ	ē
இ	i	ஐ	ai
ஈ	ī	ஒ	o
உ	u	ஓ	ō
ஊ	ū	ஔ	au

மெய்யெழுத்துகள் - Consonants

க்	k	ங்	ṅ	ய்	y
ச்	s	ஞ்	ñ	ர்	r
ட்	t	ண்	ṇ	ல்	l
த்	th	ந்	n	வ்	v
ப்	p	ம்	m	ழ்	ḻ
ற்	ṟ	ன்	ṉ	ள்	ḷ

சுருக்க விளக்கம்

அகம் - அகநானூறு
ஆய்ச்சி - ஆய்ச்சியர் குரவை
இ.வி - இலக்கண விளக்கம்
இ-ள் - இதன் பொருள்
இளம் - இளம்பூரணர்
உ-ம் - உதாரணம்
எ-டு - எடுத்துக் காட்டு
எ-று - என்றவாறு
என்-னின் - என்னுதலிற்றோவெனின்
ஐங்குறு - ஐங்குறுநூறு
ஐந்.ஐம் - ஐந்திணை ஐம்பது
கலி - கலித்தொகை
குறள் - திருக்குறள்
குறிஞ்சிப் - குறிஞ்சிப்பாட்டு
குறுந் - குறுந்தொகை
சிலப் - சிலப்பதிகாரம்
சூ - சூத்திரம்
செய் - செய்யுளியல்
சொல் - சொல்லதிகாரம்
தொல் - தொல்காப்பியம்
தொன் - தொன்னூல் விளக்கம்
நச் - நச்சினார்க்கினியர்
நற் - நற்றிணை
நாலடி - நாலடியார்
நெடுநல் - நெடுநல்வாடை
பரிபா - பரிபாடல்
பு. வெ. மா. - புறப்பொருள் வெண்பாமாலை
புறம் - புறநானூறு
பெரும்பாண் - பெரும்பாணாற்றுப்படை
பேரா - பேராசிரியர்
மு.வீ. முத்துவீரியம்
முத்தொள் - முத்தொள்ளாயிரம்
யா.வி - யாப்பருங்கல விருத்தி
வீர - வீரசோழியம்

சூத்திர நுவல்பொருள்

245. மெய்ப்பாடுகளின் வகை முப்பத்திரண்டு என்றும் புறனே அமைவது பதினாறு என்றும் கூறுகின்றது.
246. இச் சூத்திரம் பதினாறு பொருளும் எட்டாக வரும் என்று கூறுகின்றது.
247. நகை முதலாக உவகை ஈறாகச் சொல்லப்பட்ட எட்டுவகை மெய்ப்பாடுகளைக் கூறுகின்றது.
248. நகை தோற்றும் இடமாக நான்கு பொருளைக் கூறுகின்றது.
249. அழுகை தோற்றும் இடமாக நான்கு பொருளைக் கூறுகின்றது.
250. இளிவரலுக்குரிய நான்கு பொருளைக் கூறுகின்றது.
251. புதுமை முதலாகச் சொல்லப்பட்ட நான்கினாலும் மருட்கை பிறக்கும் என்று கூறுகின்றது.
252. அச்சம் தோற்றும் நான்குவகைப் பொருளைக் கூறுகின்றது.
253. பெருமிதம் பிறக்கும் நான்கு பொருளைக் கூறுகின்றது.
254. உறுப்பறை முதலாகச் சொல்லப்பட்ட நான்கினானும் வெகுளி பிறக்கும் என்று கூறுகின்றது.
255. உவகை பிறக்கும் நான்கு இடங்களைக் கூறுகின்றது.
256. மெய்ப்பாட்டிற்குரிய பிற இடங்களைக் கூறுகின்றது.
257. ஐந்திணைக்குரிய மெய்ப்பாடுகளாக முதல் அவத்தைக்குரிய நான்கைப்பற்றிக் கூறுகிறது.
258. கூழைவிரித்தல் முதலாக உடைபெயர்த்து உடுத்தல் ஈறாக இரண்டாம் அவத்தைக்குரிய மெய்ப்பாடுகளைக் கூறுகின்றது.
259. அல்குல் தைவரல் முதலாகக் கூறப்பட்ட நான்கும் மூன்றாம் அவத்தையாகக் கூறுகின்றது.
260. பாராட்டெடுத்தல் முதலாகச் சொல்லப்பட்ட நான்கும் நான்கா மவத்தைக்கண் நிகழும் என்று கூறுகின்றது.
261. தெரிந்துடம்படுதல் முதலாகச் சொல்லப்பட்ட நான்கும் ஐந்தாம் அவத்தைக்குரிய மெய்ப்பாடு என்று கூறுகின்றது.
262. ஆறாம் அவத்தைக்கண் வரும் மெய்ப்பாடுகளைக் கூறுகின்றது.
263. இச் சூத்திரம் மேலதற்கோர் புறனடை கூறி அகத்திணைக்குரிய நிமித்தமும் வரும் எனக் கூறுகின்றது.
264. நிமித்தமாக இடங்களைக் கூறுகின்றது.
265. கைக்கிளைக்கு உரியதோர் மெய்ப்பாடு கூறுகின்றது.
266. பெருந்திணைக்குரிய மெய்ப்பாடுகளைக் கூறுகின்றது.
267. மனனழியாத நிலையில் நிகழ்வன என்று கூறுகின்றது.
268. அழிவில் கூட்டத்திற்குரிய பொருள் உணர்த்துகின்றது.
269. மெய்ப்பாட்டிற்குரிய பத்துவகை ஒப்புமை கூறுகின்றது.
270. காமக்குறிப்பு ஆகாதனபற்றிக் கூறுகின்றது.
271. மெய்ப்பாட்டின் நுட்பத்தைப்பற்றிக் கூறுகின்றது.

தொல்காப்பியம் உரைவளம்

பொருளதிகாரம்

மெய்ப்பாட்டியல்

**245* பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்
கண்ணிய புறனே நானான் கென்ப. (1)***

இலக்குவனார்

249. They say that thirty two concepts evolved out of plays may be calculated into sixteen.

இளம்பூரணர்

இவ் வோத்து என்ன பெயர்த்தோ எனின், மெய்ப்பாட்டியல் என்னும் பெயர்த்து; மெய்ப்பாடு உணர்த்தினமையாற் பெற்ற பெயர். அஃதியாதோ எனின், முன்னர்க் கூறுதும்.

245. பண்ணைத் தோன்றிய .... கென்ப

என்பது சூத்திரம்.

இச் சூத்திரம் என்னுதலிற்றோவெனின், பிறர்[1] வேண்டுமாற்றால் சுவையுஞ் சுவைக்குறிப்பும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) பண்ணைத் தோன்றிய என்பது - விளையாட்டாயத்தின் கண் தோன்றிய என்றவாறு. பண்ணையுடையது பண்ணை[2] என்றாயிற்று.

எண்ணான்கு பொருளும் கண்ணிய புறனே நானான்கென்ப என்பது - முப்பத்திரண்டு பொருளையுங் குறித்ததன் புறத்து நிகழும் பொருள் பதினாறு என்று சொல்லுவர் என்றவாறு.

புறத்து நிகழ்வதனைப் புறம்[3] என்றார்.

---

* சூத்திரத்தின் முன்னர் உள்ள எண் தொல்காப்பியப் பொருளதிகாரத் தொடர் எண். பின்னர் உள்ள எண் மெய்ப்பாட்டியல் தொடர் எண்.

1. பிறர் - நாடக நூலார்

2. பண்ணை - விளையாட்டு; அது விளையாடும் குழுவையுணர்த்திற்று - ஆகுபெயர்.

3. புறம் என்றது மெய். அதில் நிகழும் மெய்ப்பாடுகளைப் புறம் என்றார்.

பண்ணைத் தோன்றிய கண்ணிய புறன் எனப் பெயரெச்ச அடுக்காகக் கூட்டுக. அன்றியும், எண்ணான்கு பொருளுங் கண்ணிய புறன் என ஒருசொல் நடையாக ஒட்டித் தோன்றிய என்னும் பெயரெச்சத்திற்கு முடிபாக்கினும் அமையும். புறன் என்னும் எழுவாய் நானான்கென்னும் பயனிலை கொண்டு முடிந்தது.

ஈண்டுச் சொல்லப்படுகின்ற பதினாறு பொருளும்[1] கற்று நல்லொழுக்கு ஒழுகும் அறிவுடையார் அவைக்கண் தோன்றாமையாற் பண்ணைத் தோன்றிய என்றார். என்னை? நகைக்குக் காரணமாகிய எள்ளல் அவர்கண் தோன்றாமையின்; பிறவும் அன்ன.

முப்பத்திரண்டாவன : நகை முதலானவற்றிற் கேதுவாம் எள்ளல் முதலாக விளையாட்டீறாக முன்னெடுத் தோதப்படுகின்றன. அவற்றைக் குறித்த புறனாவன சுவையும் குறிப்பும். வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், உருத்திரம், நகை, நடுவுநிலைமை என்றும், வீரக்குறிப்பு, அச்சக்குறிப்பு, இழிப்புக் குறிப்பு, வியப்புக் குறிப்பு, உருத்திரக் குறிப்பு, நகைக் குறிப்பு, நடுவுநிலைமைக் குறிப்பு என்றும் சொல்லப்பட்ட பதினெட்டினும், நடுவுநிலைமையும் அதன் குறிப்பும் ஒழித்து ஏனைய பதினாறுமாம்.

வியப்பெனினும் அற்புதமெனினும் ஒக்கும். காமமெனினுஞ் சிருங்காரமெனினும் ஒக்கும். அவலம் எனினும் கருணையெனினும் ஒக்கும். உருத்திரம் எனினும் வெகுளியெனினும் ஒக்கும். நடுவுநிலைமை எனினும் மத்திமம் எனினும் சாந்தம் எனினும் ஒக்கும்.[2] வீரம் என்பது மாற்றாரைக்குறித்து நிகழ்வது. அச்சம் என்பது அஞ்சத்தகுவன கண்டவழி நிகழ்வது. இழிப்பென்பது இழிக்கத்தக்கன கண்டுழி நிகழ்வது. வியப்பென்பது வியக்கத்தக்கன கண்டுழி நிகழ்வது. காமம் என்பது இன்ப நிகழ்ச்சியான் நிகழ்வது. அவலம் என்பது இழவுபற்றிப் பிறப்பது. உருத்திரம் என்பது அவமதிப்பாற் பிறப்பது. நகையென்பது இகழ்ச்சி முதலாயினவற்றாற் பிறப்பது. நடுவுநிலைமை யென்பது யாதொன்றானும் விகாரப்படாமை.

அவை இற்றாக, மத்திம[3] மென்பதனை ஈண்டொழித்தது என்னையெனின்,

" மத்திமம் என்பது மாசறத் தெரியிற்
சொல்லப் பட்ட எல்லாச் சுவையொடும்
புல்லா தாகிய பொலிவிற் றென்ப."

---

1. சில தோன்றினும் நகைக்குரிய காரணங்களும் பிறவும் ஆகிய யாவும் தோன்றா. நல்லோர் அவையில் இவை முழுதும் தோன்றா; விளையாட்டிடத்தே தோன்றும் என்பதாம்.
2. வியப்பு, காமம், அவலம், வெகுளி, நடுவுநிலைமை - இவை தமிழ்ச் சொற்கள்; அற்புதம், சிருங்காரம், கருணை, உருத்திரம், மத்திமம், சாந்தம் - இவை ஆரியச் சொற்கள்.
3. மத்திமம் - நடுவுநிலைமையும் நடுவுநிலைக்குறிப்பும்

" நயனுடை மரபின் இதன்பயம் யாதெனிற்
சேர்த்தி யோர்க்குஞ் சார்ந்துபடு வோர்க்கும்[1]
ஒப்ப நிற்கும் நிலையிற் றென்ப."

" உய்ப்போ[2] ரிதனை யாரெனின் மிக்கது
பயக்குந் தாபதர் சாரணர் சமணர்[3]
கயக்கறு முனிவர் அறிவரொடு பிறருங்
காமம் வெகுளி மயக்கம் நீங்கிய
வாய்மை யாளர் வகுத்தனர் பிறரும்
அச்சுவை யெட்டும் அவர்க்கில ஆதலின்
அச்சுவை ஒருதலை ஆதலின் அதனை
மெய்த்தலைப் படுக்கஇதன் மிகவறிந் தோரே"

என்பது செயிற்றியச் சூத்திரம். இதனானே இது வழக்கிலக்கணம் அன்று என உணர்க.

இனி, சுவை என்பது காணப்படு பொருளாற் காண்போரகத்தின்[4] வருவதோர் விகாரம்.[5]

" இருவகை நிலத்தின் இயல்வது சுவையே"

என்றும்,

" நின்ற சுவையே ....
ஒன்றிய நிகழ்ச்சி சத்துவம் என்ப"

என்றும்,

" சத்துவம் என்பது சாற்றுங் காலை
மெய்ம்மயிர் குளிர்த்தல் கண்ணீர் வார்தல்
நடுக்கங் கடுத்தல் வியர்த்தல் தேற்றம்
கொடுங்குரற் சிதைவொடு நிரல்பட வந்த
பத்தென மொழிப சத்துவந்[6] தானே"

என்றும் சார்பொருள்[7] உரைப்ப.

அவை வருமாறு:

பேயானும் புலியானும் கண்டானொருவன் அஞ்சியவழி மயக்கமுங் கரத்தலும்[8] நடுக்கமும் வியர்ப்பும் உளவாகின்றே. அவற்றுள் அச்சத்திற் கேதுவாகிய புலியும் பேயும் சுவைப்படுபொருள். அவற்றைக் கண்ட

1. சேர்த்தியோர் - வெளிப்படுத்துவோர். சார்ந்துபடுவோர் - வெளிப்படுத்தப்படுவோர்.
2. உய்ப்போர் - வெளிப்படுப்போர்
3. சமணர் - சமணத்துறவியர்
4. காண்போர் உள்ளத்தில்
5. விகாரம் - வேறுபாடு
6. சத்துவம் - மெய்ப்பாடு
7. சார்பொருள் - மெய்ப்பாடு தோன்றுதற்குச் சார்பான பொருள். அதாவது மெய்ப்பாடு புறத்தே புலப்படுதற்குச் சார்பான பொருள்.
8. கரத்தல் - மறைதல்

காலந்தொட்டு நீங்காது நின்ற அச்சம் சுவை. அதன்கண் மயக்கமும் கரத்தலும் குறிப்பு. நடுக்கமும் வெயர்ப்புஞ் சத்துவம். இவற்றுள் நடுக்கமும் வியர்ப்பும் பிறர்க்கும் புலனாவது என்று கொள்க; ஏனைய மனநிகழ்ச்சி. பிறவுமன்ன. இவற்றின் பிரிவை நாடகநூலிற் காண்க. (1)

பேராசிரியர்

249. பண்ணைத் தோன்றிய .... கென்ப

என்பது சூத்திரம். இவ் வோத்து என்ன பெயர்த்தோ வெனின், மெய்ப்பாட்டியலென்னும் பெயர்த்து. மெய்ப்பாடென்பன சில பொருள்[1] உணர்த்தினமையின் அப் பெயர்த்தாயிற்று. இதனானே ஒத்து நுதலியதூஉம் மெய்ப்பாடு உணர்த்துதலென்பது பெற்றாம். மெய்ப்பாடென்பது, பொருட்பாடு; அஃதாவது, உலகத்தார் உள்ளநிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோ ராற்றான் வெளிப்படுதல். அதனது இலக்கணங்கூறிய ஒத்தும் ஆகுபெயரான் மெய்ப்பாட்டியலென்றாயிற்று.[2] மேலோத்தினோடு இவ் வோத்தினிடை இயைபென்னையோ வெனின், மேலை ஒத்துகளுட் கூறப்படும் ஒழுகலாற்றிற்கும், 'காட்ட லாகாப் பொருள' (247) என்றவற்றிற்கும் எல்லாம் பொதுவாகிய மனக்குறிப்பு இவையாகலின் இவற்றை வேறுகொண்டு ஓரினமாக்கி மெய்ப்பாட்டியலென வேறோர் ஓத்தாக வைத்தமையானே எல்லாவற்றோடும் இயைபுடைத்தென்பது.

இதன் தலைச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின் அம் மெய்ப்பாடு பிறர் வேண்டுமாற்றான் இத்துணைப் பகுதிப்படு மென்றுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும் - முடியுடை வேந்தருங் குறுநில மன்னரு முதலாயினோர் நாடக மகளிர் ஆடலும் பாடலுங் கண்டுங் கேட்டுங் காமநுகரும் இன்ப விளையாட்டினுள் தோன்றிய முப்பத்திரண்டு பொருளும், கண்ணிய புறனே நானான்கு என்ப - அவை கருதிய பொருட்பகுதி பதினாறாகி அடங்கும் நாடக நூலாசிரியர்க்கு என்றவாறு.

அது முதனூலை[3] நோக்கிக் கூறியவாறு போலும்.

முப்பத்திரண்டாவன யாவையெனின், ஒன்பது சுவையெனப்பட்ட வற்றுள் உருத்திரமொழித்து ஒழிந்த எட்டனையுங் கூறுங்காற் சுவைக்கப்

1. மெய்ப்பாடென்பன சிலபொருள் - மெய்ப்பாடு என்று சொல்லப்படுவனவாகிய சில பொருள்.

2. மெய்ப்பாட்டியல் - மெய்ப்பாட்டின் இலக்கணம். மெய்ப்பாட்டின் இலக்கணம் கூறும் சூத்திரத் தொகுதிகளாகிய பகுதிக்கு மெய்ப்பாட்டியல் எனும் பெயர் வந்தது பெயராம்.

3. முதல்நூல் - அகத்தியம். அது இயல் இசை நாடகம் எனும் மூன்றும் பற்றியது எனக் கொண்டு இவ்வாறு கூறினார்.

படும் பொருளும், அதனை நுகர்ந்த பொறியுணர்வும், அது மனத்துப்பட்டவழி உள்ளத்து நிகழுங் குறிப்பும், குறிப்புகள் பிறந்த உள்ளத்தாற் கண்ணீரரும்பலும் மெய்ம்மயிர் சிலிர்த்தலு முதலாக உடம்பின்கண் வரும் வேறுபாடாகிய சத்துவங்களுமென நான்காக்கி, அச் சுவை யெட்டோடுங் கூட்டி, ஒன்று நான்கு செய்து உறழ, முப்பத்திரண்டாமென்பது. எனவே, சுவைப்பொருளும் சுவையுணர்வும் குறிப்பும் விறலுமென நான்காயின. விறலெனினுஞ் சத்துவமெனினும் ஒக்கும்.

சுவைப்பொருளென்பன : அறுசுவைக்கு முதலாகிய வேம்பும், கடுவும், உப்பும், புளியும், (பாக்கும்), கரும்பும் போல்வன; அவையாமாறு: நகைச்சுவைக்குப் பொருளாவன ஆரியர் கூறுந் தமிழும், குருடரும் முடவருஞ் செல்லுஞ் செலவும், பித்தரும் களியரும் சுற்றத்தாரை இகழ்ந்தாரும் குழவி கூறும் மழலையும் போல்வன.[1]

அச்சப் பொருளாவன:

"வள்ளெயிற் றரிமா[2] வாள்வரி வேங்கை
முள்ளெயிற் றரவே முழங்கழற் செந்தீ
யீற்றா[3] மதமா[4] வேக பாதங்
கூற்றங் கோண்மா குன்றுறை யசுணம்" (கலி. ப. 898)

என்று சொல்லப்பட்டன போல்வன. இவற்றைச் சுவை கோட லென்பதென்னையெனின், நகையும் அச்சமு முதலாகிய உணர்வு முற்காலத்து உலகியலான் அறிவானொருவன் அவற்றுக்கு ஏதுவாகிய பொருள்பிற கண்டவழித் தோன்றிய பொறியுணர்வுகள் அவ்வச் சுவை யெனப்படும். வேம்பென்னும் பொருளும் நாவென் பொறியுந் தலைப்பெய்துழி யல்லது கைப்புச்சுவை பிறவாதது போல, அப் பொருள் கண்டவழி யல்லது நகையும் அச்சமும் தோன்றா. ஒழிந்த காம முதலியனவும் அன்ன. இக் கருத்தேபற்றிப் பிற்காலத்து நாடகநூல் செய்த ஆசிரியரும்,

"இருவகை நிலத்தி னியல்வது சுவையே" (செயிற்றியம்)

என்றாரென்பது.

இனி, இருவகை நிலனென்பன உய்ப்போன்[5] செய்தது காண்போர்க் கெய்துத லன்றோவெனின், சுவையென்பது ஒப்பினானாய பெயராகலான்

---

1. பித்தர், களியர் நடையும் பேச்சும் நகைக்குரியன. சுற்றத்தாரை இகழ்ந்துரைப்பார் பேச்சும் அதுவே.

2. அரிமா - சிங்கம்; 3. ஈன்ற அணிய பசு; 4. யானை

5. உய்ப்போன் - இது துய்ப்போன் என்றிருத்தல் வேண்டும். துய்ப்போன் செய்தது காண்போர்க்கு எய்துதல் - துய்ப்பவன் செய்த மெய்ப்பாடு காண்பவனுக்குத் தோன்றுதல். அதனால் இருவகை நிலன் என்பது துய்ப்போன் காண்போன் எனும் இருவரிடம் என்பர். இதை மறுத்துப் பேராசிரியர் சுவைப்பொருளும் சுவைப்போனுமே இருவகை நிலன் என்றார்.

வேம்பு சுவைத்தவன் அறிந்த கைப்பறிவினை நாவுணர்வினாற் பிறனுணரான், இவன் கைப்புச் சுவைத்தானெனக் கண்ணுணர்வினான் அறிவதன்றி; அதுபோல அச்சத்துக்கு ஏதுவாகிய ஒரு பொருள் கண்டு அஞ்சி ஓடி வருகின்றா னொருவனை மற்றொருவன் கண்டவழி இவன் வள்ளெயிற் றரிமா முதலாயின கண்டு அஞ்சினானென் றறிவதல்லது வள்ளெயிற் றரிமாவினைத் தான் காண்டல் வேண்டுவதன்று; தான் கண்டானாயின் அதுவுஞ் சுவையெனவேபடும். ஆகவே அஞ்சினானைக் கண்டு நகுதலுங் கருணை செய்தலுங் கண்டோர்க்குப் பிறப்பதன்றி அச்சம் பிறவாதாகலான் உய்ப்போன் செய்தது காண்போனுய்த்த அறிவின் பெற்றியாற் செல்லாதாகலின் இருவகை நிலமெனப்படுவன சுவைப்பொருளுஞ் சுவைத்தோனுமென இருநிலத்தும் நிகழுமென்பதே பொருளாதல் வேண்டுமென்பது.

குறிப்பென்பது, கைப்பின் சுவையுணர்வு பிறந்தவழி வெறுப்பு முதலாயின உள்ள நிகழ்ச்சிபோல அஞ்சுதக்கன கண்டவழி அதனை நோக்காது வெறுக்கும் உள்ள நிகழ்ச்சி. விறலென்பன, அவ் வுள்ள நிகழ்ச்சி பிறந்தவழி வேம்பு தின்றார்க்குத் தலைநடுங்குவதுபோலத் தாமே தோன்றும் நடுக்க[1] முதலாயின. இவ்வகையால் இந் நான்கினையும் எட்டோடும் உறழவே முப்பத்திரண்டாயின.

இனி, அவை பதினாறாயினவா றென்னையெனின், வேம்பு முதலாயின பொருளும் அதனோடு நா முதலாயின பொறியும் வேறுவேறு நின்றவழிச் சுவையென்று சொல்வதே பிறவாமையானும் அவ் விரண்டுங் கூடியவழிச் சுவையென்பது பிறத்தலானும் அவை பதினாறும் எட்டெனப்படும்; இனிக் குறிப்புஞ் சத்துவமென்பனவும் உள்ளநிகழ்ச்சியும் உடம்பின் வேறுபாடு மென்பராகலின், அவ் வுள்ளநிகழ்ச்சியை வெளிப் படுப்பது சத்துவமாகலின் அவை பதினாறும் எட்டா யடங்குமாகலின், அவை ஈரெட்டுப் பதினாறாகுமென்பது. மற்றிவை[2] பண்ணைத் தோன்றுவனவாயின், இது பொருளோத்தினுள் ஆராய்வதென்னை? நாடக வழக்கத்தானே ஒருவன் செய்ததனை ஒருவன் வழக்கினின்றும் வாங்கிக்கொண்டு பின்னர்ச் செய்கின்றதாகலானும் வழக்கெனப்படா தாகலானும் ஈண்டு ஆராய்வது 'பிறிதெடுத் துரைத்தல்' என்னுங் குற்றமாமென்பது கடா. அதுவன்றே இச் சூத்திரம் 'பிறன்கோட் கூறல்' (665) என்னும் உத்திவகையாற் கூறியதுதானே மரபாயிற்றென்பது. (1)

---

1. தாமே தோன்றும் நடுக்கம் - அஞ்சுதக்கன கண்டவழித் தாமே தோன்றும் நடுக்கம் என்க.

2. 'மற்றிவை ---------- என்னை?' இது வினா. நாடக வழக்கத்தானே ------ என்பது கடா' - இது அவ் வினாவுக்கு விளக்கம். 'அதுவன்றே ----- -மரபாயிற்று' - இது வினாவுக்கு விடை. இங்கே கூறப்படும் மெய்ப்பாடு என்பது நாடக வழக்குக்குரியது; அதனால் உலக வழக்கில் வரும் உணர்வுகளை - மெய்ப்பாடுகளை நாடக நடிகன் தன் மனத்து வாங்கிக்கொண்டு நடித்துக் காட்டுவது. அதனால் அது உலகவழக்காகாது. எனவே, உலகவழக்கல்லாததும் நாடகத்துக்குரியதும் ஆகிய மெய்ப்பாட்டிலக்கணத்தைப் பொருளதிகாரத்தில் ஆராய்வது ஏன்? நாடக இலக்கண நூலில் அன்றோ ஆராய்தல் வேண்டும்? என்பது வினா.

சிவலிங்கனார்

பண்ணைத் தோன்றிய .... கென்ப.

மெய்ப்பாட்டியல் என்பது மெய்யின்கண் புலப்படும் உணர்ச்சி வெளிப்பாட்டின் இயல்பு கூறுவதாம். ஆசிரியர் தொல்காப்பியர் அகத்திணை புறத்திணை யிலக்கணங்கள் கூறியவர் அவை நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் நிகழும்போது அவற்றை நிகழ்த்தும் மக்களுக்கும் அந் நிகழ்ச்சிகளை நாடகத்தில் காணும் மக்களுக்கும் வெளிப்படும் மெய்ப்பாடுகளைக் கூறத் தொடங்கினார். அம் மெய்ப்பாடுகள் உலகமக்களிடை நிகழ்வனவே யாயினும் பிறரை எள்ளல் காரணமாக நகை தோன்றாது சான்றோரிடத்து ஆதலின் மெய்ப்பாடுகள் அனைத்துமே சான்றோரிடத்தும் மற்றையோரிடத்தும் நிகழும் என்றல் அமையாது. அதனால் அனைத்து மெய்ப்பாடுகளும் நாடக வழக்கில் அமைத்தனர் முன்னோர். நாடகம் ஒரு விளையாட்டு. விளையாட்டுக் குழுவிடமே அனைத்து மெய்ப்பாடுகளும் அமையும். அதனால் மெய்ப்பாடுகள் விளையாட்டிடத்துத் தோன்றும் என நாடகநூலார் இலக்கணம் கூறினர்.

ஒரு மெய்ப்பாடு தோன்ற நான்கு நிலைக்களன்கள் உண்டு. பொருள், உணர்வு, குறிப்பு, அதன் வெளிப்பாடு என்பன அவை. உதாரணமாகப் புலி என்பது பொருள்; அதைக் காணும் கண்உணர்வு என்பது உணர்வு; அவ் வுணர்வு மனத்தின்கண் நிகழும்போது எழும் அச்சம் குறிப்பு; அவ் வச்சக் குறிப்பை வெளிப்படுத்திக் காட்டுவது உடல் நடுக்கம். எனவே அச்சம் என்னும் மெய்ப்பாடு தோன்ற அந் நான்கும் நிலைக்களனாம் என்பது கொள்ளப்படும். இப்படியே எல்லா மெய்ப்பாடுகளுக்கும் கொள்க.

புலிவிளையாட்டு ஆடுவார் அந் நான்கையும் நிலைக்களனாகக் கொண்டே காண்பார்க்கு அச்சம் என்னும் உணர்வை (சுவையை) வெளிப்படுத்திக் காட்டுவர். (இப்படியே பிறவும் காட்டுவர்.) அதனால் தான் நாடக நூலார் மெய்ப்பாடுகளை நான்கு பொருள்களின் அடிப்படையில் தோன்றும் என்றும் மெய்ப்பாடுகள் எட்டு ஆதலின் அவை நந்நான்காக முப்பத்திரண்டு நிலைக்களன்களை உடையன என்றும் விரிவாகக் கூறினர். அவரே பொருளுணர்வைப் பொருளில் அடக்கியும், மனநிகழ்ச்சியை வெளிப்பாட்டில் அடக்கியும், பொருளும் மெய்ப்பாடும் என இரண்டாக்கி எட்டு மெய்ப்பாட்டால் உறழ்ந்து பதினாறாம் மெய்ப்பாடுகள் என்றும் கூறினர். நான்கு நிலைக்களன்களின் முடிவு உடம்பில் தோன்று மெய்ப்பாடே யாதலின் அம் மெய்ப்பாடுகளை மட்டும் விதந்து நகைமுதலாக மெய்ப்பாடு எட்டு என்றும் கூறினர்.

ஆசிரியர் தொல்காப்பியர் தாம் நாடகவழக்கையும் தழுவியே இலக்கணம் செய்தாராதலின் நாடக நூலார் கூறியதையே முதலில் கூறி மெய்ப்பாட்டிலக்கணம் செய்வாராயினர்.

"பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்
கண்ணிய புறனே நானான் கென்ப"

என்றும்,

"நாலிரண் டாகும் பாலுமா ருண்டே"

என்றும் கூறினார்.

'பண்ணை .... என்ப' என்பதன் பொருளாவது விளையாட்டு மாந்தரிடமாகத் தோன்றிய நகை முதலிய எட்டுவகை மெய்ப்பாடுகளும் பொருள், உணர்வு, மனக்குறிப்பு, வெளிப்பாடு எனும் நான்கு நிலைக்களன்களைக் கொண்டு வரும்போது ஆகும் முப்பத்திரண்டு மெய்ப்பாடுகளும், உணர்வும் மனக்குறிப்பும் ஆகிய இரண்டு நிலைக்களன்கள் காண்போர்க்கு வெளிப்படாமையின் அவை தவிர அவர்க்கு எளிதில் புறம்பாக-வெளிப்படையாகக் காணப்படுவன பொருளும் குறிப்புவெளிப்பாடுமே யாகலின் அவ் விரண்டும் எட்டு மெய்ப்பாடுகளோடு உறழப் பதினாறாம் என்றபடி.

'கண்ணிய புறன்' என்பதற்குக் கருதிக்கொள்ளும்படி புறம்பே (வெளிப்படையாகத்) தோன்றும் மெய்ப்பாடுகளின் நிலைக்களன் எனப் பொருள் கொள்க. புறம்பே தோன்றுவன பொருளும் உடம்பின் மெய்ப்பாடுமேயாம்.

246. நாலிரண் டாகும் பாலுமா ருண்டே. (2)

இலக்குவனார்

250. They may be calculated into eight also.

இளம்பூரணர்

246. நாலிரண்.............................. ருண்டே.

என்-னின், மேலதற்கோர் புறனடை..

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட பதினாறு பொருளும் எட்டெடன வரும் பக்கமு முண்டு என்றவாறு.

அவையாவன குறிப்புப் பதினெட்டனையுஞ் சுவையுள் அடக்கிச் சுவை யெட்டுமாக்கி நிகழ்தல். (2)

பேராசிரியர்

250. நாலிரண் .... ருண்டே.

இது, *மெய்ப்பாட்டின் அடக்கம் கூறுகின்றது.*

(இ-ள்) முப்பத்திரண்டு மெய்ப்பாடும் பதினாறாதலேயன்றி எட்டாதலும் உண்டு என்றவாறு.

அவை : வீரம், அச்சம், வியப்பு, இழிபு, காமம், அவலம், நகை, நடுவுநிலை யென்பன.[1] இவற்றின் விகாரமாகிய சத்துவங்களெட்டனையும் இவற்றுளடக்கி எட்டாக்கிக் கூறியவாறிதுவென்பது. நாலிரண்டாதலு முண்டெடன்னாது பாலென்றதனான் எட்டாதலேயன்றி அவை ஒன்பதாதற்குப் பகுதியுமுடைய வென்பது; என்னை?

"உருத்திரம் தன்னோ டொன்ப தாகும்"

என்பவாகலின், உம்மை, இறந்தது தழீஇயிற் றாதலான் இவையும் பண்ணைத் தோன்றிய எண்ணான் கெனப்பட்டன. அவற்றுப் பகுதியென இதுவும் பிறன்கோட் கூறியவாறாயிற்று. மற்றிவற்றது பயனென்னை யெனின், பொருளதிகாரத்துக் கூறுகின்ற வழக்கியலே அவையுமென்பது கூறி, அச் சுவைக்கு ஏதுவாய பொருளினை அரங்கினுள் நிறீஇ, அது கண்டு குறிப்புஞ் சத்துவமும் நிகழ்த்துகின்ற கூத்தனையும் அரங்கிற்றந்து, பின்னர் அவையரங்கினோர் அவன் செய்கின்ற மெய்ப்பாட்டினை உணர்வாராக வருகின்ற முறைமையெல்லாம் நாடக வழக்கிற்கே உரிய பகுதியெனவும், அப் பகுதியெல்லாம் ஈண்டுணர்த்தல் வேண்டுவதன் றெனவுங் கூறியவாறு. இங்ஙனம் அடங்குமென்பது நாடக நூலுள்ளுஞ் சொல்லுபவோ வெனின், சொல்லுபவாகலினன்றே அதன்வழி நூல் செய்த ஆசிரியர் செயிற்றியனார் சுவையுணர்வும் பொருளும் ஒன்றாக வடக்கிச் சுவையுங் குறிப்புஞ் சத்துவமுமென மூன்றாக்கி வேறுவேறு இலக்கணங் கூறி அவற்றை,

"எண்ணிய மூன்று[2] மொருங்கு பெறுமென
நுண்ணிதி னுணர்ந்தோர் நுவன்றன ரென்ப"

என்றோதினா ராயிற்றென்பது. (2)

சிவலிங்கனார்

நாலிரண்டு ------------------------- உண்டே.

(இ-ள்) மேற்கூறிய முப்பத்திரண்டும் பதினாறும் ஆகியவற்றின் மனக்குறிப்பின் வெளிப்பாடே அதாவது உடம்பின் மூலம் வெளிப்படும் வேறுபாடே மெய்ப்பாடு எனப் பெயர் பெறுதலின் நிலைக்களன்களை விட்டு அவற்றை மட்டுமே கூறப்புகின் அவை எட்டாகும் பகுதியும் உண்டு என்றவாறாம்.

எட்டாம்பாலும் உண்டு என்னாது நான்கும் இரண்டும் என இரண்டெண்களால் தொகை கூறியதனால், அவ் வெட்டும் தன்கண் தோன்றுவனவும் பிறன்கண் தோன்றுவனவும் என இருபிரிவுடையன

---

1. வெகுளியைப் பேராசிரியர் மிகையால் கொள்ள இளம்பூரணர் நடுநிலையை விட்டுச் சென்றார் ஆசிரியர் எனக் கொண்டு காரணமும் கூறினார். காண்க.

2. மூன்று - சுவை, குறிப்பு, சத்துவம்

என்க. எட்டாவன நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்பன. அவற்றுள் நகை, அழுகை, இளிவரல், மருட்கை என்னும் நான்கும் தன்கண்ணும் பிறன்கண்ணும் தோன்றுவன. அச்சம், வெகுளி, உவகை என்னும் மூன்றும் பிறன்கண் தோன்றுவன. பெருமிதம் என்பதொன்றும் தன்கண் தோன்றுவது.

247. நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டாம்[1] மெய்ப்பா டென்ப. (3)

இலக்குவனார்

251. They say laughter, weeping; despisedness, wonder, fear, fortitude, anger and delight are the eight *meyppādus*.

பி.இ.நா.

இ.வி.578

நகையே .... அப்பா லெட்டே.

இளம்பூரணர்

247. நகையே அழுகை .... டென்ப.

என்-னின், மெய்ப்பாடு ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) நகை முதலாகச் சொல்லப்பட்ட எட்டும் மெய்ப்பாடு என்று சொல்லுவர் என்றவாறு.

மெய்ப்பாடென்பது யாதோவென்னின்,

"உய்ப்போன் செய்தது காண்போர்க் கெய்துதல்
மெய்ப்பா டென்ப மெய்யுணர்ந் தோரே"

எனச் செயிற்றியனார் ஓதுதலின்.

அச்சமுற்றான்மாட்டு நிகழும் அச்சம் அவன்மாட்டுச் சத்துவத்தினாற் புறப்பட்டுக் காண்போர்க்குப் புலனாகுந்தன்மை மெய்ப்பாடெனக் கொள்ளப் படும். மெய்யின்கண் தோன்றுதலின் மெய்ப்பாடாயிற்று. அஃதேல், இவ் விலக்கணங் கூத்தினுட் பயன்படல் உண்டாதலின் ஈண்டு வேண்டா வெனின், ஈண்டுஞ் செய்யுட் செய்யுங்காற் சுவைபடச் செய்ய வேண்டுதலின் ஈண்டுங் கூறவேண்டுமென்க.

---

1. எட்டே - பாடம்

" உய்த்துணர் வின்றித் தலைவரு பொருளின்
மெய்ப்பட முடிவது மெய்ப்பா டாகும்"[1] (செய்யுளியல், 196)

என இவ் வாசிரியர் மெய்ப்பாடுஞ் செய்யுளுறுப்பென ஓதினமை உணர்க.

நகை என்பது இகழ்ச்சியிற் பிறப்பது. அழுகை என்பது அவலத்திற் பிறப்பது. இளிவரல் இழிப்பிற் பிறப்பது. மருட்கை வியப்பிற் பிறப்பது. அச்சம் அஞ்சத்தகுவனவற்றாற் பிறப்பது. பெருமிதம் வீரத்திற் பிறப்பது. வெகுளி வெறுக்கத்தக்கனவற்றாற் பிறப்பது. உவகை சிருங்காரத்திற் பிறப்பது. (3)

பேராசிரியர்

251. நகையே யழுகை .... டென்ப.

இது, பிறர் வேண்டுமாற்றானன்றி இந் நூலுள் இவ்வாறு வேண்டப்படும் மெய்ப்பாடென்பது உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) இச் சொல்லப்பட்ட எட்டும் மெய்ப்பாடென்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

நகையென்பது சிரிப்பு; அது முறுவலித்து நகுதலும், அளவே சிரித்தலும், பெருகச் சிரித்தலுமென மூன்றென்ப. அழுகையென்பது அவலம்; அஃது இருவகைப்படும்; தானே அவலித்தலும், பிறரவலங் கண்டு அவலித்தலுமென; இவற்றுள் ஒன்று கருணையெனவும் ஒன்று அவலமெனவும் பட்டுச் சுவை ஒன்பதாகலு முடையவென்பது. இளிவரலென்பது இழிபு. மருட்கையென்பது வியப்பு; அற்புதமெனினும் அமையும். அச்சமென்பது பயம். பெருமிதமென்பது வீரம். வெகுளியென்பது உருத்திரம். உவகை யென்பது காமமுதலிய மகிழ்ச்சி. இவை அவ் வெட்டுமாவன. இவற்றைச் சுவையெனவுங் குறிப்பெனவும் வழங்கினும் அமையும்.

மற்று நகையை முன்வைத்ததென்னை யெனின், 'பண்ணைத் தோன்றிய வெண்ணான்கு பொருட்கும்' (249) இவையென்னும்[1] இயைபில்லனவல்ல என்றதற்கு விளையாட்டுப் பொருட்டாகிய நகையை முன்வைத்தானென்பது. அதற்கு மறுதலையாகிய அழுகையை அதன்பின் வைத்தான். இளிவரல் அதன்பின் வைத்தான்; அழுகையும் இளிவரலோடு இயைபுடைமையின் தானிளிவந்து பிறிதோர் பொருளை வியக்குமாதலின் இளிவரலின்பின் வியப்பு வைத்தான். வியப்புப்பற்றியும் அச்சம் பிறத்தலின் அச்சத்தை அதன் பின் வைத்தான். அச்சத்திற்கு மறுதலையாகிய வீரத்தை அதன்பின் வைத்தான். அவ் வீரத்தின் பயனாகிப் பிறர்க்கு வரும் வெகுளியை அதன்பின்னே வைத்தான். வெகுளிக்கு மறுதலை யாகலானும்

---

1. பாடலில் சொல்லப்படும் பொருள் உய்த்துணரப்படாமல் தானே உடம்பின் மூலம் வெளிப்படுமாறு முடிவது மெய்ப்பாடாம்.

எல்லாவற்றினும் ஈண்டு ஓதுதற்குச் சிறந்ததாகலானும் முதற்கணோதிய நகைக்கு இயைபுடைத்தாகலானும் உவகையை அவ் வீற்றுக்கண் வைத்தானென்பது.

இவ் வெட்டனுண் முதனின்ற நான்கும் முற்கூறுதற்கும், இறுதிநின்ற நான்கும் பிற்கூறுதற்கும் காரணம் வருகின்ற சூத்திரங்களானும் பெறுதும்.

மற்றிவ் வெட்டனோடுஞ் சமநிலை கூட்டி ஒன்பதென்னாமோ நாடக நூலுட்போல வெனின், அதற்கு ஓர் விகாரமின்மையின் ஈண்டுக் கூறியதில னென்பது; அதற்கு விகாரமுண்டெனின் முன்னை யெட்டனுள்ளுஞ் சார்த்திக் கொள்ளப்படும்; அல்லதூஉம், அஃதுலகியல் நீங்கினார் பெற்றியாகலின், ஈண்டு உலகவழக்கினுட் சொல்லியதில னென்பது. ஒழிந்த எட்டும் உலகியலாகலிற் கூறினான், 'வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலின்' (பாயிரம்) என்று புகுந்தமையினென்பது. அவை எட்டுமாமாறு இனிக் கூறுதும். (3)

248. எள்ளல் இளமை பேதைமை மடனென்று
உள்ளப் பட்ட நகைநான் கென்ப. (4)

இலக்குவனார்

252. They say that laughter has reproach, youth, foolishness and feigned ignorance - these four - as its source.

பி.இ.நா.

இ.வி. 578

எள்ளல் இளமை பேதைமை மடமை - நகை

இளம்பூரணர்

248. எள்ளல் இளமை .... கென்ப.

என்-னின், நகையும் நகைப்பொருளும் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) எள்ளுதற்பொருண்மை முதலாகச் சொல்லப்பட்ட நான்கும் நகைப்பொருளாம் என்றவாறு. எனவே காரணம்பற்றி நகையும் நான்காயின.

"நகையெனப் படுதல் வகையா தெனினே
நகையெனச் செய்வோன் செய்வகை நோக்கு
நகையொடு நல்லவை நனிமகிழ் வதுவே"

என்பதனான் நகைபடுபொருள் கண்டதன்வழி முறுவலோடு வரும் மகிழ்ச்சிப் பொருளாமாறு நகையாவது என்று கொள்க.

" உடனிவை தோன்றும் இடமியா தெனினே
முடவர் செல்லுஞ் செலவின் கண்ணும்
மடவோர் சொல்லுஞ் சொல்லின் கண்ணும்
கவற்சி பெரிதுற் றுரைப்போர் கண்ணும்
பிதற்றிக் கூறும் பித்தர் கண்ணுஞ்
சுற்றத் தோரை இகழ்ச்சிக் கண்ணும்
மற்று மொருவர்கட் பட்டோர் கண்ணும்
குழவி கூறு மழலைக் கண்ணும்
மெலியோன் கூறும் வலியின் கண்ணும்
வலியோன் கூறும் மெலிவின் கண்ணும்
ஒல்லார் மதிக்கும் வனப்பின் கண்ணுங்
கல்லார் கூறுங் கல்விக் கண்ணும்
பெண்பிரி தன்மை யலியின் கண்ணும்
ஆண்பிரி பெண்மைப் பேடிக் கண்ணும்
களியின் கண்ணுங் காவாலி கண்ணும்
தெளிவிலார் ஒழுகும் கடவுளார் கண்ணும்
ஆரியர் கூறுந் தமிழின் கண்ணும்
காரிகை யறியாக் காமுகர் கண்ணும்
கூனர் கண்ணும் குறளர் கண்ணும்
ஊமர் கண்ணுஞ் செவிடர் கண்ணும்
ஆன்ற மரபின் இன்னுழி எல்லாந்
தோன்றும் என்ப துணிந்திசி னோரே"

என இவ்வகையெல்லாம் உளவெனச் செயிற்றியனார் ஓதுதலின். அவை[1] நான்காகியவாறு[2] என்னையெனின் முடவர் செல்லுஞ் செலவு எள்ளுதற் பொருண்மை யாயிற்று; மடவோர் சொல்லுஞ் சொல் மடமைப் பொருண்மையாயிற்று; கவற்சி பெரிதுற்றுரைப்போர் கூற்றுப் பேதைமையாயிற்று; குழவிகூறு மழலை இளமைப் பொருளாயிற்று; ஏனைய வெல்லாம் இவற்றின்பாற் படுதல் காண்க. புணர்ச்சி நிமித்தமாகக் கூற்று நிகழ்ந்துழி வரும் நகை இளமை என்பதனாற் கொள்க. இப் பொருண்மை செயிற்றியத்தில் 'வலியோன் கூறும் மெலிவு' என்பதனாற் கொள்க.

மடம் என்பதற்கும் பேதைமை என்பதற்கும் வேறுபாடு என்னை யெனின், பேதைமை என்பது பொருண்மை யறியாது திரியக் கோடல். மடமையென்பது கேட்டதனை உய்த்துணராது மெய்யாகக் கோடல்.

எள்ளல், இளமை எனப் பொதுப்பட்டு நின்றமையால்[3] தன்மாட்டு நிகழும்வழியுங்[4] கொள்க.

---

1. அவை - மேற்சூத்திரத்துக் கூறப்பட்டவை.
2. நான்காகியவாறு - எள்ளல் இளமை பேதைமை மடன் எனும் நான்கில் அடங்குமாறு.
3. பொதுப்பட்டு நிற்றலாவது யாரிடத்து நிகழ்வது என்ற தின்றி நிற்றல்.
4. பிறர்மாட்டு நிகழ்வதே யன்றித் தன்மாட்டு நிகழும் வழியும்.

(உ-ம்) “நகையா கின்றே தோழி”
என்னும் நெடுந்தொகைப் பாட்டினுள்,

“தண்துறை ஊரன் திண்தார் அகலம்
வதுவை நாளணிப் புதுவோர்ப் புணரிய
பரிவொடு வரூஉம் பாணன் தெருவிற்
புனிற்றாப் பாய்ந்தெனக் கலங்கி யாழிட்
டெம்மனைப் புகுதந் தோனே அதுகண்டு
மெய்ம்மலி உவகை மறையினென் எதிர்சென்
றிம்மனை அன்றஃ தும்மனை யென்ற
என்னுந் தன்னும் நோக்கி
மம்மர் நெஞ்சினோன் தொழுதுநின் றதுவே”[1] **(அகம். 56)**

எனக் கூறி ‘நகையாகின்றே தோழி’ என்றமையின் எள்ளல்பற்றி நகை தோன்றியது. எனவும் வந்தவழிக்[2] காண்க.[3]

பேராசிரியர்

252. எள்ள லிளமை .... கென்ப.

இது, நிறுத்த முறையானே நகைக்குறிப்பு நான்கென்ப துணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) எள்ளுதலும், இளமையும், பேதைமையும், மடனுமெனக் கருதப்பட்ட நகை நான்கு என்றவாறு.

இவை நான்கும் பொருளாகிச் சத்துவமுங் குறிப்பும் சுவையு மென்னும் மூன்றற்கும் முதற்கண்ணவாகலான் மூன்றனையும் அடக்கிப் பொருட்பகுதியான் அவற்றைக் கூறுகின்றவாறு இது வென்பது.[4] இவை நான்கும் ஒன்று இரண்டாகி[5] எட்டாதலும் உடைய.

எள்ளலென்பது தான் பிறரை எள்ளி நகுதலும் பிறரால் எள்ளப்பட்டவழித் தான் நகுதலுமென இரண்டாம். இளமையென்பது,

1. பொருள் : ஊரனது மார்பைத் திருமண நாளணியுடன் புதிய மகளிரைப் புணர்ந்த இரக்கமுடன் வரும் பாணனானவன் புனிற்றாப் பாய்தலினால் யாழைப் போட்டு விட்டு எம் வீட்டிற் புக்கான்; அது கண்டு உவகையுற்றேனாய் அவன் எதிரே போய் பாணனே! நீ புகவேண்டிய உம் மனை இவ் வீடன்று என்றேன்; உடனே அவன் என்னையும் தன்னையும் பார்த்துக் கலங்கிய நெஞ்சனாய் என்னைத் தொழுது நின்றான். அது எனக்கு நகையாகியது. இது தலைவி தோழிக்குக் கூறியது.
2. வந்தவழி - வந்துள்ள இலக்கியங்களில்
3. எனவும் வந்தவழிக் காண்க - இத் தொடர் என வரும் பிறவும் வந்தவழிக் காண்க என்றிருத்தல் வேண்டும்.
4. நகை என்ற மெய்ப்பாட்டுக்கு எள்ளல் முதலிய நான்கும் அடிப்படைப் பொருள். அவற்றின் காரணமாகச் சத்துவம், குறிப்பு, சுவை என்பன தோன்றும். எனவே நகை என்னும் மெய்ப்பாடு எள்ளல் பொருளாகத் தோன்றும்போது எள்ளற்குரிய சத்துவம் குறிப்பு சுவை என்பனவும் தோன்றும். அதனால் எள்ளல் நகை நான்கு வகையில் தோன்றும். இப்படியே மற்றையனவும். அதனால் நகை பதினாறு வகையில் வரும். அவற்றையடக்கி நகைக்குரிய பொருளடிப்படையில் எள்ளல் முதலிய நான்கையே கூறினார். பிற மெய்ப்பாடுகளும் அன்ன.
5. ஒன்று இரண்டாதல் - தன்னிடம் நிகழ்வது, பிறரிடம் நிகழ்வது என இரண்டாதல்.

தான் இளமையாற் பிறரை நகுதலும் பிறரிளமைகண்டு தான் நகுதலு மென இரண்டு. பேதைமை யென்பது, அறிவின்மை. மடமையென்பது பெரும்பான்மையுங் கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை. இவையுந் தன் பேதைமையா னகுதலும் பிறன் பேதைமையா னகுதலும், தன் மடமையான் நகுதலும் பிறன் மடமையான் நகுதலுமென இவ்விரண்டாம்.

எள்ளலென்பது இகழ்ச்சி.

"எள்ளி நகினும் வரூஉம்" (கலி. 61)

என்பது, தன்கண் நிகழ்ந்த எள்ளல் பொருளாக நகை பிறந்தது.

"நல்லை மன்னென நகூஉப்பெயர்ந் தோளே" (அகம். 248)

என்பது பிறரெள்ளியது பொருளாகத் தன்கண் நகை பிறந்தது; என்னை? தன்மகள் தன்னை மதியாது இகழ்ந்தாளென நக்கவாறு.[1] இது வெகுளிப் பொருளாக நக்கதன்றோ வெனின், அது வீரர்க்கே உரித்தாகல் வேண்டும், இவள் அவளை வெகுண்டு தண்டஞ்செய்வாளல்லள் அதற்கே[2] உவப்பினல்ல தென்பது. அல்லதூஉம்,

"நகுதக் கனரே நாடுமீக் கூறுநர்"[3] (புறம். 72)

என்றாற்போல வீரத்தெழுந்த வெகுளி நகையும் எள்ளல் நகையென்றே அடக்கவேண்டும் ஈண்டென்பது.

"நடுங்குதல் காண்மார் நகைகுறித் தனரே"[4] (கலி. 13)

என்புழித் தன் இளமை பொருளாக நகை பிறந்தது.

"திறனல்ல யாங்கழற யாரை நகுமிம்
மகனல்லான் பெற்ற மகன்" (கலி. 86)

என்பதுமது.

அங்ஙனம் மகன் சிரித்தவழித் தாய்க்கு நகை தோன்றிற்றேல் அது பிறரிளமை பொருளாக நகை தோன்றிற்றாம்.

"நாவொடு நவிலா நகைபடு தீஞ்சொல்" (அகம். 16)

என்பது, பிறரிளமை பொருளாக நகை பிறந்தது.

"நகைநீ கேளாய் தோழி" (அகம். 248)

என்பது, தன் பேதைமை பொருளாக நகை பிறந்தது; என்னை? தான் செய்த தவற்றிற்குத் தாய் தன்னை வெகுண்டது தனக்கு நகையாகக் கொண்டமையின்.

---

1. தாய் நக்கவாறு.
2. அதற்கு - மகள் தன்னை எள்ளியதற்கு.
3. நாட்டில் தம்மை மேம்படுத்திக் கூறிக்கொள்ளும் பகைவர் நகத்தக்கவர்.
4. நின் மெய்ந்நடுக்கத்தைக் காண விளையாட்டைக் குறித்தார்.

"நகையா கின்றே தோழி ....
மம்மர் நெஞ்சினோன் றொழுதுநின் றதுவே" (அகம். 56)

என்பது, பிறன் பேதைமை[1] பொருளாக நக்கது.

"நும்மொடு நக்க வால்வெள் ளெயிறே" (குறுந். 169)

என்பது, தன் மடத்தான் நகை தோன்றிற்று; என்னை? நீயிர் கூறியதனையே மெய்யெனக்கொண்டு மகிழ்ந்து நக்கன மென்றமையின்.

"குறிக்கொண்டு நோக்காமை யல்லா லொருகண்
சிறக்கணித்தாள் போல நகும்" (குறள். 1095)

என்பதும் அது.

"நாம் நகை யுடைய நெஞ்சே............ நம்மொடு
தான்வரு மென்ப தடமென் றோளி" (அகம். 121)

எனப் பிறர்மடம் பொருளாக நகை தோன்றிற்று.[2] பிறவும் அன்ன.

இவ் வோதப்பட்டவற்றுக்கெல்லாம் உவகை உரித்து. உள்ளப்பட்ட நகை நான்கு என்றதனான் உள்ளத்தோடு பிறவாத நகையுமுள; அவை,

"வறிதகத் தெழுந்த வாயன் முறுவலள்"[3] (அகம். 5)

என்றாற்போல வருவனவெனக் கொள்க. (4)

**249. இழிவே இழவே அசைவே வறுமையென
விளிவில் கொள்கை அழுகை நான்கே. (5)**

இலக்குவனார்

253. Weeping has inferiority, loss, suffering and poverty - these four - as its source.

பி.இ.நூ.

இ.வி.578

இளிவே இழவே அசைவே வறுமை ---- அழுகை.

இளம்பூரணர்

249. இழிவே இழவே .... நான்கே.

---

1. தொழுது நின்றது பேதைமை.
2. நெஞ்சே! தன் மடமையால் நம்மொடுதான் (தலைவி) வரும் என்பாள்; சுரத்தின் கொடுமையறியாது வரும் என்பதால் நகையுடையேம் என்பதால் பிறர் மடம்.
3. சிறிது உள்ளே தோன்றிய /உண்மையல்லாத முறுவல் உடையள். வாயல் முறுவல் என்றது உள்ளத்தோடு பொருந்தாதது.

என்-னின், இது அழுகையாமாறும் அதற்குப் பொருளுமுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) இழிவு முதலாகச் சொல்லப்பட்ட நான்கு பொருண்மையும் அழுகைக்குப் பொருளாம் என்றவாறு.

இழிவு என்பது - பிறர் தன்னை யெளியன் ஆக்குதலாற் பிறப்பது.

இழவாவது - உயிரானும் பொருளானும் இழத்தல்.

அசைவென்பது - தளர்ச்சி. அது தன்னிலையிற் றாழ்தல்.

வறுமை என்பது - நல்குரவு.

இவை ஏதுவாக அழுகை பிறக்கும் என்றவாறு.

இதுவுங் தன்மாட் டுற்றதனானும் பிறர்மாட் டுற்றதனானும் பிறக்கும்.

" கவலை கூர்ந்த கருணையது பெயரே
அவல மென்ப அறிந்தோர் அதுதான்
நிலைமை யிழந்து நீங்குதுணை யுடைமை
தலைமை சான்ற தன்னிலை யழிதல்
சிறையணி துயரமொடு செய்கையற் றிருத்தல்
குறைபடு பொருளொடு குறைபா டெய்தல்
சாப மெய்தல் சார்பிழைத்துக் கலங்கல்
காவ லின்றிக் கலக்கமொடு திரிதல்
கடகந் தொட்டகை கயிற்றொடு கோடல்
முடியுடைச் சென்னிபிறர் அடியுறப் பணிதல்
உளைப்பரி பெருங்களி றூர்ந்த சேவடி
தளைத்தி ளைத்தொ லிப்பத் தளர்ந்தவை
நிறங்கிளர் அகல நீறொடு சேர்த்தல்
மறங்கிளர் கயவர் மனந்தவப் புடைத்தல்
கொலைக்களங் கோட்டங் கோல்முனைக் கவற்சி
அலைக்கண் மாறா அழுகுரல் அரவம்
இன்னோர் அன்னவை இயற்பட நாடித்
துன்னினர் உணர்க துணிவறிந் தோரே."

" இதன்பயம் இவ்வழி நோக்கி
அசைந்தனர் ஆகி அழுத லென்ப"

என்பன, செயிற்றிய மாகலின். இவையெல்லாம் இந் நான்கினுள்[2] அடங்குமாறு அறிந்துகொள்க. இதற்குச் செய்யுள்:

" ஐயோ எனின்யான் புலியஞ் சுவலே
அணைத்தனன் கொளினே அகன்மார் பெடுக்க வல்லேன்

---

1. இந் நான்கு - இழிவு முதலிய நான்கு

என்போற் பெருவிதுப் புறுக நின்னை
இன்னா துற்ற அறனில் கூற்றே
நிரைவளை முன்கை பற்றி
வரைநிழற் சேர்க நடத்திசிற் சிறிதே."[1] (புறம். 255)

இது இழிவுபற்றி வந்த அழுகை.

ஏனையவும் வந்தவழிக் கண்டுகொள்க.

பேராசிரியர்

253. இளிவே யிழவே .... நான்கே.

இது, முறையானே அழுகையென்னுஞ் சுவையினைப் பொருள் பற்றி உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) இளிவும் இழத்தலும் அசைதலும் வறுமையுமென இந் நான்கு பொருள்பற்றித் தோன்றும் அவலம் என்றவாறு.

இளிவென்பது, பிறரான் இகழப்பட்டு எளியனாதல். இழவென்பது, தந்தையுந் தாயு முதலாகிய சுற்றத்தாரையும் இன்பம் பயக்கும் நுகர்ச்சி முதலாயவற்றையும் இழத்தல். அசைவென்பது, பண்டை நிலைமை கெட்டு வேறொருவாறாகி வருந்துதல். வறுமையென்பது, போகந்துய்க்கப் பெறாத பற்றுள்ளம். இவை நான்குந் தன்கண் தோன்றினும் பிறன்கண் தோன்றினும் அவலமாமென்பது; எனவே, இவையும் எட்டாயின. விளிவில் கொள்கை - கேடில் கொள்கை; அங்ஙனங் கூறிய மிகையானே அழுகைக் கண்ணீர்போல உவகைக் கண்ணீர் வீழ்தலும் உண்டு; அதனையும் அழுகைப்பாற் சார்த்தி உணரப்படும்.

"எழுதெழில் சிதைய வழுதன ளேங்கி
வடித்தென வுருத்த தித்திப் பல்லூழ்
நொடித்தெனச் சிவந்த மெல்விரற் றிருகுபு
கூர்நுதி மழுங்கிய வெயிற்ற
ஊர்முழுது நுவலுநிற் காணிய சென்மே"[2] (அகம். 176)

என்பது, பரத்தையை நீ யெள்ளினையென்று அழுதுவருகின்றாளென்று தலைமகற்குச் சொல்லியதாகலின் இது தன்கட் டோன்றிய இளிவரல் பொருளாக அவலச்சுவை பிறந்தது.

1. பொருள் : புண்பட்டு இறந்து கிடக்கும் கணவன் உடலைத் தழுவி மனைவி கூறியது. ஐயோ எனக் கூவியழ நினைத்தால் அவ் வொலி கேட்டுப் புலிவரும் என அஞ்சுகிறேன்; அணைத்து எடுத்துச் செல்லலாம் என்றால் நின் அகன்ற மார்பைத் தழுவி எடுக்க வலியில்லை. அதனால் என் முன்கையைப் பற்றிக் கொண்டு மெல்ல நடப்பாயாக; அம் மரநிழலையடைவோம். இப்படிக் கொடுமை செய்த கூற்றம் என்னைப் போலவே துன்புறுக.

2. பொருள் : எழுதுதற்கேற்ற அழகு சிதையும்படி ஏங்கி அழுதாள். வடித்துச் சிதறினாற் போலவுள்ள தேமலும், பல்கால் நெட்டிமுறித்தலால் சிவந்த மெல்லிய விரலும், வளைந்து கடித்தலால் கூரிய நுனி மழுங்கிய பற்களும் உடைய நின் பரத்தை ஊரெங்கும் நின்னைப்பற்றி யலர் தூற்றப்படும் நின்னைக் காணச் செல்வாள்.

"கயமல ருண்கண்ணாய் காணா யொருவன்" (கலி. 37)

என்னும் பாட்டினுள்,

"தானுற்ற நோயுரைக் கல்லான் பெயருமற் பன்னாளும்"

எனத் தலைமகன் இளிவந்தொழுகுவது காரணமாக,

"சேயேன்மன் யானுந் துயருழப்பேன்"

என்றமையின் இது பிறன்கட் டோன்றிய இளிவரல் பொருளாக அவலச் சுவை பிறந்தது. இது கருணையெனவும் படும்.

"மெழுகு மாப்பிகண் கலுழ்நீ ரானே[1]" (புறம். 249)

என்புழிக் கணவனை யிழந்தாள் அவற்குப் பலிக்கொடை கொடுத்தற்கு மெழுகுகின்றாளைக் கண்ணீரே நீராக மெழுகுகின்றாளென்றமையின் இது தன்கட் டோன்றிய இழவு[2] பற்றிப் பிறந்த அவலச்சுவை யாயிற்று.

"ஐயோ வெனின்யான் புலியஞ் சுவலே" (புறம். 255)

என்பதும் அது.

"பின்னொடு முடித்த மண்ணா முச்சி" (அகம். 73)

என்னும் பாட்டினுள்,

"அணங்குறு கற்பொடு மடங்கொளச் சாஅய்
நின்னோய்த் தலையையு மல்லை தெறுவர
வென்னா குவள்கொ லளிய டானென
வென்னழி பிரங்கு நின்னொ டியானும்"[3] (அகம். 173)

என்றவழித் தலைமகன் பிரிவிற்குத் தோழி படர்கூர்ந்தாளெனச் சொல்லி னமையின் அது பிறன்கட் டோன்றிய இழவுபற்றி அவலம் பிறந்ததாம்.

"துளியிடை மின்னுப்போற் றோன்றி யொருத்தி
யொளியோ டுருவென்னைக் காட்டி யளியளென்
னெஞ்சாறு கொண்டா ளதற்கொண்டுந் துஞ்சேன்"[4] (கலி. 139)

எனத் தன்கட் டோன்றிய அசைவுபற்றி அவலம் பிறந்தது.

---

1. கண்கலுழ் நீரான் ஆப்பி (சாணம்) மெழுகும்.
2. தன் கணவனை இழந்தமையின் தன்கண் தோன்றிய இழவாயிற்று.
3. பொருள் : அருந்ததி போலும் கற்புக் காரணமாக மடமை மிக மெலிந்து நின் நோய் அளவில் வருந்தி நிற்பாயும் அல்லை; அச்சம் வர இனி இவள் என்ன ஆவளோ? அளியள் என்று நின் வருத்தத்துக்கு யான் அழிவதற்கும் நீயும் யானும் (தோழி) தலைவியிடம் கூறியது.
4. மழைத்துளியூடே மின்னல் போல் ஒருத்தி தோன்றி ஒளியோடு தன் உருவை எனக்குக் காட்டி அளியளாய் என் நெஞ்சை வழியாகக் கொண்டு என்னுள் புகுந்தாள்; அதனால் அன்றிருந்து துயிலாதவனானேன்.

"இல்வழங்கு மடமயில் பிணிக்குஞ்
சொல்வலை வேட்டுவ னாயினன் முன்னே"[1] (புறம். 252)

என்பது, பிறன்கட் டோன்றிய அசைவுபற்றிய அவலம் என்னை? அள்ளிலைத் தாளி கொய்யாநின்றான் இதுபொழுது[2] என அவலித்துச் சொல்லினமையின்.

"இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தொ றழூஉந்தன் மகத்துமுக னோக்கி
நீரொடு நிறைந்த வீரிதழ் மழைக்கணென்
மனையோ ளெவ்வ நோக்கி நினைஇ
நிற்படர்ந் திசினே நற்போர்க் குமண"[3] (புறம். 164)

என்புழி, முலைப்பசை காணாது அழுகின்றது குழவியென்பது தன்கட் டோன்றிய வறுமைபற்றி அவலம் பிறந்தது. மகமுகனோக்கி அழுகின்றாள் என் மனைவி யென்பது பிறன்கட் டோன்றிய வறுமையவலம்.

" இன்ன விறலு முளகொ னமக்கென
மூதிற் பெண்டிர் கசிந்தழ நாணிக்
கூற்றுக்கண் ணோடிய வெருவரு பறந்தலை"[4] (புறம். 19)

என்புழி, மூதிற்பெண்டிர் இழவுபற்றி அழுதாராயிற் கூற்றுக் கண்ணோடாதாகலின் அவர் உவந்தனரென்பது பெற்றாம்; அதனானே அஃது உவகைக் கலுழ்ச்சியாமென்பது. (5)

250. மூப்பே பிணியே வருத்த மென்மையொடு
யாப்புற வந்த இளிவரல் நான்கே (6)

இலக்குவனார்

254. Despisedness has agedness, illness, pain and weakness - these four - as its source.

1. மனைக்கண் நடமாடு மயிலாகிய தன் மனைவியைத் தன் சொல்லாகிய வலையால் பிணிக்கும் வேட்டுவனாயினன் இவன் மனையறம் புரிந்த காலத்தில்.

2. இது பொழுது - தாபத நிலையில் உள்ள இப்போது.

3. பொருள் : போர்வல்ல குமணனே! துளை தூர்ந்த பொல்லாத பால் வற்றிய முலையைச் சுவைக்குந்தோறும் பால்பெறாமையின் அழுகின்ற தன் குழந்தையின் முகம் பார்த்து நீர் நிறைந்த கறுத்த கண்களையும் என் மனைவியின் வறுமைத் துன்பத்தையும் பார்த்து அதைக் களைபவன் நீயே என நினைந்து நின்னிடம் வந்தேன்.

4. பொருள்: இத்தகைய ஆற்றலும் நமக்கு உளவோ என மூதிற் பெண்டிர் மனம் உருகி அழ அதனால் எமன் நாணி இரக்கப்பட்ட அச்சம் வரும் போர்க்களம்.

இளம்பூரணர்

250. மூப்பே பிணியே .... நான்கே.

என்-னின், இளிவரலாமாறும் அதற்குப் பொருளும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மூப்பு முதலாகச் சொல்லப்பட்ட நான்கு பொருண்மையும் இளிவரலுக்குப் பொருளாம் என்றவாறு.

இவை நான்குந் தன்மாட்டுத் தோன்றினும் பிறர்மாட்டுத் தோன்றினும் நிகழும்.

(உ-ம்)"தாழாத் தளராத் தலைநடுங்காத் தண்டூன்றா
வீழா இறக்கும் இவள்மாட்டும் - காழிலா
மம்மர்கொள் மாந்தர்க் கணங்காகும் தன்கைக்கோல்
அம்மனைக்கோல் ஆகிய ஞான்று" (நாலடி. 14)

என்றது பிறர்மாட்டு மூப்புப்பற்றி இழிப்புப் பிறந்தது.

பிணியென்பது - பிணியுறவு கண்டு இழித்தல். அதனானே உடம்பு தூயதன்றென இழித்தலுமாம்.

"மாக்கேழ் மடநல்லாய் என்றரற்றுஞ் சான்றவர்
நோக்கார்கொல் நொய்யதோர் துச்சிலை - யாக்கைக்கோர்
ஈச்சிற கன்னதோர் தோலறினும் வேண்டுமே
காக்கை கடிவதோர் கோல்." (நாலடி. 41)

இது, உடம்பினை அருவருத்துக் கூறுதல்.

வருத்தமென்பது - தன்மாட்டும் பிறர்மாட்டும் உளதாகிய வருத்தத்தானும் இழிப்புப் பிறக்கும் என்றவாறு.

(உ-ம்)"செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோய்
உற்றார் அறிவதொன் றன்று."[1] (குறள். 1255)

இது பிறன்வருத்தங் கண்டு இழிப்புப் பிறந்தது.

(உ-ம்) "தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத் திரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத்
தாமிரந் துண்ணு மளவை
ஈன்ம ரோவிவ் வுலகத் தானே."[2] (புறம். 74)

இது தன்மாட்டு வருத்தத்தான் இழிப்புப் பிறந்தது.

---

1. தம்மைவிட்டு அகன்றவர் பின்னே தாமும் செல்லாத பெருந்தன்மையானது காமநோய் உற்றவர் அறியும்படியானது ஒன்று அன்று.

2. சங்கிலியால் பூட்டப்பட்ட நாயைப் போல நம்மைச் சங்கிலிபூட்டித் துயர்ப்படுத்தி இச் சிறையில் இருத்திய உறவல்லாக் கேளிராகிய இப் பகைவர் தரும் உதவியாகிய தண்ணீரை வலியில்லாமல் வயிற்றுப் பசித்தீத் தணியுமாறு இரந்து உண்ணும் அளவுக்கு இவ் வுலகில் அரசர் பெறுவரோ?

மென்மை என்பது - நல்குரவு

“அறஞ்சாரா நல்குர வீன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்”[1] (குறள். 1047)

“இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த
சொற்பிறக்கும் சோர்வு தரும்”[2] (குறள். 1044)

என வரும்.

இன்னும் ‘யாப்புற’ என்பதனான் இழிக்கத்தக்கன பிறவுங் கொள்க. அவை நாற்றத்தானுஞ் தோற்றத்தானும் புல்லியன. இவற்றிற்கெல்லாஞ் செய்யுள் வந்தவழிக் காண்க. (6)

பேராசிரியர்

254. மூப்பே பிணியே .... னான்கே.

இது, மூன்றாம் எண்ணு முறைமைக்க ணின்ற இளிவரல் கூறுகின்றது.

(இ-ள்) மூப்பும் பிணியும் வருத்தமும் மென்மையுமென நான்குபொருள்பற்றிப் பிறக்கும் இளிவரல் என்றவாறு.

வருத்தமெனினும் முயற்சியெனினும் ஒக்கும். ‘யாப்புற வந்த’ என்பது திட்பமுறவந்த என்றவாறு; அங்ஙனங் கூறிய மிகையானே வீர முதலாயின பற்றியும் இளிவரல் பிறக்கும்[3] என்றவாறு. இவையும் முன்னையபோலத் தன்கட் டோன்றுவனவும் பிறன்கட் டோன்றுவனவும்பற்றி எட்டாதலுடைய வென்பது கொள்க.

“தொடித்தலை விழுத்தண் டூன்றி நடுக்குற்
றிருமிடை மிடைந்த சிலசொற்
பெருமூ தாளரே மாகிய வெமக்கே” (புறம். 243)

என்பது, தன்கட் டோன்றிய மூப்புப் பொருளாக இளிவரல் பிறந்தது; என்னை? இளமைக்காலத்துச் செய்தன செய்யமாட்டாது இளிவந்தனம் இக்காலத்து என்றமையின்.[4]

1. அறம் சாராத வறுமை பெற்ற தாயானும் அந்நியன் போல நோக்கப்படும்.

2. இளிவந்த சொல் பிறவாமைக்குக் காரணமாய நல்ல குடிப்பிறந்தாரிடத்தும் நல்குரவானது இளிவந்த சொல் பிறக்கும்படியான சோர்வைத் தரும்.

3. வீரம்பற்றி இளிவரல் பிறத்தலாவது தன் வீர மிகுதியால் பகைவர்கண் உள்ள குறைபாடுகளைக் கண்டு இழிவாகக் கருதுவது.

4. தொடியை உச்சியில் உடைய பெரிய தண்டினை ஊன்றி நடுங்கி இருமல் இடையிடையே மிகுந்த சிலவான சொற்களையுடைய பெரிய முதுமையாளும் தன்மையாகிய எமக்கும் இம் முதுமைக் காலத்தில் இளமையில் நீர்மடுவில் துடும் எனப் பாய்ந்து மணல் அள்ளி வந்த செயலை இப்போது நினைத்து இரக்கம் தோன்றுகிறது என்பது முன்னர் உள்ள செய்தி.

"மாயப் பொய்ம்மொழி சாயினை பயிற்றியெம்
முதுமை யெள்ளலஃ தமைகுந் தில்ல" (அகம். 6)

என்பதும் அது.[1]

"மூத்துத்தலை யிறைஞ்சிய நின்னொ டியானே
போர்த்தொழி றொடங்க நாணுவ லதனான்"

என்பது, பிறன்கட் டோன்றிய மூப்புப் பொருளாக இளிவரல் பிறந்தது.

"இமயமுந் துளக்கும் பண்பினை
துணையில ரளியர் பெண்டிரிஃ தெவனோ"[2] (குறுந். 158)

என்பது, தன்கட் டோன்றிய பிணிபற்றி இளிவரவு பிறந்தது; என்னை? மலையைத் துளக்கும் ஆற்றலையுடையாய் காமப்பிணி கூர்ந்தோரை அலைப்பது நினக்குத் தகுவது அன்றெனா இளிவந்து வாடைக்குக் கூறினமையின்.

"குணகடற் றிரையது பறைதபு நாரை
திண்டேர்ப் பொறையன் றொண்டி முன்றுறை
யயிரை யாரிரைக் கணவந் தாஅங்குச்
சேய ளரியோட் படர்தி
நோயை நெஞ்சே நோய்ப்பா லோயே"[3] (குறுந். 128)

என்பது, நெஞ்சினை வேறு நிறீஇக் கூறினமையிற் பிறன்கட் டோன்றிய பிணியெனப்படும். இதனுள்,

"சேய ளரியோட் படர்தி"

என்றமையின் இது பிறன்கட் டோன்றிய வருத்தமும் வந்ததாயிற்று.

"யான்ற னறிவ றானறி யலளே" (குறுந். 337)

என்பது, தன்கட் டோன்றிய வருத்தம்பற்றி வந்த இளிவரல்; என்னை? அது பின்னின்ற தலைமகன் கூறியதாகலின்.

"ஒன் றிரப்பான்போ லிளிவந்துஞ் சொல்லும்" (கலி. 47)

---

1. பரத்தைமை கொண்ட தலைவன் தன் மனை வந்து தலைவியை நோக்கி நீ இப் புதல்வன் தாய் அல்லளோ எனக் கூறிய போது அவள் புதல்வன் தாய் என வஞ்சனையான சொல்லைக் கூறி அதனால் என்னை வயது மூத்தவள் என்று எள்ளாதே என்றாள்.

2. பிரிவிடை மழையை நோக்கித் தலைவி கூறியது. மழையே! நீ இமயமலையையும் அசைக்கும் ஆற்றலுடையாய் : யாமோ தலைவரைப் பிரிந்து துணையிலாதவராவேம்; அதனால் இரங்கத்தக்கவராவேம், அன்றியும் பெண்டிர் எம்மிடம் இப்படித் துன்புறுத்தல் ஏன்?

3. கீழ்க்கடலில் உள்ள பறக்க முடியாத நாரையானது, பொறையன் தொண்டிமுன்துறையில் உள்ள அயிரைமீனை யுண்ண வாய் திறந்ததுபோல நெஞ்சமே! நெடுந்தூரத்துள்ள அடைதற்கரிய தலைவியை நினைகின்றாய். மிகவும் வருத்தம் உடையாய். நீ அத்தகைய ஊழ் உடையைபோலும்.

என்பது, பிறன்கட் டோன்றிய வருத்தம்பற்றி வந்தது; என்னை? அவன் இவ்வா றொழுகுதல் நமக்கு இளிவரலாமென்னுங் குறிப்பினாற் கூறிக் குறை நயப்பித்தமையின்.

"வலியரென வழிமொழியலன்
மெலியரென மீக்கூறலன்" (புறம். 239)

எனத் தன்கண்ணும் பிறன்கண்ணுந் தோன்றிய மென்மைபற்றி இளிவரல் பிறந்தன; என்னை? மெலியார் இளிவந்தன கூறுவராயினும் வலியார் மீக்கூறுவராயினும் இவன் அவை செய்யானென்றலின்.

"தானால் விலங்கால் தனித்தால் பிறன்வரைத்தால்
யானை யெறிதல் இளிவரவால்-யானை
ஒருகை யுடைய[1] தெறிவலோ யானு
மிருகை சுமந்துவாழ் வேன்" (புறம். 207)

என்பது வீரம்பற்றி இளிவரல் பிறந்தது; இது, தன்கண்ணும் பிறன்கண்ணுந் தோன்றாமையின் இலேசினாற் கொண்டாமென்பது.(6)

**251. புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு
மதிமை சாலா மருட்கை நான்கே. (7)**

இலக்குவனார்

255. Wonder which bewilders the mind has newness, bigness, smallness and change - these four - as its source.

பி.இ.நா.

இல.வி.578

புதுமை பெருமை சிறுமை ஆக்கம் - மருட்கை.

இளம்பூரணர்

251. புதுமை பெருமை .... நான்கே.

என்-னின், இது மருட்கை யாமாறும் அதன் பொருண்மையும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) புதுமை முதலாகச் சொல்லப்பட்ட நான்கினானும் மருட்கை பிறக்கும் என்றவாறு.

மதிமை சாலா[2] மருட்கை என்றமையால் அறிவுடையார் இப் பொருட்கண் வியவார் என்று கொள்க.

---

1. ஒரு கையுடையது யானை.
2. மதிமை சாலா - அறிவொடு பொருந்தாத

புதுமையாவது - யாதொன்றானும் எவ்விடத்தினும் எக்காலத்தினுந் தோன்றாததோர் பொருள் தோன்றியவழி வியத்தல். அது கந்திருவர் அந்தரம் போவது கண்டு வியத்தல் போல்வன.

பெருமையென்பது - பண்டு கண்ட பொருள்கள் போலாத பொருள்கள்[1] அவ்வளவிற்[2] பெருத்தன கண்டு வியத்தல். அவை மலையும் யானையும் செல்வமும் முன் கண்ட அளவின் மிக்கன கண்டவழி வியப்பு வரும்.

சிறுமை என்பது - பிறவும் நுண்ணியன கண்டு வியத்தல். அது 'கடுகின்கட் பல துளை' போல்வன.

ஆக்கம் என்பது - ஒன்றன் பரிணாமங் கண்டு வியத்தல். அது தன்னளவின்றி நன்னிலஞ் சார்பாகத் தோன்று மரமுதலாயின ஆகியவழி வியத்தலும், நல்கூர்ந்தான் யாதொன்று மிலாதான் ஆக்கமுற்றானாயின் அதற்குக் காரணமுணராதான் அது கண்டு வியத்தலும், இளையான் வீரங் கண்டு வியத்தலுமாம். பிறவும் உலகத்து வியக்கத்தகுவன எல்லாம் இவற்றின்பாற் படுத்திக் கொள்க.

'இருந்த வேந்தன்' என்னும் அகப்பாட்டினுள்,

" .... பெருந்தேர் யானும்
ஏறிய தறிந்தன் றல்லது வந்தவாறு
நனியறிந் தன்றோ இலனே தாஅய்
முயற்பறழ் உகளும் முல்லையம் புறவிற்
கவைக்கதிர் வரகின் சீறூர் ஆங்கண்
மெல்லியல் அரிவை இல்வயின் நிறீஇ
இழிமின் என்றநின் மொழிமருண் டிசினே" (அகம். 384)

என்றது வியந்தவாறு.[3]

" பொலம்பூ வேங்கை நலங்கிளர் கொழுநிழல்
ஒருமுலை இழந்தாளோர் திருமா பத்தினிக்
கமரர்க் கரசன் தமர்வஞ் தீண்டியவள்
காதற் கொழுநனைக் காட்டி அவளொடெம்
கட்புலங் காண விட்புலம் போயது
இறும்பூது போலும்அஃ தறிந்தருள் நீயென[4]" (சிலப்..பதிகம்)

என்றது புதுமை. (7)

1. முன் பார்த்தனபோல் இல்லாமல் பெருத்துக் காணப்படும் பொருள்கள்

2. அவ்வளவில் - முன் பார்த்த அளவைக் காட்டிலும்

3. பெரிய தேரில் யான் ஏறியது அறிந்தேனேயன்றி இங்கு வந்தவாறு எப்படி என அறிந்திலன், முயல்குட்டிகள் தாவித் துள்ளும் முல்லைக்கொடி படரும் முல்லை நிலத்தினையுடைய வரகினையுடைய சிற்றூரில் உள்ள மெல்லியளாகிய என் மனைவியின் வீட்டின் முன் தேரை நிறுத்தி இறங்குமின் என்ற நின் சொல் கேட்டு மருட்சியடைந்தேன் - இது தலைவன் தேர்ப்பாகனின் தேரோட்டிய விரைவை வியந்து கூறியது.

4. வேங்கை நிழலில் கண்ணகிக்கு அவள் கணவனைத் தேவர்க்கு அரசனாகிய இந்திரன் தமராகிய தேவர் கூடி வந்து காட்டிப் பின்னர் அவளொடும் எம் கண் காணுமாறு விண்ணுலகு சென்றது வியப்பாகும். அரசே அறிக.

பேராசிரியர்

255. புதுமை பெருமை .... நான்கே.

இது, வியப்புணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) புதிதாகக் கண்டனவும், கழியப் பெரியவாயினவும், இறப்பச் சிறியனவும், ஒன்று ஒன்றாய்த் திரிந்தனவுமென நான்கும்பற்றி வியப்புத் தோன்றும் என்றவாறு.

'மதிமை சாலா மருட்கை' என்பது, அறிவினை உலக வழக்கினுள் நின்றவாறு நில்லாமற் றிரித்து வேறுபடுத்து வருவதென்றவாறு. இவையுமெல்லாம் மேலனபோலத் தன்கட் டோன்றினவும் பிறன்கட் டோன்றினவுமென எட்டாதலுடைய.

" மலர்தார் மார்பன் நின்றோற் கண்டோர்
பலர்தில் வாழி தோழி யவரு
ளாரிருட் கங்கு லணையொடு பொருந்தி
யோரியா னாகுவ தெவன்கொ
னீர்வார் கண்ணொடு நெகிழ்தோ ளேனே"[1] (அகம். 82)

என்பது, தன்கட் டோன்றிய புதுமைபற்றி வியப்புப் பிறந்தது; என்னை? தன் கருத்து வெளிப்படாது தன் மெய்க்கட் டோன்றிய புதுமையைத் தலைவி வியந்தாள் போலத் தோழிக்கு அறத்தொடு நின்றமையின்.

" மந்தி நல்லவை மருள்வன நோக்கக்
கழைவள ரடுக்கத் தியலி யாடுமயில்
விழவுக்கள விறலியிற் றோன்று நாடன்"[2] (அகம். 82)

என்றவழிப் பண்டு ஒருகாலுங் கண்டறியாதபடி ஆடிற்று மயிலென்றமையிற் பிறபொருட்கட் டோன்றிய புதுமையாயிற்று.

" நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று
நீரினு மாரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே" (குறுந். 3)

என்பது, பெருமைவியப்பு; என்னை? கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந்தேன் இழைத்தாற் போல வழிமுறை முறையாற் பெருகற்பால தாகிய நட்பு, மற்றவனைக் கண்ணுற்றஞான்றே நிலத்தினதகலம் போலவும் விசும்பினோக்கம் போலவுங் கடலினாழம்போலவும் ஒருகாலே பெருகிற்றென்றமையின்; இது தன்கட் டோன்றிய பெருமை வியப்பு.

---

1. கருத்து: எதிரே நின்றவனது மலர்தார் மார்பனைக் கண்டோர் என்னொடு பலராவர். ஆனால் அவருள் யான் ஒருத்தியே இரவு நள்ளிருளில் படுக்கையிலிருந்து நீர்வார் கண்ணொடு மெலிந்த தோளுடையளாய் வருந்துவேனாயினேன்! இதன் காரணம் என்?

2. கருத்து: விழாக்காலத்து நாடக மேடையில் ஆடும் விறலியைப் போல மூங்கில் வளரும் மலையடுக்கத்தில் மந்தி நோக்குமாறு மெல்ல நடந்து மயில் ஆடும்.

இது தலைமகன் கருத்தினுள் நட்பிற்குக் கொள்ளுங்காற் பிறன்கட் டோன்றிய பெருமை வியப்பாமென்பது கொள்க.[1]

"மைம்மல ரோதி மணிநகைப் பேதைதன்
கொம்மை வரிமுலை யேந்தினு - மம்ம
கடையிற் சிறந்த கருநெடுங்கட் பேதை
யிடையிற் சிறியதொன் றில்"[2]

என்பது, பிறன்கட் டோன்றிய சிறுமை வியப்பு. தன்கட் டோன்றிய சிறுமை வந்துழிக் காண்க.

"எருமை யன்ன கருங்கல் லிடைதோ
றானிற் பரக்கும் யானைய முன்பிற்
கானக நாடனை நீயோ பெரும" (புறம். 5)

என்பது, நரிவெரூஉத்தலையார் தம்முடம்பு பெற்று வியந்து கூறிய பாட்டாகலின், இது தன்கட் டோன்றிய ஆக்கம்பற்றி வியப்புப் பிறந்த தாயிற்று.[3]

"உறக்குந் துணையதோ ராலம்வித் தீண்டி
யிறப்ப நிழற்பயந் தாஅங்கு" (நாலடி. 38)

என்பது, பிறபொருளாக்கம் பற்றிய வியப்பு.[4]

இனி, மதிமை சாலா மருட்கை யானே[5] சிறுமைப் பொருள் பெருந்தொழில் செய்தலும், பெருமைப்பொருள் சிறுதொழில் செய்தலும் வியப்பாமெனக் கொள்க.

"கிண்கிணி களைந்தகா லொண்கழ றொட்டு" (புறம். 7)

என்னும் பாட்டுச் சிறியோர் பெருந்தொழிலைச் செய்தது.

"அன்னா னொருவன்றன் னாண்டகை விட்டென்னைச்
சொல்லுஞ்சொற் கேட்டீ சுடரிழாய்" (கலி. 47)

என்பது, பெரியோன் சிறுதொழில் கூறலின் வியப்பாயிற்று.

புதுமையை ஆக்கத்து ளடக்கி முதுமை யென்பது பாடமாகவும் உரைப்ப; அன்னதோர் வழக்கின்மையானும் புதுமை ஒன்று ஒன்றாய்த்

1. 'நிலத்தினும் பெரிதே' எனும் பாடல் தலைவன்பால் தலைவி கொண்ட நட்பிற் குரியது. அதனால் தலைவி கூற்றாகிய இதனுள் தலைவிமாட்டுத் தோன்றிய பெருமை வியப்பாதலின் தன்கண் தோன்றியதாம். இதையே தலைவன் தலைவிமாட்டுக் கொண்ட நட்பை வியப்பதாயின் பிறன்கண் தோன்றியதாம்.

2. பெரியனவாகிய முலைகளைத் தாங்கினாலும் இடையைப் போலச் சிறியது ஒன்று இல்லை என்க.

3. எருமை போலும் கற்பாறைகளையுடைய இடந்தோறும் ஆநிரைகள் போல யானைகள் மேயும் காட்டு நாடன் நீயோ பெரும எனக் கூறுமுகத்தால் அவன் பார்வையால் தம் நரித்தலை அழகு பெற்றதை வியந்தார் என்க.

4. சிறிய ஆலவிதை பெரிய நிழல் தருவது வியப்பு. சிறியது பெரிய மரமாயிற்று.

5. மதிமை சாலா மருட்கை என்றதனானே.

திரியுமெனப் பட்டு அவ் வாக்கத்துள் அடங்காமையானும் அஃதமையாதென்பது.

இங்ஙனம் இவை நான்கு சூத்திரப் பொருளும் நானான்கு பதினாறாகியும், முப்பத்திரண்டாகியும் விரியுமாகலின் இவற்றை ஓரினமாக்கி முதற் சூத்திரத்து முன்வைத்தானென்பது. இனி வருஞ்சூத்திர நான்கினும் எண்ணப்படும் பொருள் ஒன்று இரண்டாகாமையின் அவை பதினாறேயாமென்பது; அஃதேயெனின், இத்துணையுங் கூறிவந்த முப்பத்திரண்டனையும் இனிக் கூறும் பதினாறனையும் நோக்கி முதற் சூத்திரத்துள்,

"பண்ணைத் தோன்றிய வெண்ணான்கு பொருளுங்
கண்ணிய புறனே நானான் கென்ப". (249)

என்றா னென்னாமோவெனின், என்னாமன்றே; பதினாறு பொருளும் மேற் கூறிய முப்பத்திரண்டுமென்று படாமையினென்பது; என்றார்க்குத் தன்கட் டோன்றுதல் பிறன்கட் டோன்றுதலெனப் பகுத்துப் பொருளுரையாது மேலனவும் இனி வருகின்றனவும் நானான்கேயாகலாற் 'பண்ணைத் தோன்றிய வெண்ணான்கு பொருள்' (249) என்றானாமெனின் அங்ஙனங் கூறின் அவை 'கண்ணிய புறனே நானான் கென்ப' (249) என்றும், 'நாலிரண் டாகும் பாலுமா ருண்டே' (250) என்றும் மடங்கக் கூறல் வேண்டாவாம்; வேண்டவே இச் சூத்திரம் எட்டு வகையாகியே செல்லுமென மறுக்க; அல்லதூஉம் இஃது உலக வழக்காதலிற் பண்ணைத் தோன்றிய பொருள் (249) ஈண்டு ஆராயானென்பது. அன்றியும் இவற்றைப் பண்ணைத்தோன்றிய பொருளெனின் ஒன்றொன்றாக்கிக் கூறாது கூத்தன் அரங்கினுள் இயற்றும் வகையானே சுவையுங் குறிப்புஞ் சத்துவமுமென வேறுவேறு செய்வான் ஆசிரிய னென்பது. (7)

சிவலிங்கனார்

"பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும் கண்ணிய புறனே நானான் கென்ப" என்னும் முதற் சூத்திரமும், "நாலிரண் டாகும் பாலுமா ருண்டே" என்னும் அடுத்த சூத்திரமும் நாடகநூலார் மெய்ப் பாடுகளை முப்பத்திரண்டு, பதினாறு, எட்டு என விரித்தும் வகுத்தும் தொகுத்தும் கூறி அவற்றின் இலக்கணம் கூறுவர் என ஆசிரியர் கூறியதாகக் கொள்வர் இளம்பூரணரும் பேராசிரியரும். "நகையே அழுகை" முதலாக அடுத்து வரும் சூத்திரங்கள் எண்வகை மெய்ப் பாடுகளும் தோன்றுமாறு கூறுவன எனக் கொண்டனர் இளம்பூரணர். பேராசிரியரோ "பண்ணைத் தோன்றிய" என்பதும், "நாலிரண் டாகும்" என்பதும் நாடக நூலார் கூறுவனவாகக் கூறுவன என்றும், "நகையே அழுகை" முதலாக வருவன உலகியல் நோக்கிக் கூறுவன என்றும்

* இப் பகுதிக்குச் சிவலிங்கனார் விளக்கம் பார்க்க.

பிரித்துக் கூறுவன என்றும் கொண்டனர். அதனால் அவர் சில வினா விடைகளை மேற்கொண்டார்.

"எள்ளல் இளமை" என்னும் சூத்திரம் முதலாகப் "புதுமை பெருமை" என்னும் சூத்திரம் இறுதியாகவுள்ள சூத்திரத்துக் கூறப்பட்ட நகை, அழுகை, இளிவரல், மருட்கை என்னும் நான்கு மெய்ப்பாடுகளும் ஒன்று நான்காகிப் பதினாறாம் என்றும் அவை தன்கண் தோன்றுதல். பிறன்கண் தோன்றுதல் என இரண்டாகி முப்பத்திரண்டாம் எனவும் கொண்டார் பேராசிரியர். அம் முப்பத்திரண்டையும் பதினாறையுமே முதற் சூத்திரத்தில் "பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும் கண்ணிய புறனே நானான் கென்ப" என்றார் ஆசிரியர் என்பது பேராசிரியர் கொள்கை. இனி அடுத்து வரும் அச்சம், பெருமிதம், உவகை, வெகுளி என்பன தன்கண் தோன்றுதலும், பிறன்கண் தோன்றுதலும் என இரண்டாதலன்றி ஏதேனும் ஒன்றேயாதலின் அவை நந்நான்காய்ப் பதினாறேயாம் என்று கொண்டார் அவர். இப்படிக் கொள்வதால் அவர்க்கு ஓர் வினா எழுகிறது.

நகை, அழுகை, இளிவரல், மருட்கை என்னும் நான்கும் ஒன்று நான்காயும் தன்கண்ணும் பிறன்கண்ணும் வருதலின் அவை முப்பத்திரண்டனையும் 'பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்' என்றார் ஆசிரியர் என்றும், அச்சம், பெருமிதம், உவகை, வெகுளி எனும் நான்கும் நந்நான்கேயாய் அமைவதோடு தன்கண்ணும் பிறன்கண்ணும் என இருவகையில் தோன்றாமையின் அவை பதினாறேயாய் அமைதலின் அவற்றையே "கண்ணிய புறனே நானான் கென்ப" என்றார் ஆசிரியர் என்றும் கூறலாமே என்பது அவ் வினா.

முதற்சூத்திரம் முப்பத்திரண்டு பொருளே பதினாறாம் என்ற பொருள்பட இருத்தலன்றி முப்பத்திரண்டும் பதினாறும் என்ற பொருள்பட இல்லை ஆதலின் அது பொருந்தாது என்பது விடை.

மற்றொரு வினா இது. தன்கண், பிறன்கண் என இருவகையாகப் பகுத்துக் கூறாது நகை முதலிய நான்கன் பதினாறும் அச்சம் முதலிய நான்கன் பதினாறும் என முப்பத்திரண்டுமே பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருள் எனப்பட்டன என்றால் என்ன?

அப்படிக் கூறுவதாயின் முப்பத்திரண்டையும் நானான்கென்ப நாலிரண்டாகும் என ஒன்றில் ஒன்று அடக்கிக் கூறல் வேண்டுவதில்லை. அப்படி யடக்கிக் கூறாமல் பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருள் என்ற அளவில் நின்றால் அமையும். எட்டு நான்குவகை எனவே மெய்ப்பாடு எட்டாம் என்ற கருத்துடையது இச் சூத்திரம் என்பதாகும். முப்பத்திரண்டு, பதினாறு, எட்டு எனக் கூற வேண்டுதலின் அது பொருந்தாது.

பண்ணைத் தோன்றிய என்பதும் நாலிரண்டாகும் என்பதும் நாடக வழக்குப் பற்றியன. ஆதலின் அவற்றை நகையே யழுகை முதலிய

சூத்திரங்களான் ஆராய்ந்தார் ஆசிரியர் என்பது பொருந்தாது. இங்கு மெய்ப்பாடு என்பன உலக வழக்குப் பற்றியன.

நகையே யழுகை முதலிய சூத்திரங்களும் பண்ணைத் தோன்றிய பொருள்களையே கூறுவன எனின், நாடக நூலார்போல இங்கும் ஆசிரியர் நாடக அரங்கில் கூத்தன் காட்டுவது போலச் சுவை, குறிப்பு, சத்துவம் என்பனவற்றையும் வேறுவேறாக வைத்து இலக்கணம் செய்தல் வேண்டும்; அவ்வாறு செய்யாமையின் நாடக மெய்ப்பாடு கூறவில்லை ஆசிரியர் என்க.

பேராசிரியரின் கோட்பாடு முதல் இரண்டு சூத்திரங்களும் நாடக நூலார் கருத்தைக் கூறின என்பதும் மற்றைச் சூத்திரங்கள் உலகவழக்குக் கூறின என்பதும் ஆம். உலகவழக்குக் கூறிய சூத்திரங்களை முதற்சூத்திரத்தில் தாமே பொருத்திக் காட்டினார், அவ்வளவே.

252. அணங்கே விலங்கே கள்வர்தம் இறையெனப்
பிணங்கல் சாலா அச்சம் நான்கே. (8)

இலக்குவனார்

256. Fear has the objects of damsel, beast, thieves and the kings - these four divisions - as its source.

பி.இ.நா.

இ.வி. 578

அணங்கே விலங்கே கள்வர் தம்இறை - அச்சம்.

இளம்பூரணர்

252. அணங்கே விலங்கே .... நான்கே.

என்-னின், அச்சமாகிய மெய்ப்பாடும் அதன் பொருளும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அணங்கு முதலாகச் சொல்லப்பட்ட நான்கினும் பிறக்கும் மாறுபடுதல் அமையாத அச்சம் நால்வகைப்படும் என்றவாறு.

பிணங்கல் சாலுமாயின் நடுக்கம் முதலாயின உளவாகா; அவை பிணங்கல் சாலாதவழியே உளதாவ தென்று கொள்க.

அவை நாலச்சமும் வருமாறு:

கொலை களவு கட்காமம் பொய் யென்பனவற்றை நிகழ்த்தினவர்க்கு அரசனால் அச்சம் வருதலின் அவனும்[1] அஞ்சப்படும் பொருளாயினான்.

1. அவனும் - அரசனும்

(உ-ம்) "மையல் வேழ மடங்கலின் நெரிதர
உய்விடம் அறியேம் ஆகி ஒய்யெனத்
திருந்துகோல் எல்வளை தெளிர்ப்ப நாண்மறந்து
விதுப்புறு மனத்தேம் விரைந்தவற் பொருந்திச்
சூருறு மஞ்ஞையின் நடுங்கி"[2] (குறிஞ்சிப். 165 - 9)

என வரும். பிறவுமன்ன. (8)

பேராசிரியர்

256. அணங்கே விலங்கே .... நான்கே.

இது, முறையானே அச்சமுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) தெய்வமும், விலங்கும், கள்வரும் தமக்கு இறைவனாயினாரு மென நான்கு பகுதியான் அச்சம் பிறக்கும் என்றவாறு.

அணங்கென்பன : பேயும், பூதமும், பாம்பும் ஈறாகிய பதினெண் கணனும் நிரயபாலரும்[3] பிறரும் அணங்குதற்றொழிலராகிய சவந்தின் பெண்டிர் முதலாயினாரும் உருமிசைத்[4] தொடக்கத்தனவு மெனப்படும். விலங்கென்பன: அரிமா முதலாகிய அஞ்சுதக்கன. கள்வரென்பார் தீத்தொழில் புரிவார். இறையெனப்படுவார் தந்தையரும் ஆசிரியரும் அரசரும் முதலாயினார். 'பிணங்கல் சாலா அச்சம்' என்றதனான் முன்னைய போல இவை தன்கட் டோன்றலும் பிறன்கட்டோன்றலு மென்னுந் தடுமாற்றமின்றிப் பிறிதுபொருள் பற்றியே வருமென்பது.

(உ-ம்)" யானை தாக்கினு மரவுமேற் செலினு
நீனிற விசும்பின் வல்லேறு சிலைப்பினுஞ்
சூன்மகண் மாறா மறம்பூண் வாழ்க்கை" (பெரும்பாண்.134-6)

என்பதனுள், அணங்கும் விலங்கும் பொருளாக அச்சம் பிறத்தல் இயல்பென்பது கூறியவாறாயிற்று.

" ஒரூஉநீ யெங்கூந்தல் கொள்ளல்யா நின்னை
வெரூஉதுங் காணுங் கடை"[5] (கலி. 87)

இது கள்வர் பொருளாக அச்சம் பிறந்தது; என்னை? அவனைக்[6] கள்வர்பாற் சார்த்தி யுரைத்தமையின்.

---

1. மதயானை சிங்கம்போல எம்மை நெருங்கத் தப்பும் இடம் அறியாமல் சரேலென வளையல் ஒலிக்க நாணத்தையும் மறந்து அச்முற்ற மனத்தினராய் அங்குவந்த அவனைச் சார்ந்து அச்சுறுத்தும் தெய்வம் ஏறப்பெற்ற மயில்போல நடுங்கி - இது களிறுதரு புணர்ச்சியால் அறத்தொடு நின்றது.
2. நிரயபாலர் - நரக உலகினர்
3. உரும்இசை - இடியோசை
4. நீ நீங்குக; எம் கூந்தலைத் தொடாதே; நின்னைக் காணும்போது அஞ்சுகிறோம்
5. அவனை - தலைவனை

"எருத்துமே னோக்குறின் வாழலே மென்னுங்
கருத்திற்கை கூப்பிப் பழகி - யெருத்திறைஞ்சிக்
கால்வண்ண மல்லாற் கடுமான்றேர்க் கோதையை
மேல்வண்ணங் கண்டறியா வேந்து."[1] (இ. வி. ப. 124)

இஃது இறைபொருளாக அச்சம் பிறந்தது.

பிணங்காத அச்சமென்னாது 'சாலா அச்சம்' என்ற மிகையான் இந் நான்குமேயன்றி ஊடன் முதலியனவும் அச்சத்திற்குப் பொருளா மென்று கொள்க.

"செய்நின்று செய்யாத சொல்லிச் சினவனின்
னாணை கடக்கிற்பா ரியார்[2]" (கலி. 8)

என்பது, புலவி பொருளாக அச்சம் பிறந்தது.

"அணிகிளர் சாந்தி னம்பட் டிமைப்பக்
கொடுங்குழை மகளிரி னொடுங்கிய விருக்கை" (அகம்.236)

"அச்சா றாக வுணரிய[3] வருபவன்
பொய்ச்சூ ளஞ்சிப் புலவே னாகுதல்" (கலி. 75)

என வருவனவும் அவை. பிறவும் அன்ன. (8)

253. கல்வி தறுகண் புகழ்மை[4] கொடையெனச் சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே. (9)

இலக்குவனார்

257. The much-praised fortitude has education, fearlessness, fame and sacrifice - these four - as its source.

பி.இ.நா.

இ.வி. 578

கல்வி தறுகண் இசைமை கொடையே - பெருமிதம்

1. பிற வேந்தர் யாவரும் தம் கழுத்தை மேல்தூக்கிக் கோதையை (சேரனை)ப் பார்த்தால் உயிர்வாழ மாட்டேம் என்று நினைத்துக் கைகூப்பித் தம் கழுத்து (தலை) வணங்கிக் கோதையின் கால்வண்ணம் கண்டு அறிவதன்றி அதற்கு மேற்பட்ட உடல் வண்ணத்தைக் கண்டறியார்.

2. ஊடலால் விலகி நின்று யான் செய்யாத தவறுகளைச் செய்ததாகச் சொல்லி வெகுளாதே; நின் ஆணையை யார் மீறுவார்? - தலைவன் ஊடல் கொண்ட தலைவியிடம் கூறியது.

3. உணரிய - ஊடலை நீக்க

4. இசைமை - பாடம்

இளம்பூரணர்

253. கல்வி தறுகண் .... நான்கே.

என்-னின், பெருமிதமாமாறும் அதன் பொருண்மையும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) கல்வியானும், தறுகண்மையானும், புகழ்மையானும், கொடையானும் பெருமிதம் நால்வகைப்படும் என்றவாறு.

இவை நான்கும் பிறனொருவனின் மிகுத்தவழிப்[1] பிறக்கு மகிழ்ச்சி பெருமிதம் என்று கொள்க.

பெருமிதமாவது - தன்னைப் பெரியனாக நினைத்தல்.

"உறுசுடர் வாளோ டொருகால் விலங்கின்
சிறுசுடர்முற் பேரிருளாங் கண்டாய் - எறிசுடர்வேல்
தேங்குலாம் பூந்தெரியல் தேர்வேந்த நின்னோடு
பாங்கலா வீரர் படை."[2] **(பு.வெ.மா.எ. 8)**

இது வீரம்பற்றி வந்தது. பிறவு மன்ன. (9)

பேராசிரியர்

257. கல்வி தறுகண் .... நான்கே.

இஃது, ஆறாம் எண்ணு முறைமைக்கண் நின்ற வீரம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) கல்வியும், தறுகண்மையும், புகழும், கொடையு மென்னும் நான்கும்பற்றி வீரம் பிறக்கும் என்றவாறு.

இச் சூத்திரத்துள் வீரத்தினைப் பெருமித மென்றெண்ணினான்; என்னை? எல்லாரொடும் ஒப்பநில்லாது பேரெல்லையாக நிற்றல் பெருமித மெனப்படும் என்றற்கென்பது. கல்வியென்பது, தவ முதலாகிய விச்சை. தறுகணென்பது, அஞ்சுதக்கன கண்ட இடத்து அஞ்சாமை. இசைமை யென்பது, இன்பமும் பொருளும் இறப்பப் பயப்பினும் பழியொடு வருவன செய்யாமை. கொடை யென்பது, உயிரும் உடம்பும் உறுப்பும் முதலாகிய எல்லாப் பொருளுங் கொடுத்தல்.

(உ-ம்) "வல்லார்முற் சொல்வல்லே னென்னைப்[3] பிறர்முன்னர்க்
கல்லாமை காட்டி யவள்" **(கலி. 141)**

---

1. மிகுந்தவழி - தனக்கு மிக்குத் தோன்றியவழி.

2 தேர்வேந்தே! நின்னொடு நின்னிடத்துப் பக்குவப்படாத படைகள் யான் சுடருடைய வாளோடு என் ஒரு காலைச் சற்று விலக்கிப் பாய்வேனாயின் சிறு சுடர்முன் பெரிய இருள் ஓடுவதுபோல ஓடும்.

3. கற்று வல்லார்முன் சொல்ல வல்லவனாகிய என்னையும் அவள் பிறர் முன் என் கல்லாமையைக் காட்டினாள்.

என்பது கல்விபற்றிய பெருமிதம்; என்னை? என்னையுங் கல்லாமை காட்டினாளெனத் தன் பெருமிதங் கூறினமையின்.

"அடன்மாமே லாற்றுவே னென்னை மடன்மாமேன்
மன்றம் படர்வித் தவள்"[1] (கலி. 141)

என்பது, தறுகண்.

"கழியக் காதல ராயினுஞ் சான்றோர்
பழியொடு வரூஉ மின்பம் வெஃகார்"[2] (அகம். 112)

என்பது புகழ்.

"வையம், புரவூக்கு முள்ளத்தே னென்னை யிரவூக்கு
மின்னா விடும்பைசெய் தாள்" (கலி. 141)

என்பது கொடை[3].

"தன்னகம் புக்க குறுநடைப் புறவின்
றபுதிகண் டஞ்சிச் சீரைபுக்க
வரையா வீகை யுரவோன் மருக" (புறம்.43)

என்பதுமது.

'சொல்லப்பட்ட பெருமிதம்' என்றதனாற் காமம்பற்றியும் பெருமிதம் பிறக்குமென்று கொள்க.

"பல்லிருங் கூந்தன் மகளி
ரொல்லா முயக்கி ... க் குழைகவென் றாரே" (புறம். 73)

என்பது, காமம் பற்றிய பெருமிதம்.[4] பிறவும் வருவன உளவேற் கொள்க. இது தன்கட் டோன்றிய பொருள்பற்றி வரும்; என்னை? கல்வியும், தறுகண்மையும், இசைமையும், வேட்கையுங், கொடைத் தொழிலுந் தன்கண்ணவாகலின். (9)

254. உறுப்பறை குடிகோள் அலைகொலை என்றன[5] வெறுப்ப வந்த வெகுளி நான்கே. (10)

---

1. வலிய குதிரைமேற் சென்று போரிடவல்ல என்னையும் ஊர்ப் பொதுமன்றத்தில் பனைமடற் குதிரைமீது வரச் செய்தாள்.

2. சான்றோர் மிக்க காதலுடையவராயினும் அதன் காரணமாகப் பழியொடு வரும் இன்பத்தை விரும்பார் - பழியொடு வரும் இன்பம் வெஃகாமை புகழ்.

3. உலகைக் காக்கும் முயற்சியுடைய என்னை அவள் தன்பால் இரக்கும்படியான கொடுமையைச் செய்தாள் - தலைவன் கூற்று. வையம் புரக்கும் என்பது கொடையால் புரப்பதாம்.

4. யான் இன்னது செய்யேனாயின் என் மார்பின் மாலையானது மகளிரின் பொருந்தாத முயக்கத்தால் குழைவதாகுக. பொருந்தா முயக்கம் கொள்ளாமை காமம் பற்றிய பெருமிதம்.

5. என்ற - பாடம்

இலக்குவனார்

258. Anger, born of hatred, has cutting the limbs, conspiracy, inflicting injury and speaking ill - these four - as its source.

பி.இ.நா.

இ.வி.578

உறுப்பறை குடிகோள் அலைகொலை - வெகுளி

இளம்பூரணர்

254. உறுப்பறை குடிகோள் .... நான்கே.

என்-னின், வெகுளியாமாறும் அதற்குப் பொருளும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) உறுப்பறை முதலாகச் சொல்லப்பட்ட நான்கினானும் வெகுளி பிறக்கும் என்றவாறு.

இப் பொருள் நான்குந் தான் பிறரைச் செய்யுங்காலும் வெகுளி பிறக்கும்; தன்னைப் பிறர் செய்யுங்காலும் வெகுளி பிறக்கும் என்று கொள்க.

உறுப்பறையாவது - அங்கமாயினவற்றை அறுத்தல்.

குடிகோளாவது - கீழ்வாழ்வாரை நலிதல்.

அலை என்பது - வைதலும் புடைத்தலும்

கொலை என்பது - கொல்லுதற் கொருப்படுதல்[1]

ஊடற்கண்ணும் வெகுளி தோற்றுமால் எனின், அஃது இன்பத்திற்குக் காரணமாதலால் தலைமகள் புருவநெறிவும் வாய்த்துடிப்புங் கண்ட தலைமகற்கு வெகுட்சிபிறவாது உவகை பிறக்கும். தலைமகன் வெகுளு வனாயின் அதன்பாற்படும்.

"உறுதுப் பஞ்சா துடல்சினஞ் செருக்கிச்
சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமந் ததையத் தாக்கி முரசமொ
டொருங்ககப் படேஎ னாயின்"[2] (புறம். 72)

என்பது வெகுளிபற்றி வந்தது. பிறவு மன்ன.

---

1. கொல்லுதல் போலும் சொற் சொல்லுதல்

2. என் மிக்க வலிக்கு அஞ்சாமல் மாறுபட்ட வெகுளியால் செருக்குற்று என்னை இகழ்ந்து சிறிய சொல் சொல்லிய சினம் பொருந்திய வேந்தரை அரிய போரில் அழியத் தாக்கி அவரை முரசமொடு சேர என் அகப்படுத்தகிலேனாயின்.

பேராசிரியர்

258. உறுப்பறை குடிகோள் .... நான்கே.

இஃது, ஏழாம் எண்ணு முறைமைக்கண் நின்ற வெகுளி உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) உறுப்பறையென்பது, கைகுறைத்தலும் கண்குறைத்தலும் முதலாயின; குடிகோளென்பது தாரமுஞ் சுற்றமுங் குடிப்பிறப்பும் முதலாயவற்றுக்கட் கேடு சூழ்தல்; அலையென்பது, கோல் கொண்டலைத்தன் முதலாயின; கொலையென்பது, அறிவும் புகழும் முதலாயினவற்றைக் கொன்றுரைத்தல்; இவை நான்கும் பொருளாக வெகுளி பிறக்கும் என்றவாறு.

'வெறுப்பின்' என்றதனான் ஊடற்கண் தோன்றும் வெகுளி முதலாயினவுங் கொள்க.

"முறஞ்செவி மறைப்பாய்வு முரண்செய்த புலிசெற்று" (கலி.52)

என்பது, உறுப்பறையான் வந்த வெகுளி.

"நின்மகன், படையழிந்து மாறினன்[1] என்றுபலர் கூற
மண்டமர்க் குடைந்தன னாயி னுண்டவென்
முலையறுத் திடுவென் யானெனச் சினைஇ" (புறம். 278)

என்பது, குடிகோள்பற்றி வந்த வெகுளி; என்னை? தன் மகன் மறக்குடிக்குக் கேடு சூழ்ந்தானென்று சினங்கொண்டாளாகலின்.

"நெருந லெல்லைநீ யெறிந்தோன் றம்பி
யகற்பெய் குன்றியிற் சுழலுங் கண்ணன்"[2] (புறம். 300)

என்பதுமது.

"வரிவயம் பொருத வயக்களிறு போல[3]
வின்னு மாறாது சினனே" (புறம். 100)

என்பதனுள், அலைபற்றிச் சினம் பிறந்தது; என்னை? புலியான் அலைக்கப்பட்ட யானை பொருது போந்தும் அவ் வலைப்புண்டலை நினைந்து சினங் கொள்ளாநின்ற தென்றமையின்.

"உறுதுப் பஞ்சா துடல்சினஞ் செருக்கிச்
சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை" (புறம்.72)

என்பது, கொலை பொருளாக வெகுளிச் சுவை பிறந்தது; என்னை? சிறுசொற் சொல்லுதலென்பது, புகழ்கொன்றுரைத்தலாகலின்.

---

1. படைக்கு உடைந்து தோற்றோடினன்.

2. நேற்று நின்னால் வீழ்த்தப்பட்டவனுக்குத் தம்பியானவன் அகலில் வைக்கப்பட்ட குன்றிமணி போலச் சுழலும் கண் உடையனாயினான்.

3. வரிவயம் - வரிப்புலியால் தாக்கப்பட்ட களிற்றுக்குச் சினம் மாறாதது போல

" செய்தவ றில்வழி யாங்குச் சினவுவாய்" (கலி. 87)

என்பது, ஊடற்கண் தலைமகள் வெகுட்சி கூறியது. பிறவு மன்ன.

" நெருப்புச்சினந் தணிந்த நிணந்தயங்கு கொழுங்குறை"

(புறம். 125)

என்றாற்போலச் சினமில்லதனை உள்ளதுபோலக் கூறுவனவுங்[1] கொள்ளாமோவெனின், உணர்வுடையனவற்றுக் கல்லது சுவை தோன்றாமையின் வெகுளியென்று ஈண்டுக் கூறப்படாவென்பது. இது பிறன்கட் டோன்றிய பொருள்பற்றி வரும். (10)

255. செல்வம் புலனே புணர்வுவிளை யாட்டெனா[2]
அல்லல் நீத்த உவகை நான்கே. (11)

இலக்குவனார்

259. The delight freed from trouble, has enjoyment of wealth, knowledge, intercourse and plays and games - these four - as its source.

பி.இ.நா.

இ. வி. 578

செல்வம் புலனே புணர்வுவிளை யாட்டு - உவகை

இளம்பூரணர்

255. செல்வம் புலனே .... நான்கே.

என்-னின், உவகையாமாறும் அதன் பொருளும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) செல்வ நுகர்ச்சியானும், கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலன்களான் நுகர்தலானும் மகளிரொடு புணர்தலானுஞ், சோலையும் ஆறும் புகுந்து விளையாடும் விளையாட்டினானும் உவகை பிறக்கும் என்றவாறு.

"ஒத்த காமத் தொருவனும் ஒருத்தியும்
ஒத்த காமத் தொருவனொடு பலரும்
ஆடலும் பாடலுங் கள்ளுங் களியும்
ஊடலும் உணர்தலுங் கூடலு மிடைந்து

---

1. நெருப்பின் சூட்டைச் சினம் என்றதேயன்றி உண்மையில் சினம் இல்லை. அதனால் நெருப்புச்சினம் என்றது இல்லதை உள்ளது போலக் கூறுதலாயிற்று.

2. விளையாட்டென்ற - பாடம்

புதுப்புனல் பொய்கை பூம்புனல் என்றிவை
விருப்புறு மனத்தொடு விழைந்து நுகர்தலும்
பயமலை மகிழ்தலும் பனிக்கடல் ஆடலும்
நயனுடை மரபின் நன்னகர்ப் பொலிதலும்
குளம்பரிந் தாடலும் கோலஞ் செய்தலும்
கொடிநகர் புகுதலும் கடிமனை விரும்பலும்
துயிற்கண் இன்றி இன்பந் துய்த்தலும்
அயிற்கண் மடவார் ஆடலுள் மகிழ்தலும்
நிலாப்பயன் கோடலும் நிலம்பெயர்ந் துறைதலும்
கலம்பயில் சாந்தொடு கடிமல ரணிதலும்
ஒருங்கா ராய்ந்த இன்னவை பிறவும்
சிருங்கா ரம்மென வேண்டுப இதன்பயன்
துன்பம் நீங்கத் துகளறக் கிடந்த
இன்பமொடு புணர்ந்த ஏக்கழுத் தம்மே"

எனச் செயிற்றியனார் விரித்தோதினா ராயினும் இவையெல்லாம்[1] இந் நான்கினுள்[2] அடங்கும்.

"தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு"[3] (குறள். 1107)

என்றவழித் தம்மிலிருந்து தமது பாத்துண்டல் செல்வ நுகர்ச்சி. முயக்கம் - புணர்பு.

"வையை வருபுனல் ஆடல் இனிதுகொல்
செவ்வேற்கோ குன்ற நுகர்தல் இனிதுகொல்
வைவ்வேல் நுதியன்ன கண்ணார் துணையாக
எவ்வாறு செய்வாங்கொல் யாமென நாளும்
வழிமயக் குற்று மருடல் நெடியான்
நெடுமாடக் கூடற் கியல்பு"[4] (பரிபா.)

என வரும். பிறவு மன்ன. (11)

பேராசிரியர்

259. செல்வம் புலனே .... நான்கே.

இஃது, ஈற்றுக்கண் ணின்ற உவகை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) செல்வமென்பது, நுகர்ச்சி; புலனென்பது, கல்விப்பயனாகிய அறிவுடைமை; புணர்வென்பது, காமப்புணர்ச்சி முதலாயின;

1. இப் பாடலிற் கூறப்பட்ட செய்திகள் எல்லாம்.
2. இந் நான்கு - செல்வம் புலன் புணர்வு விளையாட்டு.
3. இவ் வரிவை முயக்கால் பெறும் இன்பம் தம் வீட்டிருந்து தாம் ஈட்டிய பொருளைப் பிறர்க்கும் பகுத்துக் கொடுத்து உண்ணுவதால் வரும் இன்பம் போன்றதாம்.
4. நெடுமாலின் மாடக்கூடல் நகரத்துக்கு வையைப் புனலாடல் இனிதா, முருகன்பால் குன்றில் ஆடி நுகர்தல் இனிதா, வேல்நுனிக்கண்ணுடைய மகளிர் துணையாக எவ்வாறு ஆடுவேம் என நாளும் ஆடவர் எவ்வழியிற் போவது என மயங்குவது இயல்புபோலும்.

விளையாட்டென்பது, 'யாறுங் குளனுங் காவு மாடிப் பதியிகந்து வருதன்' (191) முதலாயின. இவை நான்கும் பொருளாக உவகைச்சுவை தோன்றும் என்றவாறு.

உவகையெனினும் மகிழ்ச்சியெனினும் ஒக்கும்.

"உரனுடை யுள்ளத்தைச் செய்பொருண் முற்றிய
வளமையா னாகும் பொருளிது வென்பாய்"[1] (கலி. 12)

என்புழி, வளமையானாகும் மனமகிழ்ச்சி இதுவெனக் கூறினமையின், இது செல்வம் பொருளாகப் பிறந்த உவகையாம்.

"நன்கலம் பெற்ற வுவகையர்"[2]

என்பதும் அது.

"பெண்டிர் நலம்வெளவித் தன்சாரற் றாதுண்ணும்
வண்டிற் றுறப்பான் மலை"[3] (கலி. 40)

என்பது, அறிவு பொருளாக உவகை பிறந்தது; என்னை 'முகைப்பதம் பார்க்கும் வண்டுபோலத் தலைவியரை நகைப்பதம் பார்க்கும் அறிவுடைமை' காமத்திற்கு ஏதுவாமாகலின்,

"இகலில ரெஃகுடையார் தம்முட் குழீஇ
நகலி னினிதாயிற் காண்பாம்"[4] (நாலடி. 137)

என்பதுமது.

"இலமல ரன்ன வஞ்செந் நாவின்" (அகம். 142)

என்னும் மணிமிடை பவளத்துள்,

"தொடிக்கண் வடுக்கொள முயங்கினள்
வடிப்புறு நரம்பிற் றீவிய மொழிந்தே"[5]

என்பது, புணர்ச்சிபற்றிய உவகை; என்னை? அவள் இவ்வாறு முயங்கினமையான்,

"உவவின வாழியென் னெஞ்சே"

என்றமையின்.[6]

"துயிலின்றி யானீந்தத் தொழுநையம் புனலாடி
மயிலியலார் மருவுண்டு மறந்தமைகு வான்மன்னோ" (கலி. 30)

---

1. அறிவொடு கூடிய முயற்சியையுடையையாய் ஈட்டிய பொருளின் வளமையால் வந்த மகிழ்ச்சி இது என்பாய்.

2. நல் அணிகலம் பெற்றமையால் வந்த உவகையுடையர்.

3. தன் மலைச்சாரலில் தாதுண்ணும் வண்டுகள் மலர்விட்டு மலரிற் சென்று தாதுண்ணல் போல மகளிர் நலனை நுகர்ந்து பின் துறப்பவன்.

4. தேவருலகம் மாறுபாடிலராய் அறிவுத்திண்மையுடையராய் உள்ள சான்றோர்தாம் கூடி மகிழ்தல் உடையதானால் பார்ப்போம்.

5,6. வடித்து ஒழுங்குபடுத்தப்பட்ட நரம்பிசைபோல இனிய மொழிகளைக் கூறித் தன் பூண்உள்ள முலைக்காம்பில் வடு உண்டாம்படி முயங்கினாள். அதனால் என் நெஞ்சே இனி உவப்பாயாக.

என்புழி, ஆறாடி விளையாடி மயிலியலார் மருவுண்டு[1] மறைந்தமைகு வான்மன், என்றமையின் இது விளையாட்டுப் பொருளாக உவகை பிறந்தது.

'அல்லல் நீத்த வுவகை' என்றதனாற் பிறர் துன்பங் கண்டுவரும் உவகையும் உவகையெனப்படாதென்பது. இதுவுந் தன்கட் டோன்றிய பொருள்பற்றி வருமென்றார்க்குப் பிறன்கட் டோன்றிய இன்பம்பற்றியும் உவகை பிறக்குமன்றே? அஃதெப்பாற்படுமெனின், அதுவும் 'அல்லல் நீத்த வுவகை' என்றதனான் உவகை யெனப்படும். இனித் தன்கட் டோன்றிய பெருமிதமும் உவகையும் முற்கூறாது பிறன்கட் டோன்றிய அச்சம் முற்கூறி இதனை ஈற்றுக்கண் வைத்தமையான் எடுத்தோதிய நான்கும் போலாது இது பிறன்கட் டோன்றிய இன்பம் பொருளாக வருமென்பது கொள்க. (11)

256. ஆங்கவை,

ஒருபால் ஆக வொருபா லாக[2]
உடைமை இன்புறல் நடுவுநிலை யருளல்
தன்மை அடக்கம் வரைதல் அன்பெனாஅக்
கைம்மிகல் நலிதல் சூழ்ச்சி வாழ்த்தல்
நாணல் துஞ்ச லரற்றுக் கனவெனாஅ
முனிதல் நினைதல் வெரூஉதல் மடிமை
கருதல் ஆராய்ச்சி விரைவுயிர்ப் பெனாஅக்
கையா றிடுக்கண் பொச்சாப்புப் பொறாமை
வியர்த்தல் ஐயம் மிகைநடுக் கெனாஅ
அவையும் உளவே அவையலங் கடையே. **(12)**

இலக்குவனார்

260. Being those in one group, another group being possession, experiencing delight, equity, being gracious in form, nature, forbearance, restraint, love, losing character, harming others, deliberation, blessing, shyness, drowsiness, shouting excitedly, dreaming, hating, remembrance, dreading, laziness, intention, investigation, hastiness, groaning, being inactive, distress, forgetfulness, jealousy, indignation,

1. மயிலியலாகிய மகளிரொடு மருவுதல் கொண்டு.
2. ஒருபா லாக வொருபால் - பாடம்

doubt, intemperance, trembling - these also are to be taken into account except those (above mentioned).

பி.இ.நா.

இ. வி. 579 தொல்.சூத்திரமே.

இளம்பூரணர்

256. ஆங்கவை ஒருபால் .... கடையே.

என்-னின், மேற்சொல்லப்பட்ட எண்வகை மெய்ப்பாடும் ஒழிய வேறுபட்டுவருவன சில மெய்ப்பாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்டன ஒருபக்கமாக, ஒருபக்கம் உடைமை முதலாகச் சொல்லப்பட்ட முப்பத்திரண்டும் உள, அவையல்லாத விடத்து என்றவாறு.

எனவே, ஆமிடத்து இவை யங்கம் ஆகும்.

உடைமையாவது - யாதானுமொரு பொருளை உடையனாயினால் வருதலாகும் மனநிகழ்ச்சி.

"நெடுநல் யானையுந் தேரு மாவும்
படையமை மறவரு முடையம் யாமென்
றுறுதுப் பஞ்சாது" (புறம். 72)

என வரும்.

இன்புறலாவது - நட்டாராகிப் பிரிந்துவந்தோரைக் கண்டவழி வருவதோர் மனநிகழ்ச்சி போல்வது.

" கெடுத்துப்படு நன்கலம் எடுத்துக்கொண் டாங்கு"[1] (நற்.182)

" .... உள்ளிய
வினைமுடித் தன்ன இனியோள்"[2] (நற். 3)

" விட்டகன் றுறைந்த நட்டோர்க் கண்ட
நாளினும் இனிய நல்லாள்"[3]

எனக் காமநுகர்ச்சியின்றி வரும் இன்புறுதல்.

நடுவுநிலைமையாவது - ஒருமருங்கு ஓடாது நிகழும் மனநிகழ்ச்சி.

---

1. தவறவிட்ட நல்ல அணியை மீளக் கண்டெடுத்தால் தோன்றும் இன்பம்போல.

2. நினைத்த காரியத்தை நிறைவேற்றி முடித்த காலத்துத் தோன்றும் இன்பம் போல இனியவள்.

3. விட்டு நீங்கிச் சென்ற நண்பரைக் கண்டபோது உண்டாம் இனிமையினும் இனியவள்.

"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி" (குறள். 118)

என வரும்.

அருளாவது - எல்லாவுயிர்க்கும் அளிசெய்தல்.

"அரிதாய அறனெய்தி அருளியோர்க் களித்தலும்" (கலி. 11)

என்றாற்போல வருவது.

தன்மை யென்பது - சாதியியல்பு.

பார்ப்பார், அரசர், இடையர், குறவர் என்றின்னோர்மாட்டு ஒருவரையொருவர் ஒவ்வாமற் கிடக்குமியல்பு. அது மெய்க்கடமை[1]யின் கண் வேறுபட்டு வருதலின் மெய்ப்பாடாயிற்று.

" வயலைக் கொடியின் வாடிய மருங்குல்
உயவ லூர்திப் பயலைப் பார்ப்பான்"[2] (புறம். 315)

என்றும்,

"புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய
எய்கணை கிழித்த பகட்டெழில் மார்பின்
மறலி அன்ன களிற்றின்மிசை யோனே"[3] (புறம். 13)

என்றும்,

"காயாம்பூக் கண்ணிக் கருந்துவ ராடையை
மேயு நிரைமுன்னர்க் கோலூன்றி நின்றாயோர்
ஆயனை யல்லை"[4] (கலி. 108)

என்றும்,

"தேனோடு நீடு மயிற்குற மாக்கள்"[5]

என்றும் வரும்.

அடக்கம் என்பது - மனமொழிமெய்யி னடங்குதல். அது பணிந்த மொழியும் தானை மடக்கலும்[6] வாய் புதைத்தலும் போல்வன.

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்" (குறள். 126)

என்றும்,[7]

---

1. உடலாற் கொள்ளப்படும் கடமை
2. வாடிய மருங்குலுடைய பார்ப்பான்.
3. கவசம் சிதைய எய்த கணை கிழித்த மார்பினையுடைய - எமன் போன்ற யானைமிசை யிருந்தோனாகிய அரசன்.
4. காயாம்பூ மாலையும் துவராடையும் உடையையாய் மேயும் பசுக்களின் முன்னர்க் கோலூன்றி நின்றோனே! நீ இடைமகன் அல்லை.
5. தேனோடு வரும் மயிற்பீலியுடைய குறவர் மாக்கள்.
6. தானைமடக்கல் - ஆடையை மடக்குதல்.
7. இது மனவடக்கம்.

"யாகாவா ராயினும் நாகாக்க" (குறள். 127)

என்றும்,[1]

"நிலையில் திரியா தடங்கியான் தோற்றம்" (குறள். 124)

என்றும்[2] வருவன. இதுவும்[3] அடங்காமை போலாமையின்[4] மெய்ப்பாடாயிற்று.

வரைவு என்பது - செய்யத் தகுவனவும் தவிரத் தகுவனவும் வரைந்து ஒழுகும் ஒழுக்கம். அது.

"பெண்விழைந்து பின்செலினும் தன்செலவிற் குன்றாமை
கண்விழைந்து கையுறினுங் காதல் பொருட்கின்மை"
(திரிகடுகம், 29)

என்றாற் போல[5] வருவன.

அன்பு என்பது - பயின்றார்மாட்டுச் செல்லுங் காதல்.

"புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப் பன்பி லவர்க்கு" (குறள். 79)

என்பதனான் அறிக.

கைம்மிகல் என்பது - குற்றமாயினுங் குணமாயினும் அளவின் மிகுதல்.

அது நிலையின் வேறுபடுதலின் மெய்ப்பாடாயிற்று. கையென்பது அளவு குறித்ததோர் இடைச்சொல்.

"காதல் கைம்மிகல்" (தொல்.மெய்ப்பாட்டியல், 23)

என்றும்,

"குணனிலனாய்க் குற்றம் பலவாயின்" (குறள். 868)

என்றும் இவ்வாறு வருவன.

நலிதல் என்பது - பிறரை நெருக்குதல்.

அதன்கண் நிகழும் மனநிகழ்ச்சி நலிதலாயிற்று. இதுவும்[6] மேற்சொல்லப்பட்ட எட்டும்[7] இன்மையின் ஈண்டு ஓதப்பட்டது.

---

1. இது மொழியடக்கம்.
2. இது மெய்யடக்கம்.
3. இதுவும் - அடக்கமும்
4. அடங்காமை போலாமை - அடங்காமைபோல் ஆகாமை - அடங்குதல்.
5. பெண்விழைந்து அவள் ஊடல் தீர்க்கப் பின் சென்றாலும் ஒருவன் தன் நடையில் ஒழுக்கத்தில் குறையாமை, கண் பார்த்து விழையக் கையகத்துத் தானே வந்து சேரினும் பொருளிடத்துக் காதல் இல்லாமை.
6. இது - நலிதல்
7. எட்டு - நகை முதலிய எட்டும்

"பகைநலியப் பாசறையு ளான்" (நெடுநல். இறுதிவெண்பா)

என வரும். பிறவும் அன்ன.

சூழ்ச்சி என்பது - எண்ணம்.

"சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்"[1] (குறள். 445)

இதுவுமோர் மனநிகழ்ச்சி.

வாழ்த்தல் என்பது - பிறனை வாழ்த்துதல்.

அதுவும் மேற்கூறப்பட்டன[2] போலாமையான் வேறோர் மெய்ப்பாடாக ஓதப்பட்டது.

"வாழி யாதன் வாழி" (ஐங்குறு. 6)

என்றும்,

"எங்கோ வாழிய குடுமி" (புறம். 9)

என்றும் இவ்வாறு வருவழி, ஆண்டு வரும் மனநிகழ்ச்சி மெய்ப்பாடாம். அஃதேல் வைதலும் மெய்ப்பாடாதல் வேண்டும் எனின் அது வெகுட்சியின் முதிர்வு. இது அன்பின் முதிர்வாகாதோ எனின், அன்பின்றியும் அரசன் முதலாயினாரைச் சான்றோர் வாழ்த்துதலின் அடங்காதென்க.

நாணல் என்பது - தமக்குப் பழிவருவன செய்யாமை.

"பிறர்பழியுந் தம்பழியும் நாணுவார் நாணுக்
குறைபதி[5] என்னு முலகு" (குறள். 1015)

" நாணால் உயிரைத் துறப்பர்; உயிர்ப்பொருட்டால்
நாண்துறவார், நாண்ஆள் பவர்" (குறள். 1017)

என வரும்.

துஞ்சல் என்பது - உறக்கம். அதுவும் உறங்காமை போலாமையின் மெய்ப்பாடாயிற்று.

"... முனிவின்றி
நனந்தலை யுலகமுந் துஞ்சும்" (குறுந். 6)

என வரும்.

அரற்று என்பது - உறக்கத்தின்கண் வரும் வாய்ச்சோர்வு.

அதுவும் ஏனைச் சொல்லின் வேறுபடுதலின் அரற்றென ஒரு மெய்ப்பாடாயிற்று. முன் உறக்கம் வைத்தலானும் பின் கனவு வைத்தலானும் இப் பொருள் உரைக்கப்பட்டது.

---

1. மன்னவன் தன் அமைச்சரைக் கண்ணாகக் கொண்டு நடத்தலால் ஆராய்ந்து எண்ணும் அவ் வமைச்சரை ஆராய்ந்து கொள்க.

2. நகை முதலிய எட்டும்.

3. நாணுக்குறைபதி - நாணத்துக்கு உறைவிடம்

"பாயல்கொண் டென்தோட் கனவுவா ராய்கோல்
தொடிநிரை முன்கையாள் கையாறு கொள்ளாள்
கடிமனை காத்தோம்ப வல்லுவள் கொல்லோ
விடுமருப்பி யானை விலங்குதேர்க் கோடும்
நெடுமலை வெஞ்சுரம் போகி நடுநின்று
செய்பொருள் முற்று மளவு"[1] **(கலி. 24)**

என வரும்.

இது, களவியலின்பாற் படுமெனின் அரற்றென்பது ஒரு பொருளைப் பலகாற் கூறுதல்; அஃது அப் பொருண்மேற் காதலாற் கூறுதலின் அதுவுமோர் மெய்ப்பாடாயிற் றெனவுமாம்.

"பொன்னார மார்பிற் புனைகழற்காற் கிள்ளிபேர்
உன்னேனென் றூழுலக்கை பற்றினேற் - கென்னோ
மனனொடு வாயெல்லா மல்குநீர்க் கோழிப்
புனல்நாடன் பேரே வரும்"[2] **(முத்தொள். 104)**

என வரும் என்பது கொள்க. கனவுநிலை நனவு போலாமையின் மெய்ப்பாடாயிற்று.

"நனவினாற் கண்டதூஉ மாங்கே கனவுந்தான்
கண்ட பொழுதே இனிது"[3] **(குறள். 1215)**

என வரும்.

முனிதல் என்பது - வெறுத்தல்.

"காலை யெழுந்து கடுந்தேர் பண்ணி
வாலிழை மகளிர்த் தழீஇச் சென்ற
மல்லல் ஊரன் எல்லினன் பெரிதென
மறுவருஞ் சிறுவர் தாயே
தெறுக அம்மஇத் திணைப்பிறத் தல்லே"[4] **(குறுந்.45)**

எனக் குடிப்பிறத்தலை வெறுத்தவாறு காண்க.

நினைத்தல் என்பது - கழிந்ததனை நினைத்தல். அது மறந்தாங்கு மறவாது பின்புந் தோற்றுதலின் மெய்ப்பாடாயிற்று.

---

1. தலைவி தோழியிடம் கூறுவது: என் தோளில் படுக்கைகொண்டு தூங்கும் தலைவர் பின்வருமாறு கனவு காண்பாராயினார்: யானையானது நீர்வேட்கையால் கானல்நீரை நீர் எனக் கருதி ஓடும்படியான மலையிடத்துச் சுரவழியே யாம் சென்று நடுநிலையாக இருபெரு வேந்தர்க்குத் தூது சென்று செய்யும் செயலை முற்ற முடித்து வருமளவும் தொடியுடைய முன்கையுடைய தலைவி செயலறவு கொள்ளாளாய் மனைக்கண் இருந்து அறம் காத்து ஓம்பவல்லளாவாளோ?- இது கனவில் அரற்றியது.

2. சோழன் பேரை நினையேன் என்று முறையாக உலக்கை பற்றி இடிக்கத் தொடங்கினேன்; ஆனால் எனக்கு மனத்திலும் வாயிலும் அப் புனல்நாடன் பேரே வரும் என்ன காரணமோ?

3. தோழியிடம் தலைவி கூறியது: கனவில் தலைவனைக் கண்டு கூடிப்பெற்ற இன்பம் கண்டபொழுதே இனிதாயது; அதுபோலவே நனவில் கூடிப் பெறும் இன்பமும் அப்பொழுதளவே இனிதாகும். இரண்டும் ஒன்றே.

4. காலையில் எழுந்து விரையும் தேரை அலங்கரித்துச் சென்று பரத்தையரைத் தழுவிச் சென்ற தலைவன் பொலிவுடையன்; சிறுவர் தாயாகிய தலைவி துன்புறுவாள்; எனவே இச் சீரிய குடியிற் பிறத்தல் துன்பமேயாகும்.

"நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்
சினைப்பது போன்று கெடும்"[1] (குறள். 1203)

வெரூஉதல் என்பது - அச்சம்போல நீடுநில்லாது கதுமெனத் தோன்றி மாய்வதோர் குறிப்பு. அதனைத் துணுக்கு என்றா னென்பது.

"ஒரூஉநீ எங்கூந்தல் கொள்ளல்யா நின்னை
வெரூஉதுங் காணுங் கடை" (கலி. 87)

என்றவழி அஞ்சத்தகுவது கண்டு அஞ்சுதலின்மையும் அஞ்சினார்க்குள்ள வேறுபாடு அதன் பின் நிகழாமையுங் காண்க.[2]

மடி என்பது - சோம்புதல்.

"மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்
கடிமை புகுத்தி விடும்"[3] (குறள். 608)

என்றவழி மடியென்பதோர் மெய்ப்பாடுண்மை யறிக.

கருதல் என்பது - குறிப்பு.

"குறிக்கொண்டு நோக்காமை அல்லா லொருகண்
சிறக்கணித்தாள் போல நகும்"[4] (குறள். 1095)

என்றவழிக் குறிக்கோள் என்பதோர் மெய்ப்பாடுண்மை யறிக.

ஆராய்ச்சி என்பது - ஒரு பொருளைக்குறித்து அதன் இயல்பு எத்தன்மைத்தென வாராய்தல்.

ஆராய்தல் எனினுந் தெரிதல் எனினுந் தேர்தலெனினும் நாடலெனினும் ஒக்கும்.

"நன்மையும் தீமையும் நாடி நலம்புரி" (குறள். 511)

"ஆயும் அறிவினர்" (குறள். 918)

"தேரான் பிறனைத் தெளிந்தான்" (குறள். 508)

எனவும் ஆராய்த லென்பது தோற்றியவாறு காண்க.

விரைவு என்பது - ஒரு பொருளைச் செய்ய நினைத்தான் அது தாழ்க்கில் அப் பயன் எய்தான், கடிதின் முடித்தல் வேண்டுமெனக் குறித்த மனநிகழ்ச்சி.

---

1. எனக்குத் தும்மல் எழுவதுபோலத் தோன்றிக் கெடுகின்றது; அதனால் தலைவன் என்னை நினைப்பவர் போல இருந்து நினையாரோ? - தலைவி தோழியிடம் கூறியது.

2. வெருவுதும் என்றாலும் அஞ்சுதலும் அஞ்சி நீங்குதலும் இல்லையாதலின் வெரூஉதல் என்பது துணுக்குறுதல் என்ற பொருளாயிற்று.. பொருள் : எம் கூந்தலைத் தொடாதீர்; நும்மைக் காணும்போது துணுக்குறுகின்றேம்.

3. சோம்பல் குடிப்பிறந்தார்கண் தோன்றின் அது தன் பகைவர்க்கு அடிமையாக்கிவிடும். மடிமை தங்கின் என்று அது செயலுடையதுபோல் கூறலின் மடிமையும் மெய்ப்பாடாம் என்பது.

4. நேரே குறிப்பிட்டு என்னைப் பார்க்கவில்லை என்பதல்லால் தான் தன் ஒரு கண்ணால் தாழ்த்திப் பார்ப்பவள்போல் நகுவாளானாள்.

"கன்றமர் கறவை மான
முன்சமத் தொழிந்ததன் தோழற்கு வருமே"[1] (புறம். 275)

" போழ்தூண் டூசியின் விரைந்தன்று மாதோ"[2] (புறம். 2)

என வரும். பிறவு மன்ன.

உயிர்ப்பு என்பது - முன்பு விடும் அளவினன்றிச் சுவாதம் நீள விடுதல்.

" -- பானாட்
பள்ளி யானையி னுயிர்த்தென்
உள்ள மின்னுந் தன்னுழை யதுவே"[3] (குறுந். 142)

என வரும்.

கையாறு என்பது - காதலர் பிரிந்தால்வருந் துன்பமும் அந் நிகர னவும் வருவது.

"தொடிநிரை முன்கையாள் கையாறு கொள்ளாள்
கடிமனை காத்தோம்ப வல்லுவள் கொல்லோ" (கலி. 24)

என்றவழிக் கையாறென்பதும் ஓர் மெய்ப்பாடாயிற்று.

இடுக்கண் என்பது - துன்பமுறுதல்.

மேலதனோடு[4] இதனிடை வேறுபாடு என்னையெனின், கையாறு என்பது இன்பம் பெறாமையான் வருந்துன்பம்; இடுக்கணாவது துன்பமாயின வந்துறுதல்.

" அடுக்கி வரினு மழிவிலா னுற்ற
இடுக்கண் இடுக்கட் படும்"[5] (குறள். 625)

என்றவழி இடுக்கணென்பது வருவதொன்றாகக் கூறியவாறு[6] காண்க.

கையாறென்பது - மனத்தின்கண் நிகழ்வதோர் மெய்ப்பாடு.

இடுக்கணென்பது - மெய்யானுந்[7] தோற்றுவதோர் மெய்ப்பாடு.

பொச்சாப்பு என்பது - மறத்தல்.

---

1. முன்னாட் போரில் இறந்த தன் தோழற்காகக் கன்றை விரும்பி விரையும் பசுவென விரைந்து வருவான்.
2. பிளப்பை (கிழிசலை) இணைக்கும் (தைக்கும்)ஊசியைப் போல விரைந்தது.
3. என் உள்ளமானது இன்றுகூடப் பாதியிரவில் பள்ளியில் யானைபோலப் பெருமூச்சு விட்டு அவனிடமாயது.
4. மேலது - மேல்வரும் கையாறு
5. இடுக்கணுக்கு அழியாதவன்பால் அடுக்கடுக்காக வந்தாலும் வந்த துன்பங்கள் துன்பப்படுமேயன்றி அவன் துன்பப்படான்.
6. வருவதொன்றாகக் கூறியவாறு என்றது அடுக்கிவரினும் என்றதை.
7. மெய்யானும் - உடம்பானும்

"பொருள் தீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருள்தீர்ந்த
மாசறு காட்சி யவர்"[1] (குறள். 199)

என்பதனாற் பொச்சாப்பு மறத்தலாயிற்று.

பொறாமை என்பது - பிறர்க்கு ஆக்க முதலாயின கண்டவழி யதனைப் பொறாது நடக்கும் மனநிகழ்ச்சி. அதனை அழுக்காறு என்ப.

"அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்" (குறள். 168)

என்றவழி அழுக்காறு என ஒரு மெய்ப்பாடு உளதாகியவாறு கண்டுகொள்க.

வியர்த்தல் என்பது - தன் மனத்தின் வெகுட்சி தோன்றியவழிப் பிறப்பதோர் புழுக்கம்.

"பொள்ளென வாங்கே புறம்வேரார் காலம்பார்த்
துள்வேர்ப்பர் ஒன்றி யவர்."[2] (குறள். 487)

இதன்கண் உள்வேர்ப்பர் என்றதனான் மனநிகழ்ச்சி ஆகியவாறு காண்க.

ஐயம் என்பது - ஒரு பொருளைக் கண்டவழி யிதுவெனத் துணியாத நிலைமை.

"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு" (குறள். 1081)

என்றவழி ஐயம் மனத்தின்கண் நிகழ்ந்தவாறு காண்க.

மிகை என்பது - ஒருவனை நன்குமதியாமை.

"மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்
தகுதியான் வென்று விடல்."[3] (குறள். 158)

இதனுள் மிகுதியென்பது நன்குமதியாமையாம்.

நடுக்கம் என்பது - யாதானும் ஒரு பொருளை இழக்கின்றோமென வரு மனநிகழ்ச்சி.

"கொடுங்குழாய் துறக்குநர் அல்லர்
நடுங்குதல் காண்மார் நகைகுறித் தனரே"[4] (கலி. 13)

என வரும். இத்துணையும் கூறப்பட்டன அகத்திற்கும் புறத்திற்கும் பொது வென்று கொள்க. (12)

---

1. மயக்கம் தீர்ந்த குற்றமற்ற அறிவினையுடையார் பொருளற்றனவற்றை மறந்தும் கூறார்.
2. ஒள்ளிய அறிவுடையார் திடீரென உடம்பில் வியர்வை கொள்ளார். காலம் வரும் வரை பார்த்திருந்து உள்ளுள்ளே வேர்ப்பர்.
3. பிறரை நன்கு மதியாமையால் தன்னிடம் தீயன செய்தாரை அறிவுடையார் தம் தகுதியால் அவரை வெல்க.
4. வளைந்த குழையணிந்த தலைவியே! தலைவர் நம்மைப் பிரிவாரல்லர்; நாம் நடுங்குவதைக் கண்டு சுவைக்க நகையாகப் பிரிவுபற்றிச் சொன்னார்.

பேராசிரியர்

260. ஆங்கவை யொருபா .... கடையே.

இச் சூத்திரம் மேற்கூறிவந்த எண்ணான்குமன்றி இவை முப்பத்திரண்டும் அவை போல மெய்ப்பா டெனப்படுமென்ப துணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஆங்கவை ஒரு பாலாக - எள்ளன் (252) முதலாக விளையாட்(259)டிறுதியாகச் சொல்லப்பட்ட முப்பத்திரண்டும் ஒருகூறாக; ஒருபாலென்பது, இனிச் சொல்லுகின்ற ஒருகூறென்றவாறு பின்னர் அவற்றையெல்லாம் எண்ணி 'இவையு முளவே யவையலங் கடையே' (260) என்றான். ஈண்டெண்ணப்பட்டவையே ஆண்டு அடங்குவனவும் உள; அப் பொருண்மைய வல்லாதவிடத்து இவை முப்பத்திரண்டும் ஈண்டு மெய்ப்பாடெனப்படும் என்றவாறு.

இவை முப்பத்திரண்டெனத் தொகை கூறியதிலனாலெனின், 'ஆங்கவை யொருபா லாக வொருபால்' என்றானாகலின் இரு கூறெனப்படுவன தம்மி னொத்த எண்ணாதல் வேண்டுமாகலின் அவை முப்பத்திரண்டெனவே இவையும் முப்பத்திரண்டென்பது எண்ணி உணர வைத்தானென்பது.

உடைமை யென்பது, செல்வம்; செல்வநுகர்ச்சியாயின் உவகைப் பொருளாம்; இஃது அன்னதன்றி நுகராதே அச் செல்வந்தன்னை நினைந்து இன்புறுதற்கு ஏதுவாகிய பற்றுள்ளம்; அஃதாவது, 'நதிமேனின்ற மரம்' போலச் செல்வமுடைமையான் வரும் மெய்வேறுபாடு.[1]

இன்புறலென்பது அவ் வுடைமையை நினையுந்தோறும் இடையிட்டுப் பிறக்கும் மனநிகழ்ச்சி.

நடுவுநிலையென்பது ஒன்பது சுவையுள் ஒன்றென நாடகநிலையுள் வேண்டப்படுஞ் சமநிலை; அஃதாவது,

> "செஞ்சாந் தெறியினுஞ் செத்தினும் போழினு
> நெஞ்சோர்ந் தோடா நிலைமை"[2]

அது, காமவெகுளி மயக்க நீங்கினோர்கண்ணே நிகழ்வது; இது சிறுவரவிற்றாகலான் அவற்றொடு கூறினான்.

அருளலென்பது, மக்கண் முதலிய சுற்றத்தாரை யருளுதல்; அஃது,

> "அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்" (கலி. 11)

என்றாற்போல வருவது. ஆண்டைக்[3] கருணையினை[4] அழுகையென் றமையின் இஃது அதனோடடங்காது.

---

1. நதிமேல் நின்ற மரம் செழிப்பாக வளரும் - பொலிவுடனிருக்கும். அதுபோலச் செல்வத்தில் புரளுபவன் உடல் பொலிவும் வளமும் பெறுவான்.

2. செஞ்சந்தனம் பூசினும் கத்திகொண்டு செதுக்கினும் வாள்கொண்டு பிளக்கினும் மனமானது ஆராய்ந்து தளராமைக்குரிய நிலைமை.

3. ஆண்டை - அழுகைபற்றிய சூத்திரத்தில் 4. கருணை - இரக்கம்

தன்மையென்பது, சாதித்தன்மை; அவையாவன: பார்ப்பாராயிற் குந்தி மிதித்துக் குறுநடை கொண்டு வந்து தோன்றலும், அரசராயின் எடுத்த கழுத்தொடும் அடுத்த மார்பொடும் நடந்து சேறலும், இடையராயிற் கோற்கையுங் கொடுமடியுடையும் விளித்த வீளையும்[1] வெண்பல்லுமாகித் தோன்றலுமென் றின்னோரன்ன வழக்குநோக்கிக் கொள்க.

அடக்கமென்பது, உயர்ந்தோர்முன் அடங்கியொழுகும் ஒழுக்கம்; அவை: பணிந்தமொழியுந் தணிந்த நடையுந் தானைமடக்கலும் வாய்புதைத்தலும் முதலாயின.

வரைதலென்பது, காப்பன காத்துக் கடிவன கடிந்தொழுகும் ஒழுக்கம்; அவை: பார்ப்பாராயின் முத்தீ வேட்டலும் புலவுங் கள்ளும் முதலாயின கடிதலுமென் றின்னோரன்ன கொள்க. வரைதலென்பது தொழிலாதலான் இது தன்மையெனப்படாது.

அன்பென்பது, அருட்கு முதலாகி மனத்தில் நிகழு நேயம்; அஃதுடையார்க்குப் பிறர்கட் டுன்பங் கண்டவழிக் கண்ணீர் விழுமாதலின் அவ் வருளானே அன்புடைமை விளங்குமென்பது. இவையெல்லாந் தத்த மனத்தி னிகழ்ச்சியை வெளிப்படுப்பனவாகலின் மெய்ப்பாடெனப்பட்டன. இனி வருகின்றவற்றிற்கும் இஃதொக்கும்.

கைம்மிகலென்பது, ஒழுக்கக்கேடு; அது சாதித் தருமத்தினை நீங்கினமை தன் னுள்ளநிகழ்ச்சியானே பிறர் அறியுமாற்றால் ஒழுகுதல்.

நலிதலென்பது, பிறர்க்கின்னாசெய்து நெருங்குதல்; அது தீவினை மாக்கட்கண் நிகழும். அவரைக் கண்டு அச்சம் எழுந்ததாயின் அஃது அச்சத்தினுள் அடங்குமாகலின் அஃதன்று இஃதென்பது.

சூழ்ச்சியென்பது சுழற்சி; சூழ்வருவானைச் சுழல்வருமென்ப வாகலின்; அது வெளிப்படுவதோர் குறிப்பின் அவன்கட் டோன்றின் அதுவும் மெய்ப்பாடு; அஃதாவது, மனத்தடுமாற்றம்.

வாழ்த்தலென்பது, பிறரால் வாழ்த்தப்படுதல்; இது பிறவினையன்றோவெனின், ஒருவனை நீடு வாழ்க என்று வாழ்த்தல் பிறவினையாயினும் அவன் வாழ்விக்கப்படுதலின் அவன் அவ்வாறு கூறல் அமையுமென்பது.

நாணுதலென்பது, நாணுள்ளம் பிறர்க்கும் வெளிப்பட நிகழும் நிகழ்ச்சி.

துஞ்சலென்பது, உறக்கம்; அது நடந்துவருகின்றான்கண்ணும் விளங்கத் தோன்றுதலின் அதுவும் மெய்ப்பாடெனப்பட்டது.

அரற்றென்பது, அழுகையன்றிப் பலவுஞ் சொல்லித் தன்குறை கூறுதல்; அது, காடுகெழு செல்விக்குப் பேய்கூறும் அல்லல்போல வழக்கினுள்ளோர் கூறுவன.

---

1. விளித்த வீளை - ஒருவரை விளிக்க மேற்கொள்ளும் சீழ்க்கையடித்தல்

கனவென்பது, வாய் வெருவுதல்; அதனானும் அவனுள்ளத்து நிகழ்கின்றதொன்று உண்டென்றறியப்படும்.

முனிதலென்பது, வெறுத்தல்; அஃது, அருளுஞ் சினமுமின்றி இடைநிகர்த்தாதல்; 'வாழ்க்கை முனிந்தான்' எனவும்,

"உறையுண் முனியுமவன் செல்லு மூரே"[1] (புறம். 96)

எனவுஞ் சொல்லுபவாகலின்.

நினைதலென்பது, விருப்புற்று நினைத்தல்; 'நின்னை மிகவும் நினைத்தேன்' என்பது வழக்காதலின்; அந் நினைவுள்ளம் பிறர்க்குப் புலனாதலின் மெய்ப்பாடாயிற்று.

வெரூஉதலென்பது, விலங்கும் புள்ளும் போல வெருவிநிகழும் உள்ளநிகழ்ச்சி; அஃது அஞ்சவேண்டாதன கண்டவழியும் கடிதிற் பிறந்து மாறுவதோர் வெறி.

மடிமை யென்பது, சோம்பு.

கருதலென்பது, மறந்ததனை நினைத்தல்.

ஆராய்ச்சியென்பது, ஒரு பொருளை நன்று தீதென்று ஆராய்தல்.

விரைவென்பது, இயற்கைவகையானன்றி ஒரு பொருட்கண் விரைவு தொழில்பட உள்ள நிகழுங் கருத்து.

உயிர்ப்பென்பது, வேண்டிய பொருளைப் பெறாதவழிக் கையற[2] வெய்திய கருத்து; அது, நெட்டுயிர்ப்பிற்கு முதலாகலின் அதனையும் உயிர்ப்பென்றானென்பது.

கையாறென்பது, அவ் வுயிர்ப்புமின்றி வினையொழிந்தயர்தல்.

இடுக்கணென்பது, மலர்ந்த நோக்கமின்றி மையனோக்கம் படவரும் இரக்கம்.

பொச்சாப்பென்பது,. அற்றப்படுதல்; அஃதாவது, பாதுகாத்துச் செல்கின்ற பொருட்கண் யாதானும் ஓரிகழ்ச்சியான் இடையறவுபடுதல்.

பொறாமையென்பது, அழுக்காறு; அஃதாவது, பிறர் செல்வங் கண்டவழி வேண்டாதிருத்தல்.

வியர்த்தலென்பது, பொறாமை முதலாயினபற்றி மனம் புழுங்குதல்.

ஐயமென்பது, ஒருபொருண்மேல் இருபொருட்டன்மை கருதி வரும் மனத்தடுமாற்றம்.

மிகையென்பது, கல்லாமையுஞ் செல்வமும் இளமையும் முதலாக வரும் உள்ள மிகுதி.[3]

நடுக்கமென்பது, அன்பும் அச்சமும் முதலாயின உடம்பிற் புலப்படுமாற்றான் உள்ளம் நடுங்குதல்; புதல்வர்க்குப் பிணி இல்வழியும்

---

1. அவன் செல்லும் ஊரில் உறைவதை வெறுக்கும்.

2. கையறவு - செயலற்ற நிலை

3. உள்ள மிகுதி - உள்ளத்தில் தோன்றும் தற்பெருமை

எவனாங்கொலென்று நடுங்குதல் அன்பான் நடுங்குதலாம். அச்சமென்னுஞ் சுவை பிறந்ததன் பின்னர் அதன்வழித் தோன்றிய நடுக்கம் அச்சத்தாற் றோன்றிய நடுக்கமா மென்பது.

இவை முப்பத்திரண்டும் மேற்கூறிய முப்பத்திரண்டும் போல அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவாகி நிகழும் மெய்ப்பாடெனக் கொள்க. இவையெல்லாம் உலக வழக்காகலான் இவ் வழக்கேபற்றி நாடக வழக்குள்ளுங் கடியப்படாவென்றவாறு. மற்றிவற்றை எண்ணிய மாத்திரை யல்லது இலக்கணங் கூறுகின்றிலனாலெனின், சொல்லின் முடியும் இலக்கணத்தவாகலின்[1] சொல்லானாயினானென்பது. உதாரணம் இக்கூறிய வாற்றான் வழக்குநோக்கியுஞ் செய்யுணோக்கியுங் கண்டுணரப்படும். (12)

சிவலிங்கனார்

ஆங்கவை .... அலங் கடையே.

இச் சூத்திரம் மேற்கூறப்பட்ட முப்பத்திரண்டு மெய்ப்பாடுகளுள் அடங்குவனவும் அடங்காதனவுமான மெய்ப்பாடுகள் முப்பத்திரண்டு கூறுகின்றது..

(இ-ள்) முன்னே கூறப்பட்ட முப்பத்திரண்டு மெய்ப்பாடுகளும் ஒருபக்கமாக அமைய மற்றொரு பக்கமாக உடைமை முதலாகக் கூறப்பட்ட அவையும் மெய்ப்பாடுகளாதற்கு உரிமையுள்ளனவாம்; எப்போதெனின் மேற்கூறிய முப்பத்திரண்டனுள் அடங்காவிடின் என்க என்றவாறு.

உடைமை என்பது செல்வம் உடைமை. செல்வம் உடைமையால் எழுவது உவகை என்னும் மெய்ப்பாடு என்பது முற்கூறப்பட்டது. எனவே உடைமை உவகையில் அடங்கும். அதில் அடங்காது வருமாயின் உவகையின் வேறுபட்ட மெய்ப்பாடாகும் உடைமை என்பது. செல்வத்தை நுகரும்போது வருவது உவகை. செல்வம் உடைமையால் அதன்மீது வருவது பற்றுள்ளம். உடைமை என்பது நுகர்ச்சியை நோக்கின் உவகை மெய்ப்பாட்டுக்காம்; பற்றுள்ளத்தை நோக்கின் அதனின் வேறுபட்ட உடைமை மெய்ப்பாடாம். இப்படியே பிறவும் ஆம்.

**257. புகுமுகம் புரிதல் பொறிநுதல் வியர்த்தல்
நகுநய மறைத்தல் சிதைவுபிறர்க் கின்மையொடு
தகுமுறை நான்கே ஒன்றென மொழிப. (13)**

இலக்குவனார்

261. Desiring to be seen (by the lover), having (beads of) sweat on the forehead, concealing the smile,

1. சொல்லின் முடியும் இலக்கணத்தன - சொல்லப்படும் சொல்லிலேயே பொருளும் விளங்கித் தோன்றும் இயல்புடையன.

and losing heart unknown to others - these belong to the group of the first stage in the process of love making.

பி.இ.நா.

இ.வி. 580

மேற்சூத்திரம் முதல் இரண்டு வரிகள்

இளம்பூரணர்

257. புகுமுகம் புரிதல் .... மொழிப.

என்-னின், மேல் அகத்திணைக்கும் புறத்திணைக்கும் பொதுவாகிய மெய்ப்பாடு உணர்த்தி, இனி, அகத்திற்கே யுரியன உணர்த்துகின்றார்; முற்பட்ட அவத்தை பத்தினும்[1] முதலவத்தைக்கண் பெண்பாலார் குறிப்பினால் வரும் மெய்ப்பாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) **புகுமுகம் புரிதல்** என்பது - தலைமகன் புணர்ச்சிக் குறிப்பினனாய்ப் புகுது முகத்தினை[2] மாறுபடாது பொருந்துதல்.

அஃதாவது,

"கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கம்இம் மூன்றும் உடைத்து" (குறள். 1085)

என்றாற் போலக் கூறியவழி ஒருவாது நிற்றல்.[3]

பொறிநுதல் வியர்த்தல் என்பது - அவ்வழி முகம்புக்கு அவனைப் பொருந்திய தலைமகள் உட்கும் நாணும் வந்துழி வரும் நுதல் வியர்ப்பு.

நகுநய மறைத்தல் என்பது - அதன் பின்னர்த் தலைமகன் கூறுவன கேட்டு நகை வந்துழி நயத்தலாகிய விருப்பத்தினைப் புலனாகாமை மறைத்தல்.

சிதைவு பிறர்க்கின்மை என்பது - தன் மனனழிவு பிறர்க்குப் புலனாகாமை நிற்றல். ஒடு எண்ணின்கண் வந்தது.

தகுமுறை நான்கே யொன்றென மொழிப என்பது - இவ்வாறு தகுதியுடைத்தாய் முறைப்பட வருவன நான்கும் முதல் அவத்தைக்கண்[4] நிகழும் மெய்ப்பாடு என்றவாறு. (13)

---

1. அவத்தை பத்து : காட்சி, வேட்கை, ஒருதலையுள்ளுதல், மெலிதல், ஆக்கம் செப்பல், நாணுவரையிறத்தல், நோக்குவஎல்லாம் அவையே போறல், மறத்தல், மயக்கம், சாக்காடு என்பன. (களவியல், 9)

2. புகுதுமுகத்தின் - புகும்பொழுதில், புகுமுகம்புரிதல் - தலைவன் புகும்போது விலகாது - விலக்காது விரும்பி நிற்றல்.

3. ஒருவாது நிற்றல் - விலக்காது நிற்றல். தலைவன் கூறுமாறு தான் அவன் பார்க்க நின்றமையின் புகுமுகம் புரிதல்.

4. முதல் அவத்தை - காட்சி அவத்தை

பேராசிரியர்

261. புகுமுகம் புரிதல் .... மொழிப.

இதன் மேலெல்லாம் அகத்திணைக்கும் புறத்திணைக்கும் பொதுவாகி வரும் மெய்ப்பாடு கூறினான். இனி அகத்திணையுட் பெரும் பான்மையவாகி வரும் மெய்ப்பாடு கூறுவான் தொடங்கி, அவற்றுள்ளுங் களவிற்குச் சிறந்துவரும் மெய்ப்பாடு கூறுவான், ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்டவழி அவ் வெதிர்ப்பாடு தொடங்கிப் புணர்ச்சியளவும் மூன்று பகுதியவாம் மெய்ப்பாடெனவும், புணர்ச்சிப் பின்னர்க் களவு வெளிப்படுந்துணையும் மூன்று பகுதியவாம் அவையெனவும், அவையாறும் ஓரோவொன்று நந்நான்கு பகுதியான் ஒன்றன்பினொன்று பிறக்குமெனவுங் கூறுகின்றான். அவற்றுண் முதலன மூன்றினும் முன்னர் நின்ற ஒரு கூற்றினை இந் நாற் பகுதித் தென்கின்றது இச் சூத்திரமென உணர்க. ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்டவழிக் கரந்தொழுகும் உள்ள நிகழ்ச்சி பெண்பாலதாகலாற் பெரும்பான்மையும் அவள்கண்ணே ஈண்டுக் கூறுகின்ற மெய்ப்பாடு சிறந்ததென்பது.

(இ-ள்) **புகுமுகம் புரிதல்** என்பது, ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்டவழித் தன்னை அவன் நோக்குதற்கண் விரும்பும் உள்ள நிகழ்ச்சி; புகுதலென்பது, தலைமகன் நோக்கிய நோக்கெதிர் தான் சென்று புகுதல்; முகமென்பது அங்ஙனந் தான் புகுதற்கிடமாகிய நோக்கு; நோக்கெதிர் நோக்குதலை முகநோக்குதல் என்பவாகலின் இந் நோக்கினை முகமென்றா னென்பது. புரிதலென்பது, மேவுதல்[1] என்றவாறு; அஃதாவது, தலைமகன் காண்டலைத் தலைமகள் வேட்டல் என்றவாறாம். மற்றிது தலைமகற்கு உரித்தன்றோவெனின், அவன் தான் காண்பினல்லது தற்காண்டலை நயவான்; அது தலைமையன் றாகலினென்பது; அது,

"யானோக்குங் காலை நிலனோக்கு நோக்காக்காற்
றானோக்கி மெல்ல நகும்" (குறள். 1094)

என வரும்.

பொறிநுதல் வியர்த்தல் என்பது, தலைமகன் தன்னை நோக்கியவழி உட்கும் நாணும் ஒருங்குவந் தடைதலின் வியர்பொறித்த நுதலளாதலும்; அது,

"பெரும்புழுக் குற்றநின் பிறைநுதற் பொறிவிய
ருறுவளி யாற்றச் சிறுவரை திறவென"[2] (அகம்.136)

என வரும். இம் மெய்ப்பாடுந் தலைமகற் குரித்தன்று; உட்கும் நாணும் அவற்கின்மையின்.

---

1. மேவுதல் - விரும்புதல்

2. பெரிய புழுக்கத்தால் வந்த பிறைபோலும நுதலில் உள்ள புள்ளிகள் போலும் வியர்வையை இப்போது வந்துறும் காற்று ஆற்றுமாறு சிறிது போது அந் நுதலைக் கவிழ்தலை நீக்கிக் காட்டுவாயாக.

நகுநய மறைத்தல் என்பது, அதன் பின்னர்த் தலைமகன்கட் டோன்றிய குறிப்புகளான் அதற்கேதுவாகிய நயனுடைமை மனத்திற் பிறந்தவழியும் நகாது நிற்றலும்; அது,

"முகைமொக்கு ளுள்ளது நாற்றம்போற் பேதை
நகைமொக்கு ளுள்ளதொன் றுண்டு"[1] (குறள்.1274)

என வரும். மடமையால் தோன்றிய நகையாகலான் இது மறைத்தலுந் தலைமகற்குரித்தன்று; எனவே அவற்காயின் நகை தோன்றப் பெறுமென்பது; மற்று,

"சுரஞ்செல் யானைக் கல்லுறு கோட்டின்" (குறுந்.169)

என்னும் பாட்டினுள் 'நும்மொடு நக்க வால்வெள் ளெயிறே' என நகை கூறிற்றாலெனின், அங்ஙனம் மறைக்கப்பட்ட நகை தலைமகன் அறிந்தது[2] மெய்ப்பாடாமாகலான் அவ்வாறு கூறினானென்பது.

சிதைவு பிறர்க்கின்மை என்பது, அங்ஙனம் நகுநய மறைத்தவழியும் உள்ளஞ் சிதைந்து நிறையழியுமாகலின் அச் சிதைவு (தலைவிக்கன்றிப்) புறத்தார்க்குப் புலனாகாமை நெஞ்சினை நிறுத்தலும் என்றவாறு; அது,

" அகமலி யுவகைய ளாகி முகனிகுத்
தொய்யென விறைஞ்சி யோளே" (அகம். 86)

எனத் தலைமகன் அறிய மெய்ப்பட்ட தென்பது. இதுவுந் தலைமகற்குரித் தன்று; தன் சிதைவுணர்த்தினல்லது மறைக்குந்துணைச் சிதைவின்மையின்; என்னை?

" பெருமையு முரனு மாடூஉ மேன" (98)

என்பவாகலின்.

இவை களவிற் சிறந்தன வாவதல்லது கற்பினுள் வருவனவல்ல என்றுணர்க. 'சிதைவு பிறர்க் கின்மை'[3] எனவே, சிதைவு தலைமக னுணருமென்றானாம்.

தகுமுறை நான்கு என்பது, இங்ஙனம் ஒன்றன்பின் ஒன்று தோன்றுதற்குத் தகுமெனப்பட்ட முறையானே வந்த அந் நான்கும் என்றவாறு; ஒன்றென மொழிப களவிற்கு முதற்கூறென்ப என்றவாறு.

இனி, இவை நான்கும் முறையானே ஒருங்கு வந்த செய்யுள் வருமாறு:

---

1. அரும்பாகிய மொக்கில் நாற்றம் புதைந்துள்ளதுபோல இப் பேதையின் நகையாகிய அரும்பில் என்மாட்டுக் கொண்டது ஒன்றுண்டு.
2. நும்மொடு வாள்வெள் எயிறு நக்கன எனத் தலைவனிடம் கூறியது நகையை மறையாமையை யன்று. மறைத்ததே. தலைவன் அதனை உணரும்படியான மெய்ப்பாடு நிகழ்ந்தமையின் தலைவி வெளிப்படையாக நகுதல் செய்தது போலக் கூறப்பட்டது.
3. பிறர்க்கின்மையாவது தலைவனை யொழிந்த பிறர்க்கின்மையாம்.

"யான்றற் காண்டொறுந் தான்பெரிது மகிழாள்
வாணுதல் வியர்ப்ப நாணின ளிறைஞ்சி
மிகைவெளிப் படாது நகைமுகங் கரந்த
நன்னுத லரிவை தன்மனஞ் சிதைந்ததை
நீயறிந் திலையா னெஞ்சே
யானறிந் தேனது வாயா குதலே."

இஃது, இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கிய தலைமகன் தன்னெஞ்சிற்குச் சொல்லியது. இதனுள் 'தான் பெரிது மகிழாள்' என்புழிச் சிறிது மகிழுமென்றமையான் இது புகுமுகம் புரிதலாயிற்று. 'வாணுதல் வியர்ப்ப நாணின ளிறைஞ்சி' என்பது பொறிநுதல் வியர்த்தல். 'நகைமுகங் கரந்த' என்பது நகுநய மறைத்தல். 'மிகை வெளிப்படாது' என்புழி மேல் 'அன்ன பிறவு மவற்றொடு சிவணி' (267) என்னும் புறனடையாற் றழீஇயின நகை மொக்குளும் பெற்றாம். 'தன்மனஞ் சிதைந்ததை, நீயறிந் திலையால்' என்பது சிதைவு பிறர்க்கின்மை. பிறவும் அன்ன. (13)

சிவலிங்கனார்

புகுமுகம் .... மொழிப.

களவொழுக்கத்தின் படிநிலைகள் (இளம்பூரணர் கருத்துப்படி) காட்சி, வேட்கை, ஒருதலையுள்ளுதல், மெலிதல், ஆக்கம் செப்பல், நாணுவரை இறத்தல், நோக்குவ எல்லாம் அவையே போறல், மறத்தல், மயக்கம், சாக்காடு எனப் பத்து வகைப்படும். அவற்றுள் முதல் ஆறுமே களவில் நிகழ்வன. ஏழாவது பெருந்திணைப்பாற்படும். மற்றையன தன் நினைவிழக்கும் தன்மைய. ஆதலின் கூறப்படா. எனவே முதல் ஆறுமே இந் நூலிற் கூறப்படுவன. அவ் வாறனுள்ளும் முதல் மூன்றும் இயற்கைப் புணர்ச்சிக்கு நிமித்தமாய் முன் நிகழ்வன. பின் மூன்றும் மற்றைப் புணர்ச்சிகளுக்கு நிமித்தமாய் இயற்கைப் புணர்ச்சிக்குப் பின் நிகழ்வன. இச் சூத்திரம் முதற் படிநிலை (அவத்தை)யாகிய காட்சிநிலை நான்கு வகைப்படும் என்கின்றது.

"புகுமுகம் புரிதல் பொறிநுதல் வியர்த்தல்
நகுநயம் மறைத்தல் சிதைவுபிறர்க் கின்மை
தகுமுறை நான்கே ஒன்றென மொழிப"

என்பது அந் நான்கும் கூறுவது. அந் நான்கும் காட்சி என்னும் படிநிலையில் அடங்கும். இயற்கைப் புணர்ச்சிக்கு முன் நிகழும் முதற் காட்சியின் தொடர்பானவை அவை. அவையும் பின்வரும் படிநிலைகளும் பெரும்பாலும் தலைமகட்கே யுரியன.

முதலில் தலைவனும் தலைவியும் எதிர்ப்பட்டபோது தலைவி அவன் தன்னைக் காணல் வேண்டும் என்னும் விருப்பினளாய் நிற்பள். அது புகுமுகம் புரிதல் என்னும் மெய்ப்பாடாகும். முகம் என்பது தன் இடம் என்னும் பொருளது. முகம்புகுபுரிதல் என மாற்றித் தலைவி தன்

முகத்துத் தலைவன் புகுதலை (காணுதலை) விரும்புதல் எனப் பொருள் கொள்க. முதலிற் கண்டவுடன் தலைவியிடம் தோன்றுவது இவ் விருப்பமே.

அவ் விருப்பப்படியே தலைவன் தன்னைக் காணும்போது நாணத்தால் அவள் நுதல் வியர்வை கொள்வாள். பிற இடங்கள் ஆடையால் மறைக்கப்படுதலின் வெளிப்படையில் நுதல்வியர்ப்பே தோன்றுதலின் பொறிநுதல் வியர்த்தல் மெய்ப்பாடு கூறப்பட்டது.

தலைவன் தலைவியின் நிலையறிந்து சிலசொல் சொல்லுங் காலத்தில் சிறிது நகை தோன்றவும் அதனையும் அவன்பால் சென்ற விருப்பத்தையும் தலைவி மறைப்பாள். அதனால் நகுநயம் மறைத்தல் அடுத்துக் கூறப்பட்டது. நகுநயம் என்பதை நகுதலும் நயமும் என்க. நகு முதல்நிலைத் தொழிற்பெயர்.

அங்ஙனம் மறைப்பினும் தலைவி மனம் தலைவன்பால் ஈடுபட்டு நிறை தளர்தலின் அதனை அவள் பிறர்க்குப் புலனாகாமல் மறைப்பாள். சிதைவு என்பது மனம் நிறைதளர்தல். பிறர்க்கு என்றது தலைவனை யொழித்துக் காண்பார்க்கு ஆயிற்று. அதனால் தலைவியின் சிதைவைத் தலைவன் அறிவான் என்க.

இவை நான்கும் தலைவன்மாட்டுத் தலைவிக்கு வேட்கை நிகழ்தற்கு முன் நிகழ்வன ஆதலின் காட்சி மெய்ப்பாடுகளாயின.

258. கூழை விரித்தல் காதொன்று களைதல்
ஊழணி தைவரல் உடைபெயர்த் துடுத்தலொடு
கெழீஇய நான்கே இரண்டெனா மொழிப. (14)

இலக்குவனார்

262. Spreading out the hair loosely, falling down of the ear-ornaments, putting the ornaments in order on hand and fingers, and making changes in dressing - these belong to the second stage in order.

பி.இ.நா.

இ.வி. 580.

மேற்சூத்திர முதல் இரண்டு வரிகளே.

இளம்பூரணர்

258. கூழை விரித்தல் .... மொழிப.

என்-னின், இரண்டாம் அவத்தை[1]யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) கூழைவிரித்தல் முதலாகச் சொல்லப்பட்ட முறைமையுடைய நான்கும் இரண்டாம் அவத்தை மெய்ப்பாடு என்றவாறு.

கூழைவிரித்த லாவது - மேல் நகுநயமறைத்தாள் காதன்மேல் வேட்கை செல்லுமாயின் வாளாது நிற்றலாற்றாது மயிரினைக் குலைத்தல்.

காதொன்று களைதல் என்பது - காதிலணிந்த தொன்றை விழப்பண்ணி யதனைத் தேடுகின்றார் போல நிற்றல்.

ஊழணி தைவரல் என்பது - முறைமுறையாக அணிந்தவணியைத் தைவருதல் என்றவாறு.

உடைபெயர்த் துடுத்தல் என்பது - ஆடையைக் குலைத்துடுத்தல்.

அவை நான்குங் காமத்திற் குறியிலாதார் தலைமக்கள் முன் செய்யாமையாற் றனது காமக் குறிப்பினானும் அவள் வாளாது நிற்பின் இதற்குக் காரணம் என்னையெனப் பிறர் ஐயப்படாமற் சிறிது பொழுதாயினும் இவ் விடை நிற்கலாகும் எனவும் இவை நிகழ்த்தும் என்றவாறு.[2] (14)

பேராசிரியர்

262. கூழை விரித்தல் .... மொழிப.

இஃது, இரண்டாம் மெய்ப்பாடுணர்த்துதல் நுதலிற்று; என்னை? உள்ளத்துச் சிதைவறிந்தவழி யன்றித் தலைமகளிடைத் தலைமகன் சென்று கையுங்காலும் மெய்யுறத் தீண்டிக் கண்ணுறானாகலின், அங்ஙனஞ் சிதைவு பிறந்தது எழுவாயாகப்[3] பின்னர்த் தலைமகன் மெய்யுற்றவழி நிகழ்ந்த உள்ள நிகழ்ச்சியை இரண்டாவதென்றானென்பது.

(இ-ள்) கூழைவிரித்தன் முதலாகிய நான்கும் முறையானே இரண்டாவதெனப்படும் என்றவாறு.

இவற்றுக்குத் தலைமகள் ஏதுவாவதல்லது, இவைதாம் அவற்கு நிகழாவென்பது.

கூழை விரித்தலென்பது, மெய்யுமெய்யுந் தீண்டியவழி மெல்லியன் மகளிர்க்கு வரும் வேறுபாடு நான்கனுள் முதற்கண்ண தெனப்படும்; என்னை? தன்னுள்ளத்தில் நிகழ்ந்த வேறுபாட்டினை அக்காலத்துத்

---

1. இரண்டாம் அவத்தை - வேட்கை அவத்தை (களவியல், 9).

2. உலகில் காமக்குறிப்பு இல்லாதவரும் மேன்மக்கள் முன்னிலையில் கூழை விரித்தல் முதலிய நான்கும் செய்யமாட்டார். தலைவியும் தலைவன் முன் அவற்றைச் செய்யாது இருப்பின் அது காணும் பிறர் நிற்கக் காரணம் ஏன் என ஐயப்படுவர். அவர் ஐயப்படாமைக்காகச் சிறிதுபொழுது அங்கே நிற்றற்காகவாவது அந் நான்கையும் செய்வாள் என்பது.

3. எழுவாயாக - முதலாவதாக

தலைமகள் நிறையுடையளாகலாற் கரந்தொழுகுதற்பாலல்லளே; அங்ஙனங் கரக்குங்கால் தன்வயத்ததாகிய உடம்புபற்றிவரும் வேறு பாட்டினைத் தாங்கும்; அங்ஙனந் தாங்குங்கால் உடம்பொடு தொடர் புடையவாகி வேறுபட்ட தலைமயிரினது முடி உள்ளநெகிழ்ச்சியானே தன்வயத்த தன்றி நெகிழும்; ஆகலின் இது முற்கூறப்பட்டது. பிற சுவை பற்றியும் உலகினுண் மயிர்க்கு வந்த வேறுபாட்டினைக் கூறுப; என்னை? ஒன்றன் மதுரச்சுவைக்கு அதிசயங் கூறுவார் மயிரினை செவ்வனின்றன வென்பது போலக் கொள்க.(?)[1] அக் கூழை விரித்தற்கு ஏதுவாயினாள் இவளாகலின் அதனைச் சினைவினையானன்றி முதல்வினையாற் கூறினா னென்பது.

காதொன்று களைதலென்பது, உறுப்பிடைப் பூட்டுறப் புனையாது பெய்து வைத்தனவாதலால் தோடு முதலாயின எளிதின் வீழ்வனவாயின; மற்றவை வீழ்தற்கு ஏதுவாய் நெகிழ்ச்சி நிரம்பத் தோன்றாது இடைநிகர்த்ததாகலின் ஒன்று நிற்ப வொன்று வீழ்தலென்றானென்பது. இது கூழைபோலாது, ஊறுணர்வுடைய உறுப்பாகலிற் காதின் வேறுபாட்டினைக் கூழை வேறுபாட்டின்பின் வைத்தான்;[2] என்னை? கூழையிற் காது தனக்கு உறவுடைமையின்.

ஊழணி தைவரலென்பது, அக் கூழையுந் தோடும் போலப் பெய்யப்படு முறைமையவாகிய வளைகளை முன்கைமேல் இறுகச் செறித்தலும் விரற்செறியினைத் திருத்தலும் முதலாயின. இவை தோடுபோலச் செறிவில்லன அன்மையின் அவற்றுப்பின் வைத்தான்.

உடைபெயர்த்துடுத்த லென்பது, உடுத்த உடையினைப் பலகாலும் அழித்துடுத்தல்; அது கழறொடி போலாது செறிவுடைமையின் அவ் வுடை நெகிழ்ச்சியைத் தொடிநெகிழ்ச்சிக்குப் பின் வைத்தானென்பது; மற்று,

"தொடிஞெகிழ்ந் தனவே தோள்சா யினவே" (குறுந்.239)

எனப் பிரிவின்கண் வந்த வேறுபாட்டினை ஈண்டுக் கூறாரோவெனின், அவை இன்னதன் பின்னர் இன்னது தோன்றுமென்னும் முறைமைய வல்லவாகலின் ஈண்டுக் கூறார்; அவை,

"வினையுயிர் மெலிவிடத் தின்மையு முரித்தே" (268)

என்புழிச் சொல்லப்படுமென்பது. இவற்றிற்குச் செய்யுள்:

---

1. தெளிவாக இல்லை. ஒருவாறு பின்வருமாறு விளக்கம் கூறலாம். ஒருவர் ஒரு பொருளை மகிழ்ந்துண்ணும்போது திடீரென ஒருவர் வர அவரைப் பார்த்து மூக்கில் வேர்த்தது உனக்கு; சந்தர்ப்பத்தில் வந்து சேர்ந்தாயே என்று கூறுவர். அப்படியே அக்கால வழக்கில் ஒரு பொருளின் சுவையை அதிசயித்துக் கூறும்போது நின் மயிர் நன்றாயுளதே என்பர் போலும்.

3. கூழை விரிதல் எனக் கூழையாகிய சினையின் தொழிலால் கூறாமல் விரித்தல் என முதலாகிய தலைவியின் தொழிலால் கூறினார் என்க.

"விண்ணுயர் விறல்வரைக் கவாஅ னொருவன்
கண்ணி னோக்கிய தல்லது தண்ணென
வுரைத்தலு மில்லை மாதோ வவனே
வரைப்பாற் கடவுளு மல்ல னதற்கே
யோதி முந்துறக் காதொன்று ஞெகிழ
நிழலவிர் மணிப்பூ ணெஞ்சொடு கழலத்
துகிலும் பன்முறை நெடிதுநிமிர்ந் தனவே
நீயறி குவையதன் முதலே
யாதோ தோழியது கூறுமா றெமக்கே" (இ.வி.ப. 532)

என்றது, தோழிக்குத் தலைமகள் அறத்தொடு நின்றது; இதனுள் 'ஓதி முந்துற ஞெகிழ' என்பது கூழைவிரித்தல். 'காதொன்று ஞெகிழ' என்பது காதொன்று களைதல்; 'நிழலவிர் மணிப்பூ ணெஞ்சொடு கழல' என்பது ஊழணி தைவரல்; 'நெடிது நிமிர்ந்தன துகிலும் பன்முறை' என்பது உடைபெயர்த்துடுத்தலாயிற்று. இவை பாடாண் கைக்கிளையுள் இக்காலத்துப் பயின்றன. பிறவும் அன்ன. (14)

சிவலிங்கனார்

கூழை விரித்தல் .... மொழிப.

காட்சியைச் சார்ந்த நான்கு மெய்ப்பாடுகளும் நிகழவே தலைவன் நெருங்கி மெய்தொடல் முதலிய மேற்கொள்ளும்போது அவன்மீது வேட்கை மீதூரும். அப்போது நிகழ்வன நான்குபற்றிக் கூறுவது இச் சூத்திரம்.

கூழைவிரித்தல் முதலிய நான்கும் தலைவி வேண்டுமென்றே செய்வன. அதனால் தன் வேட்கையைத் தலைவனுக்குப் புலப்படுத்துதல் பயனாம். தலைவன் மெய்தொட்டுப் பயிறல் முதலிய செயல்களை மேற்கொள்ளுங்காலத்தில் அவற்றுக்கு உடம்பட்டவளாய்த் தன் கூந்தலை விரித்து முடித்தலும், காதணி ஒன்றைக் களைந்து செறித்தலும் ஒழுங்காகவே உள்ள அணிகளைச் சரிசெய்வாள் போலத் தடவுதலும், ஆடையை நெகிழ்த்து உடுத்தலும் ஆகிய செயல்களையெல்லாம் தன் வேட்கையைத் தலைவற்குப் புலப்படுத்தவே மேற்கொள்வாள். அதனால் அவை வேட்கைப் படிநிலையைச் சார்ந்த மெய்ப்பாடுகளாம் என்க.

**259. அல்குல் தைவரல் அணிந்தவை திருத்தல்
இல்வலி யுறுத்தல் இருகையும் எடுத்தலொடு
சொல்லிய நான்கே மூன்றென மொழிப. (15)**

இலக்குவனார்

263. Softly touching the waist, correcting the wearings, exhibiting the power of resistance without having it, and lifting the two hands - these four belong to the third stage.

பி.இ.நூ.

இ.வி. 580.

மேற்சூத்திர முதலிரண்டு வரிகளே.

இளம்பூரணர்

259. அல்குல் தைவரல் .... மொழிப.

என்-னின், மூன்றாம் அவத்தைக்கண்[1] *நிகழும் மெய்ப்பாடு உணர்த்துதல் நுதலிற்று.*

(இ-ள்) அல்குல் தைவரல் என்பது - மேல் உடைபெயர்த்துடுத்தவள் அதனைப் பேணும் மதிப்பு உள்வழித் தம்மைப் பேணுதல் பெண்டிர்க்கு அழகு.[2]

அணிந்தவை திருத்தலும் அவ்வாறே கொள்க.

இல்வலி யுறுத்தல் என்பது - தமது இல்லத்தோர் வலியுறுத்தல்.[3] அது சார நினைத்தாரைத் தமது இற்பிறப்புச் சொல்லி இசைவில்லாரைப் போல மறுத்துக் கூறுதல்.

இருகையு மெடுத்தல் என்பது - அவ்வழி மறுத்த வாய்பாட்டாற் கூறினும் இரண்டு கையினையும் பிறிதோர் காரணம்பற்றிக் கிளர்த்தல். தலைமக்கள் முன்னர்ப் பெண்டிர் கைகிளர்த்தாராதலாற் புணர்ச்சிக் கொருப்பட்ட வுள்ளத்தாள் கிளர்த்துமென்க இதனாற் பயன் நாணீங்கல். (15)

பேராசிரியர்

263. அல்குல் தைவரல் .... மொழிப.

இது, முறையானே மூன்றாவது உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) அல்குல்தைவரல் முதலாகக் கூறப்பட்டன நான்கும் மூன்றாவதெனப்படும் என்றவாறு.

மேலது உடை பெயர்த்துடுத்தலாகலான் அதன்வழித் தோன்றுவது உடை பெரிதும் ஞெகிழ்ந்து காட்டுதலாயிற்று; அதனைப் பாதுகாத்தலான் அவ் வற்றம் மறைக்குங் கையினை 'அல்குல் தைவரல்' என்றானென்பது.[4]

---

1. மூன்றாம் அவத்தை ஒருதலை யுள்ளுதல் அதாவது இடைவிடாது நினைத்தல்.
2. பேராசிரியர் விளக்கம் பார்க்க.
3. இல்லதோர் வலி - தன் இல்லத்ததாகிய வன்மை - பேராசிரியர் உரை பார்க்க.
4. இளம்பூரணர் உரைக்கு இதை விளக்கமாகக் கொள்க.

அணிந்தவை திருத்தலென்பது, கடிசூத்திர[1] முதலாயின திருத்தல்; அஃது உடைஞெகிழ்ச்சி போலப் போற்றிச் செய்வதாகலான் அதனை அல்குல் தைவரலின் பின் வைத்தான்.

இல்வலியுறுத்தலென்பது, புணர்ச்சியை வேண்டாதாள் போல்வதோர் வன்மை படைத்துக்கொண்டு செய்தல்; என்னை? இல்லாத வலியை மிகுத்தலென்றமையின் அப் பொருட்டாயிற்று. அல்குல் தைவரலும் அணிந்தவை திருத்தலுந் தன் வலியின்மை காட்டவும் வலிதோற்றிக் கொண்டு செல்வதாகலின் அதனை இல்வலியுறுத்தலென்று மூன்றா முறைமைக்கண் வைத்தானென்பது; இனி, இற்பிறத்தலான தன் வலி தோற்றுவதெனவுஞ் சொல்லுப[2]; அஃதாவது[3], முற்பிறந்தவற்றிற்கு முன்னே கூறினென்பது.[4]

இருகையு மெடுத்தலென்பது, அங்ஙனம் படைத்துக்கொண்ட வலியானுந் தடுக்கப்படாது நிறையழிதலிற் கைகள் தாமே முயங்கல் விருப்பத்தான் எழுவன போல்வதோர் குறிப்பு. இந் நான்கும் மேலன[5]வுமெனப் பன்னிரண்டு பகுதியும் புணர்ச்சிக்குமுன் நிகழ்வனவாம்.

'சொல்லிய' என்றதனான் இவையெல்லாஞ் சொல்லப்படுவதல்லது ஈண்டுச் சொல் நிகழ்தல் வேண்டிலவென்பது. எண்ணுநிலை வகையால் தொகைபெற்ற நான்கென்னும் எழுவாய்க்கு மூன்றென்பது பெயர்ப் பயனிலையாய் வந்தது. இவை நான்குந் தலைமகற்குரியவல்ல; தான் அவற்றுக்கு ஏதுவாவதல்லதென உணர்க. இவற்றுக்குச் செய்யுள்:

"ஓதியு நுதலு நீவி யான்றன்
மாதர் மென்முலை வருடலிற் கலங்கி
யுள்ளத் துகுநள் போல வல்குலின்
ஞெகிழ்நூற் கலிங்கமொடு புகுமிட னறியாது
மெலிந்தில ளாகி வலிந்துபொய்த் தொடுங்கவும்
யாமெடுத் தணைத்தொறுந் தாமியைந் தெழுதலி
னிம்மை யுலகத் தன்றியு நம்மை
நீளரி நெடுங்கட் பேதையொடு
கேளறிந் தன[6]கொலிவள் வேய்மென் றோளே." **(இ.வி.ப.532)**

இஃது, இயற்கைப் புணர்ச்சிக்கட் டலைவன் தன்னிலை யுரைத்தது. இதனுள் உடம்பும் உள்ளத் துகுவன போன்றனளென்பது அல்குல் தைவரல்; என்னை? அவ் வேறுபாட்டானே அற்றப்படுதலின்.

---

1. கடிசூத்திரம் - அரைச் சங்கிலி
2. இளம்பூரணர் சொல்வர்.
3. அஃதாவது - அவ் வுரை பொருத்தமாவது.
4. அல்குல் தைவரலுக்கும் அணிந்தவை திருத்தலுக்கும் முற்பட இல் வலியுறுத்தல் கூறின் அஃதாவதாம் என்க.
5. மேலன - முன் இரு சூத்திரங்களிற் சொல்லப்பட்டன.
6. கேள் அறிந்தன - உறவு அறிந்தன.

"அல்குலின், ஞெகிழ்நூற் கலிங்கம்"

என்பது அணிந்தவை திருத்தல்; அல்குலின் யாத்த நூலிற்கு ஞெகிழ்ச்சி கூறினமையின்.

"மெலிந்தில ளாகி வலிந்துபொய்த் தொடுங்கவும்"

என்பது, இல்வலியுறுத்தல்;[1]

"யாமெடுத் தணைத்தொறுந் தாமியைந் தெழுதல்"

என்பது, இருகையுமெடுத்தல்; அங்ஙனம் ஒடுங்கியவழியும் உயிர்ப்பினளல்லள் போலத் தோள்களைத் தன்வயத்தவாயின என்றமையின்.

"இம்மை யுலகத் தன்றியு நம்மைக் கேளறிந்தன"

என்றமையின், இருவர் அன்பும் எழுமையுந் தொடர்ந்த உழுவலன்பெனச் சொல்லித் தன்னிலை யுரைத்தானாம். பிறவும் அன்ன. (15)

சிவலிங்கனார்

அல்குல் தைவரல் .... மொழிப.

தலைவனை எதிர்ப்பட்ட தலைவி முதற்காட்சிப் பின் அவன் பால் வேட்கை தோன்ற அவ் வேட்கையிலே நின்று இடைவிடாது விரும்பிய விருப்பமே ஒருதலை யுள்ளுதல் என்னும் மூன்றாம் படிநிலையாகும். அப் படிநிலை நான்கு வகைத்து என்கின்றது இச் சூத்திரம்.

ஆடைபெயர்த்து உடுக்கும் காலத்தில் ஆடை நெகிழ்ச்சியால் மறைக்கப்படும் மார்பு உறுப்புச் சிறிது காணப்படும். அதனை மறைக்க முற்படுவாள். அதனையே அல்குல்தைவரல் என்பதால் குறிப்பித்தார் ஆசிரியர்.

உடைபெயர்த்து உடுத்தலாலும் அல்குல் தைவரலாலும் அணிகள் சரிவனவற்றைத் திருத்தியணிதல் இன்றியமையாததாயிற்று.

இந் நிகழ்ச்சிகளைக் காணும் தலைவன் புணர்ச்சிக்கு விருப்பமுடையனாய் முற்படுவான். அப்போது தனக்கு இல்லாத ஏதேனும் ஓர் வலிமையைக் கொண்டு அதை மறுப்பது போல் மெலிவாள். அது இல் வலியுறுத்தல் எனப்பட்டது.

அதையும் மீறிய தலைவன் புணர்ச்சிவிருப்பினனாய்த் தழுவ முற்படுவான். அப்போது மறுத்தல் இயலாதவனாய் உடன்படுவாளாய்த் தன் இருகைகளையும் உயர்த்துவாள். பின்னர் இயற்கைப் புணர்ச்சி நிகழும்.

இயற்கைப் புணர்ச்சியின் படிநிலைகள் மூன்று; அவற்றின் மெய்ப்பாடுகள் ஒன்று நான்காய்ப் பன்னிரண்டாம் என்க.

---

1. வலிந்து பொய்த்தல் இல்வலி.

260. பாராட் டெடுத்தல் மடந்தப வுரைத்தல்
ஈரமில் கூற்றம் ஏற்றலர் நாணல்
கொடுப்பவை கோடல் உளப்படத் தொகைஇ
எடுத்த நான்கே நான்கென மொழிப. (16)

இலக்குவனார்

264. Indulging in praises, indulging in speeches, devoid of feigned ignorance, being prepared to have the unkind words from others, exhibiting shyness on hearing scandal and receiving what are given - these four belong to the fourth stage.

பி. இ. நூ.

இ. வி. 5 80

மேற்சூத்திர முதல் மூன்று வரிகள்.

இளம்பூரணர்

260. பாராட் டெடுத்தல் .... மொழிப.

என்-னின், நான்காம்' அவத்தைக்கண்[1] *வரும் மெய்ப்பாடு உணர்த்துதல் நுதலிற்று.*

(இ-ள்) பாராட்டெடுத்தல் முதலாகச் சொல்லப்பட்ட நான்கும் நான்கா மவத்தைக்கண் நிகழும் மெய்ப்பாடென்க.

பாராட்டெடுத்த லாவது - தலைமகன் நின்ற நிலையுங் கூறிய கூற்றையும் தனித்த வழியும் எடுத்து மொழிதல்.

மடந்தப வுரைத்தல் என்பது - பெண்டிரது இயல்பாகிய மடப்பங் கெடச் சில கூறுதல். அது தலைமகன் கூற்று நிகழும்வழி யதற்கு மாற்றங் கொடுத்தலன்றித் தன் வேட்கை தோன்றக் கூறுஞ் சொல்.

ஈரமில் கூற்ற மேற்றலர் நாணல் என்பது - ஊராருஞ் சேரியாருங் கூறும் அருளில்லாத கூற்றைக் கேட்டு அலர் ஆயிற்றென நாணுதல்.

கொடுப்பவை கோடல் என்பது - கண்ணியாயினுந் தழையாயினும் பிறவாயினும் தலைமகன் கொடுத்தவற்றைக் கோடல். மனத்தினான் உரிமை பூண்டானல்லது பிறன் பொருள் வாங்காமையின்[2] இதுவுமோர் மெய்ப்பாடாக ஓதப்பட்டது. (16)

---

1. நான்காம் அவத்தை மெலிதல்

2. மனத்தினுள் காதல் உரிமை பூண்டவனாகிய தலைமகன் கொடுப்பக் கொள்வ தல்லது பிறன் கொடுக்கும் பொருள் வாங்காமையின்

பேராசிரியர்

264. பாராட் டெடுத்தன் .... மொழிப.

இது, நான்காம் பகுதி கூறுகின்றது.

(இ-ள்) **பாராட்டெடுத்தல்** - புணர்ச்சி நிகழ்ந்த பின்னர்த் தலைமகனை இயற்பட நினைவுங் குறிப்பும்; இது பாராட்டென்னாது எடுத்தலென்றதனால் அதனை உள்ளமெடுத்தன் மேற்கொள்க. இது தலைமகற்கும் ஒக்கும்.

மடந்தப வுரைத்தல் - விளையாடும் பருவத்து நிகழ்ந்த அறிமட நீங்கக் காமப்பொருட்கண்ணே சிறிது அறிவு தோன்றுதலும்; உரைத்தலென்றதனால் அக்காலத்துப் பாங்கிக்குச் சில கூற்றுமொழி கூறவும் பெறுமென்பது கொள்க. அவை மேலை யோத்துகளுட் கூறப்பட்டன. மடந்தப வுரைத்தற்கு ஏதுவாகிய கருத்து ஈண்டு மெய்ப்பா டெனப்படும்.

ஈரமில் கூற்ற மேற்றலர் நாணல் - அங்ஙனம் அறிமடங்கெடச் சொற்பிறந்தவழி இன்றளவுந் தமராற் கூறப்படாத கடுஞ்சொல் உளவாமன்றே, அவற்றை முனியாது ஏற்றுக்கொண்டு புறத்தார்க்கு இது புலனாங்கொலென்று நாணுதலும்;

கொடுப்பவை கோடல் - தலைமகனாற் கொடுக்கப்பட்ட தழையுங் கோதையுந் தாருங் கண்ணியுந் தோண்மாலையு முதலாயின கொண்டு கையுறை பாராட்டுதலும்; உளப்படத் தொகைஇ எடுத்த நான்கே நான்கென மொழிப - கொடுப்பவை கோடலகப்படத் தொகுத்தோதிய நான்கும் நான்காவது என்றவாறு.

'எடுத்த' என்றதனாற் கொடுப்பவை கொள்ளாது மறுத்தன் முதலியனவுங் கொள்க.

புணர்ச்சிப் பின்னரல்லது பாராட்டுள்ளம் பிறவாமையானும் அதன் பின்னரல்லது பிறரொடு கூற்று நிகழாமையானும் அக் கூற்றுக் கேட்டல்லது தமரான் ஈரமில் கூற்றங் கோடலின்மையானும் அவையெல் லாம் முடிந்த வழித் தலைவன்மேற் சென்ற உள்ளத்தாற் கொடுப்பவை கோடற் குறிப்பினளாமாகலானும் அம் முறையான் வைத்தானென்பது. இவற்றுக்குச் செய்யுள்:

> "ஒருநாள் வந்து பலநாள் வருத்து
> நின்னே போலுநின் றழையே யென்வயி
> னிற்பா ராட்டியுஞ் சொற்கொள லின்றியும்
> யாயெதிர் கழறலிற் பேரலர் நாணியு
> மயல்கூர் மாதர்க்குத் துயர்மருந்[1] தாயினு
> நோய்செய் தன்றாற் றானே
> நீதொடக் கரிதலி னோரிடத் தானே" (இ.வி.ப. 533)

1. துயர் மருந்து - துயர்க்கு மருந்து

இது கையுறை மறுத்தது; இதனுள் 'நிற்பாராட்டி' என்பது பாராட் டெடுத்தல். 'சொற்கொளலின்றி' என்பது மடந்தப வுரைத்தல்; என்னை? கொளுத்தக் கொள்ளாதுவிடின் அது மடனாகாமையின். 'யாயெதிர் கழறலிற் பேரலர் நாணி' என்பது ஈரமில் கூற்ற மேற்றலர் நாணல்; 'துயர்மருந் தாயினும்' என்பது கொடுப்பவை கோடல். இத் தழை நின்கைப் பட்டவழிக் கரிந்து காட்டி நின் மெய்வெப்பங் கூறுதலின் இதனை அவள் காணின் ஆற்றாளாமெனப் பின்னொரு காலத்து மறுத்தா ளென்பது. (16)

சிவலிங்கனார்

பாராட் டெடுத்தல் .... மொழிப.

இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்னர்த் தலைவன் பிரிவான். அதனால் தலைவிக்கு மெலிவு என்னும் படிநிலை தோன்றும். அது நான்கு மெய்ப்பாடுகளைக் கொண்டதாகும் என்கிறது இச் சூத்திரம்.

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கிய தலைவனைப்பற்றித் தலைவி வருவான் என இயற்பட நினைத்தலும் பிறவும் எண்ணும். அது பாராட்டெடுத்தல் எனப்படும்.

இளமைக் காலத்து மடம் (அறியாமை) கெடச் சிறிது அறிவு வந்தவளாய்ச் சில பேசுவாள். அது மடந்தப வுரைத்தல் ஆம்.

ஊரவர் தன்னைப்பற்றிக் கூறும் இரக்கமில்லாத அலர்ச் சொற்களைக் கேட்டு நாணம் கொள்ளுதல் உண்டு.

தலைவன் அடிக்கடி வந்து தழை முதலியன கொடுப்பக் கொள்ளவும் செய்வாள். கொள்வதுபற்றிப் பிறர்க்குப் புலனாமோ என எண்ணுதலால் மெலிவு உண்டாம்.

261. தெரிந்துடம் படுதல் திளைப்புவினை மறுத்தல்
கரந்திடத் தொழிதல் கண்டவழி உவத்தலொடு
பொருந்திய நான்கே ஐந்தென மொழிப. (17)

இலக்குவனார்

265. Having known all the consequences and being known to others, making acceptances, refusing to have the act of enjoyment, staying in the place being hidden from the lover, and having joy on seeing - these four belong to the fifth stage.

பி.இ.நா.

இ.வி. 580.

மேற்சூத்திர முதல் இரண்டு வரிகளே.

இளம்பூரணர்

261. தெரிந்துடம் படுதல் .... மொழிப.

என்-னின், ஐந்தா மவத்தைக்கண்[1] வரும் மெய்ப்பாடு நிகழுமிடம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) தெரிந்துடம்படுதல் முதலாகச் சொல்லப்பட்ட நான்கும் ஐந்தாம் அவத்தைக்கு மெய்ப்பாடாம் என்றவாறு.

தெரிந்துடம் படுதலாவது - தலைமகன் கொடுப்பவை கொண்ட தலைமகள் ஆராய்ந்து உடம்படுதல் என்றவாறு. ஆற்றாமை பெருகுகின்ற காதலின் இத்துணையும் மறுத்தவள் உடம்படுதல் என்றார். அவ்வழியுந் தெரிந்துடம்படுதல் என்றமையால் ஆராய்ந்தல்லது புணர்ச்சிக்கு உடம்படாமை கொள்க.

திளைப்புவினை[2] மறுத்தல் என்பது - விளையாட்டாயமொடு திரிவாள் வேட்கை நலிதலான் அவ் விளையாட்டு வினையை மறுத்தல் என்றவாறு.

கரந்திடத் தொழிதல் என்பது - தலைமகனைக் காண்டல் வேட்கையால் ஒளித்துப் படத்தினின்று மொழிதல்[3] என்றவாறு.

கண்டவழி யுவத்தல் என்பது - தலைமகனைக் கண்டவழி மகிழ்தல் என்றவாறு. (17)

பேராசிரியர்

265. தெரிந்துடம் படுத .... மொழிப.

இஃது, ஐந்தாங் காலத்து மெய்ப்பாடுணர்த்துகின்றது.

(இ-ள்) மேற்கூறிய கொடுப்பவை கோடல் நிகழ்ந்தவழி அவ் வொழுகலாறு புறத்தார்க்கெல்லாம் ஐயமாகலின் அதன்வழித் தோன்றுவது தெரிந்துடம்படுதலென்றா ரென்பது.

---

1. ஐந்தாம் அவத்தை ஆக்கம் செப்பல். அதாவது உண்ணாமையும் உறுவன ஓதல் முதலாயினவும்.
2. திளைப்பு - கூடி விளையாடல் - பேரா. உரை பார்க்க.
3. படத்தினின்றும் ஒழிதல் - திரைமறைவிலிருந்து நீங்குதல். படம் - திரைச்சீலை

தெரிந்துடம்படுதல் - தலைமகனைத் தலைமகள் இவ்வொழுகலாறு நிகழ்ந்தவாற்றைப் பட்டாங்[1]குணராதார் தலைமை செய்தனளிவளெனவுந் தகாதவொழுக்கின ளிவளெனவும் பல்லாற்றானும் இவள்கண்ணே ஏதமிட்டுத்[2] துணிந்துந் துணியாதும் உரைப்பாராகலான், அதற்கு நாணி, இனி யாதுகொல்லோ செயற்பாலதென்று ஆராய்ந்து, இவ் வொழுகலாற்றினை அறிவிப்பேங்கொல் அறிவியேங்கொ லெனத் தடுமாறிப் பின்னொரு வகையான் ஆராய்ந்து முழுவதூஉஞ் சொல்லாது தன் குலத்திற்கும் ஒழுக்கத்திற்கும் பெண்டன்மைக்கும் ஏற்றவகையான் வேண்டுவன தெரிந்துகொண்டு, இன்னவாறு பட்டதென்று தோழிக்கு உடம்படுதலுந் தோழியாற் செவிலிக்கு உடம்படுதலுமென இன்னோரன்ன குறிப்பினைத் தெரிந்து உடன்படுதலும்;

திளைப்புவினை[3] மறுத்தல் - அங்ஙனந் தமர்க்குத் தானுடம் பட்டதன் பின்னர்த் தலைமகனோடு பகலுமிரவும் பண்டு திளைத்தவாறு திளைத்தலை அச்சமு நாணு மடனுங் காரணமாக மறுத்தலும்; உடம்பாட்டின் பின்னர் மறுக்குமாதலின் அதனைத் திளைப்புவினை மறுத்தலென்று இரண்டாவது வைத்தானென்பது.

கரந்திடத் தொழிதல் - அக்காலத்து இற்செறிக்கப்படுதலால் தான் அவனை மறுத்த ஏதத்திற்கு நாணியும் அஞ்சியும் அவற்கு வெளிப்படாதொழுகுதலை உடையளாதலும்;

தன்னிடத்தே தங்குதலை 'இடத்தொழில்' என்றான்.

கண்டவழி யுவத்தல் - அங்ஙனங் கரந்தொழுகுங் காலத்து அவனை ஒருஞான்று கண்டவழிக் கழியுவகை மீதூர்தலும்;

இது தலைமகற்கும் உரித்து.

பொருந்திய நான்கே ஐந்தென மொழிப - இவை நான்கும் ஐந்தாங் கூறெனப்படும் என்றவாறு.

'பொருந்திய நான்கு' என்றது, இவை இடையறவின்றி ஒருங்கு தொடர்தலுமுடைய வென்பது. இதனானே இவை நந்நான்கினோடு வருகின்றதற்குச் சிறிது இடையறவும்படுமென்பது கொள்க.

புகுமுகம் புரிதன் முதலாயின நான்குந் தலைமகளனவேயாகி ஓரினத்தவாயின. அவற்றுப் பின்னர்த் தலைமகன் அவளைப் பொருந்திய வழிக் கூழைவிரித்தன் முதலாயின நான்கும் நிகழ்ந்தமையின் அவையும் அவற்றோடு சிறிது இடையறவுபட்டன. அல்குல் தைவரன் முதலாயின நான்கும் புணர்ச்சிக்கு மிகவும் இயைபுடைமையின் மேலவற்றோ டொன்றாது வேறாயின. பாராட்டெடுத்தன் முதலாயின புணர்ந்து நீங்கிய

---

1. பட்டாங்கு - நடந்தவாறு
2. ஏதமிட்டு - குற்றம்சாட்டி
3. திளைப்புவினை - புணர்ச்சியாகிய வினை

பின் நிகழ்ந்தமையின் அவையும் அவற்றிற் சிறிது வேற்றுமையுடைய. தெரிந்துடம்படுதன் முதலாயின களவுவெளிப்படுத்தற் குறிப்பினவாகலின் மேலனவற்றொடு தழுவாது வேறாயினவென்பது. இவற்றொடும் வருகின்ற நான்கன் வேறுபாடு ஆண்டுச் சொல்லுதும். அவ்வாறு நோக்கியன்றே இவ்வாறு சூத்திரப் பொருளினையும் இருபத்து நான்காக உடனோதாது வேறுபடுத்தோதிய கருத்தென்பது. இங்ஙனம் பொருத்தமின்றி வருவனவல்ல நந்நான்கு பகுதியாற் கூறியவை தம்முட் டாமென்பான் 'பொருந்திய நான்கு' என்றானென்பது. இவற்றுக்குச் செய்யுள்:

"அறியாய் கொல்லோ நீயே தெறுவர
நோக்குதொறும் பனிக்கு நெஞ்மோ டிவளே
யாய்க்கறி வுறாலி னின்னெதிர் நாணி
மனைவயிற் பிரியலண் மன்னே யதற்கே
நினைவில ளிவளென வுரைத்தி
புனைதார் மார்ப காண்டியோ வதுவே" (இ.வி.ப. 534)

என்பது, பகற்குறிக்கட் டலைமகளை இடத்துய்த்து வந்த தலைமகனை எதிர்ப்பட்டு நின்று தோழி வரைவுகடாயது. இதனுள், 'யாய்க்கறிவுறாலின்' என்பது, தெரிந்துடம்படுதலென்பது; என்னை? அவள் நோக்குதொறும் பனித்தலென்றறிவுறுத்தா ளென்றமையின். 'நின்னெதிர் நாணி' என்பது, திளைப்புவினை மறுத்தல்; என்னை? தமர்க்கு மறைத்தாள் இம் மறையினையென்று தலைமகன் குறிக்குமென நாணி எதிர்ப்படாமையின். 'மனைவயிற்பிரியலள்' என்பது கரந்திடத்தொழிதல். 'புனைதார் மார்ப காண்டியோ வதுவே' என்பது, கண்டவழி உவத்தல்; என்னை? நிற்கண்ட வழி நுதலுந்தோளும் பசலை நீங்கியவாறு கண்டிலையோ வென்னுங் குறிப்பினாற் கூறினமையின். பிறவும் அன்ன. (17)

சிவலிங்கனார்

தெரிந்துடம் படுதல் .... மொழிப.

மெலிவுநிலைக்கு அடுத்து அதனால் தலைவி உறக்கம் இன்மை முதலியவான தன்னிடம் உளதாம் ஆக்கப்பாடுகளைக் கொள்ளும் படி நிலைக்கு உரியளாவாள். அப் படிநிலையும் நால்வகை மெய்ப்பாடுகளைக் கொள்ளும் என்கின்றது இச் சூத்திரம்.

தலைவனால் தழை முதலியன கொடுப்பக் கொண்ட தலைவி அவற்றை ஏற்றுப் புணர்ச்சிக்குப் பலவகையிலும் ஆராய்ந்து உடன் படுவாள். இப் புணர்ச்சி தோழியிற் கூட்ட முதலியவற்றால் நிகழ்வது.

கூட்டத்தை விரும்பியவளாய்த் தன் தோழியர் கூட்டத்துடன் கூடி விளையாடுதலை நீங்குவாள். திளைப்புவினை - கூடி விளையாடும் தொழில்.

தலைவனைக் காணும் விருப்பினால் தான் அவன் காணாதவாறு மனையகத்து மறைந்திருந்த விடத்தினின்றும் நீங்கிவருதல் - இது கரந்த விடத்தினின்றும் ஒழிதல் எனும் மெய்ப்பாடாம்.

அவ்வாறு வருபவள் தலைவனைக் காணும்போது கண்டவழி யுவத்தல் என்னும் மெய்ப்பாடாம்.

இவை நான்கும் இயற்கைப் புணர்ச்சிப் பின்னர் நிகழும் புணர்ச்சிகளின் நிமித்தங்களாய ஆக்கம் ஆதலின் அவை ஆக்கம் செப்பல் எனும் படிநிலையாயின.

262. புறஞ்செயச் சிதைதல் புலம்பித் தோன்றல்
கலங்கி மொழிதல் கையற வுரைத்தல்
விளம்பிய நான்கே ஆறென மொழிப. (18)

இலக்குவனார்

266. Being adorned outside, losing heart, feeling loneliness, speaking in bewilderment and making utterances without having action - these four of loneliness belong to the sixth stage.

பி.இ.நா.

இ.வி. 580.

மேற்சூத்திர முதல் இரண்டு வரிகளே.

இளம்பூரணர்

262. புறஞ்செயச் சிதைதல் .... மொழிப.

என்-னின், ஆறாம் அவத்தைக்கண்[1] வரும் மெய்ப்பாடு நிகழுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) புறஞ்செயச் சிதைதல் முதலாகச் சொல்லப்பட்ட நான்கும் ஆறாம் அவத்தைக்கண் மெய்ப்பாடாம் என்றவாறு.

புறஞ்செயச் சிதைத லாவது - தலைமகன் கோலஞ் செய்யும்வழி யதற்கு மகிழ்ச்சியின்றிச் சிதைவுடையளாதல்.

புலம்பித் தோன்ற லாவது - பொலிவழிந்து தோன்றல்.[2]

கலங்கி மொழிதல் என்பது - கூறுங்கூற்றுக் கலக்கமுற்றுக் கூறுதல்.

கையறவுரைத்த லாவது - செயலறவு தோன்றக் கூறல்.

இச் சொல்லப்பட்ட ஆறு அவத்தையும் பெண்பாலார் எல்லார்க்கும் பொது. இவை புணராதவழித் தோன்றுதல் பெரும்பான்மை. (18)

---

1. ஆறாம் அவத்தையாவது நாணு வரையிறத்தல். (களவியல், 9)

2. பேரா. - உரை பார்க்க.

பேராசிரியர்

266. புறஞ்செயச் சிதைத்தல் .... மொழிப.

இஃது, ஆறாவது கூறுகின்றது.

(இ-ள்) புறஞ்செயச் சிதைத்தல் - பூவுஞ் சாந்தும் பூணுந் துகிலும் முதலாயினகொண்டு புறத்தே கோலஞ் செய்ய அகத்தே சிதைவுண்டாதலும்.;

மேல்நின்றது கண்டவழி உவத்தலாகலானும் இது காணாதவழி நிகழ்கின்றதாகலானும் அதற்கினமின்றியும் அதன்வழித் தோன்றியதெனப் படுமாகலான் இதனை இச் சூத்திரத்தின் முன்வைத்தானென்பது.

புலம்பித்தோன்றல் - அங்ஙனம் புனைந்த கோலந் துணையொடு கழியப் பெறாமையிற் புல்லென்றழிந்த நெஞ்சினளாகலான் எல்லாச் சுற்றத்தார்க்கும் இடைநின்றேயுந் தனியளென்பது அறிவியாநிற்றலும்;

கலங்கி மொழிதல் - நைகயொடுபட்ட கள்வரைப் போலச் சொல்லுவனவற்றைத் தடுமாற்றந் தோன்றச் சொல்லுதலும்; அஃதாவது, தன்மனத்து நிகழாநின்றன தன்னையறியாமற் சில புலப்படச் சொல்லுதலாயிற்று.

கையறவுரைத்தல் - கலங்காது சொல்லுங்காற் செயலறவு தோன்றச் சொல்லுதலும்; அஃதாவது, வன்புறை யெதிரழிந்து சொல்லுவன போல்வன.

புலம்பிய நான்கே ஆறெென மொழிப - இவை நான்குந் தனிமை விகற்பமாகிய ஆறாங்கூற்று என்றவாறு.

கையறவுரைத்த லென்பதனை ஈற்றுக்கண் வைத்தான் களவொழுக்கத்தினுள் இதனினூங்கு மெய்ப்பாடு கூறப்படாதென்றற்கு; என்னை காரணமெனின், கையறவுரை தோன்றியதற்பின்னர் நிகழ்வன கைக்கிளைக்கும் பெருந்திணைக்கும் மெய்ப்பாடாவதன்றி நற்காமத்துக்கு ஆகாவென்பது கருத்து; என்னை? கையறவுரைத்தலென்பது 'சொல்லா மரபி னவற்றொடு கெழீஇச், செய்யா மரபிற் றொழிற்படுத் தடக்குதலை' (196) எல்லையாக வுடைமையின் அதனினும் இறப்பத் தோன்றுவன மன்றத்திருந்த சான்றவரறியத் தன் துணைவன் பெயரும் பெற்றியுங் கூறி அழுதும் அரற்றியும் பொழுதொடு புலம்பியும் புள்ளொடு சொல்லியுந் நிகழும் மெய்ப்பாடாகலான், அவை 'நடுவ ணைந்திணை' (2) எனப்பட்ட நற்காமத்திற்கு இலக்கண வகையான் ஏலாவாகலினென்பது.

கையறவு உரைத்த லென்றதனான் இம் மெய்ப்பாடு மனத்தளவே யன்றி மாற்றத்தானும் பிறர்க்குப் புலனாக வெளிப்படுமென்பது கொள்க. இவை எல்லாம் முறையானே நிகழ்ந்தமை நோக்கி யாழோர் கூட்டத் தொன்மையுந் (549) தோலும் (550) போலப் பொருட்டொடர் நிலையாக்கி

உரைப்பாருமுளர். அஃது ஆகாமைக்குக் காரணங் களவியலுட் (101) கூறினாமென்பது. இவற்றுக்குச் செய்யுள்:

“இவளே, அணியினும் பூசினும் பிணியுழந் தசைஇப்
பல்கிளை நாப்ப ணில்கிளை போல
மொழிவகை யறியாள் பொழிகண் ணீர்துடைத்
தியானே கையற வலமரு
கூறாய் பெருமநிற் றேறு மாறே” (இ.வி.ப. 535)

என்பது, வரைவு கடாயது; இதனுள் ‘அணியினும் பூசினும் பிணியுழந் தசைஇ’ என்பது புறஞ்செயச் சிதைத்தல். ‘பல்கிளை நாப்ப ணில்கிளை போல’ என்பது புலம்பித் தோன்றல். மொழிவகை யறியாள் என்பது கலங்கி மொழிதல். ‘யானே கையற வலமரும்’ என்பது கையற வுரைத்தல்; என்னை? தன் கண்ணீர் துடைத்தலும் ஆற்றாளென்றமையின். பிறவும் அன்ன. (18)

சிவலிங்கனார்

புறஞ்செயச் சிதைதல் .... மொழிப.

தன்கண் ஆய ஆக்கம் செப்பிய தலைவி வேட்கையின் மிகுதியால் நாணின் எல்லை கடப்பாள். அப்போது நாணுவரை யிறத்தல் என்னும் படிநிலை தோன்றும். அப் படிநிலையானதும் நான்கு வகையான மெய்ப்பாடுடையது என்கின்றது இச் சூத்திரம்.

தலைவனால் கோலம் செய்யப்படும் தலைவி இச் செயல் யாது கருதியதோ எனவும் பிறவாறும் மனம் சிதைதல். இது புறம்செயச் சிதைதல் என்னும் மெய்ப்பாடாம்.

அடிக்கடி தலைவனைக் காணாமையாலும் வரைவு வேண்டியும் தான் தனிமையுணர்வுடையளாய்த் தோன்றல்.

அவ் வுணர்வால் கலக்கமுற்றுச் சில மொழியவும் செய்வாள்.

இனி யாது செய்வேன் எனக் கையறவு (செயலற்ற நிலை) கூறவும் கூறும்.

இவை யாவும் நாணின் எல்லை கடந்த நிலையில் வரும் மெய்ப்பாடுகளாம்.

**263. அன்ன பிறவும் அவற்றொடு சிவணி
மன்னிய வினைய நிமித்த மென்ப. (19)**

இலக்குவனார்

267. Such others, and their allied ones including, serve
as causes for the action of love to be carried out.

பி.இ.நூ.

இ.வி. 580

அன்ன பிறவும் அகன்ஐந் திணைக்கண்
துன்னும் என்ப துணிந்திசி னோரே.

இளம்பூரணர்

263. அன்ன பிறவும் .... மென்ப.

என்-னின், மேலதற்கோர் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்டனவும் அத்தன்மைய பிறவும் நிலைபெற்ற வினையுடைய நிமித்தமாம் என்றவாறு.

வினை என்பது - கற்பிற்குரிய கரணமாம். இவையெல்லாங் கற்பிற்குரிய கரணத்து .... தற்கு நிமித்தமாம் என்றவாறு.

அன்னவை பிறவுமாவன: நோக்கானை நோக்கி யின்புறுதல், தனியிடை நகுதல், நோக்குங்காலைச் செற்றார்போல் நோக்குதல், மறைந்து காண்டல், தற்காட்டுறுத்தல்.

இந் நிகரன அவத்தைபற்றி நிகழ்ந்தனவாயின் ஏழாவது[1] முதலாகப் பத்தாவது ஈறாகக் கூறவெனின், ஏழாமவத்தை நாண் நீங்கிய காதலிற் றேறுதலொழிந்த காமத்து மிகுதியாகிய பெருந்திணைப்பாற்படும். ஒத்த காமத்து நிகழாது; எட்டாவது உன்மத்தம்;[2] ஒன்பதாவது மயக்கம்; பத்தாவது சாக்காடு; ஆதலான் நடுவணைந்திணைக்கண் வருவன ஆறு எனக் கூறினார் என்று கொள்க. (19)

பேராசிரியர்

267. அன்ன பிறவு .... மென்ப.

இது, மேலனவற்றுக்கு ஓர் புறனடை.

(இ-ள்) அன்ன பிறவும் - மேற்சொல்லப்பட்ட இருபத்து நான்கு மெய்ப்பாடு போல்வன பிறவும், அவற்றொடு சிவணி - அவற்றின் வேறன்றி அவை தம்முட் பகுதியாகி வருவன பிறவும், மன்னிய வினைய நிமித்தம் என்ப - நிலைபெறத் தோன்றுங் காமவொழுக்கத்து நிமித்த மென்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

'மன்னிய வினைய' என்பது நடுவணைந்திணைக்கே யுரிய மெய்ப் பாட்டினவை என்றவாறு; என்னை? கந்தருவவழக்க மல்லனவற்றை

---

1. ஏழாவது அவத்தை நோக்குவ எல்லாம் அவையே போறல் (களவியல், 9)
2. உன்மத்தம் - பித்தாதல், அதாவது தன்னை மறத்தல்.

மன்னிய காம மென்னாரன்றே, அஃது[1] இடையறவு படாதாகலின். எனவே, கைக்கிளைக்கும் பெருந்திணைக்கும் வரையறையின்றி வேண்டியவாறு வரப்பெறு மென்பதாம்; அவை மன்னிய வினையல்லாமையின்; என்னை? 'காமஞ் சாலா விளமை யோள்வயி னேமஞ் சாலா விடும்பை யெய்துதலும்' (50) நாற்பத்தெட்டியாண்டையானொடு பன்னீராட்டையாள் கூட்டஞ் சொல்லுதலும் ஒத்த காம மெனப்படாவாகலி னென்பது. இவ்வாறு கூறவே, கைக்கிளைக்கும் பெருந்திணைக்கும் இவை வைத்த முறையான் வரையறுத்துக் கூறப்படாவெனவும், அவை வருவன வந்துழிக் கொளப்படூஉமென்பதும் பெற்றாம். இது புலனெறி வழக்கமல்லாத கந்தருவ மணத்திற்கும் ஒக்கும்.[2]

'அன்ன பிறவு மவற்றொடு சிவணி' (267) வருவன யாவையெனின், புகுமுகம் புரிதற்கட் டலைமகன் நோக்கியவழி ஒரு வல்லிப் பொதும் பரானும்[3] மற்றொன்றானுஞ் சார்புபெற்று மறைதலும் அவையில்லாதவழி இடர்ப்படுதலுமென்றாற் போல்வன புகுமுகம் புரிதலா யடங்கும்.

நகுநய மறைக்குங்கால் தலைமகன்கட் டோன்றிய நகைமுதலாகிய குறிப்பேதுவாக நகைதோன்றியதனை மறைக்குங்கால் இதழ்மொக்குளுள் தோன்றுவது நகையெனப்படாது நகுநய மறைத்தலின்பாற் படுமென்பது. இனிச் சிதைவு பிறர்க்கின்மையின்கண்ணும்,

"நாட்ட மிரண்டு மறிவுடம் படுத்தற்குக்
கூட்டி யுரைக்குங் குறிப்புரை யாகும்"[4] (96)

என்றமையாற் கண்ணின் வேறுபாடுளவாமன்றே, அவை சிதைவு பிறர்க் கறிவிக்குமாயினும் ஆண்டுத் தானது மறைத்தா னென்னுங் கருத்தின னாகலின் அதுவுஞ் சிதைவு பிறர்க்கின்மையா மென்பது; அவை யாவை யெனின், அமர்த்து நோக்காது அலமர நோக்குதலும் நிலங் கிளைத்தலும் போல்வன.

மற்றுப் பொறிநுதல் வியர்த்தற்குப் புறனடையாற் கொள்வன யாவை யெனின், புறனடையாற் கோடல் ஆணையன்றாகலான் உள்ளனவற்றிற்குக் கொண்டொழிக வென்றவாறு. ஒழிந்தனவற்றிற்கும் இவ்வாறே வருவன அறிந்து அடக்கங் கூறுக.

மற்றும், 'பிறவு மவற்றொடு சிவணி' எனவே, மேற்கூறியவற்றொடு பொருந்த வருவன கோடுமன்றே? 'அன்ன' என்ற தென்னையெனின், அதனானே தலைமகற்குரிய மெய்ப்பாடு வேறுளவாயினுங் கொள்க; அவை, ஐயப்படுதலும் ஆராய்தலுந் துணிதலு முதலாயின.

---

1. அஃது - கந்தருவ வழக்கம்

2. நாடக வழக்கும், உலகியல் வழக்கும் கலந்த புலனெறி வழக்கத்துக்கே யுரியது வரையறை. உலகில் நிகழும் கந்தருவ மணத்துக்கு இவ் வரன்முறையில்லை என்பதாம்.

3. வல்லிப்பொதும்பர் - வல்லிக்கொடி யடர்ந்து படர்ந்த புதர்

4. இருவர் கண்கள் இரண்டும் ஒருவர் அறிவை ஒருவர் அறிவு கருத்தைச் சேர்த்துரைக்கும் குறிப்புரைக்குங் கருவியாகும்.

மற்றுந் தலைமகட்குரிய மெய்ப்பாடு போலத் தலைமகற்குரியனவும் இன்ன முறையனவென்று வரையறுத்துக் கூறாரோவெனின், அற்றன்று; தலைமகன் குறிப்புச் சிலபற்றித் தலைமகள் குறிப்புப் பல பிறக்கு மாகலானும் ஐயமுதலாயின மெய்ப்பாடு காமப் புணர்ச்சிக்கு இன்றியமையாதன இன்மையானுந் தலைமகட்குரிய மெய்ப்பாடே சிறந்தனவென்று அவற்றை வரையறுத்துக் கூறினானென்பது. மற்றிவற்றை 'நிமித்தம்' என்ற தென்னையெனின், இவை முறையானே நிகழ்ந்து புணர்ச்சி நிகழுமாகலினென்பது. 'வினைய' என்பது ஆறாம் வேற்றுமைப் பன்மை யுருபு.[1]

இம் மெய்ப்பாட்டினுட் கைக்கிளை பெருந்திணைக்கு வருவன வருமாறு:

"ஒருக்குநா மாடுங் குரவையுள் நம்மை
யருக்கினான் போனோக்கி யல்லனோய் செய்தல்
குரூஉக்கட் கொலையேறு கொண்டேன்யா னென்னுந்
தருக்கன்றோ வாயர் மகன்"[2] (கலி. 104)

எனப் புகுமுகம் புரிதல் கைக்கிளைக்கண் வந்தது.

"முன்னைய மூன்றுங் கைக்கிளைக் குறிப்பே" (105)

என்பதனான், இது கைக்கிளை யெனப்பட்டது. மற்றிது முல்லைத் திணைப் பாட்டன்றோ வெனின், அது நிலத்தான் முல்லையாயிற் றென்பது அகத்திணை யியலுட் கூறினாம்.

இனித் தொன்மையுந் (549) தோலும் (550) முதலாயின வனப்புகளுட் புகுமுகம் புரிதன் முதலாயின பெருந்திணைப் பொருள் பற்றி வருவன வருமாறு அறிந்துகொள்க.

மற்றிவ் விருபத்துநான்கு மெய்ப்பாடுங் கற்பினுள் இம் முறையானே வரப்பெறாவோ வெனின், அதற்கு இம் முறையான் இவையனைத்தும் வரல்வேண்டுவ தின்மையிற் களவிற்கே விதந்து கூறினானென்பது. அஃதென்னை பெறுமாறெனின், 'பல்பொருட் கேற்பின் நல்லது கோடல்' (665) என்னும் உத்திவகை.

இனிக் கற்பினுள் வருவன வருமாறு:

"இனிதெனக் கணவ னுண்டலி
னுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதன் முகனே" (குறுந்.167)

என்பதனுள், நகுநயமறைத்தல் வந்தது.

---

1. வினைய என்பதில் உள்ள 'அ' உருபு.

2. ஒன்றுசேர்ந்து நாம் ஆடும் குரவைக் கூத்தில் ஆயர்மகனானவன் நம்மை நோக்கி நமக்குத் துன்பத்தைச் செய்தான்; அதன் காரணம் நிறம் உள்ள கண்ணுடைய கொல்லேற்றைத் தழுவிக்கொண்டேன் யான் என்ற தருக்கேயாம். ஆயர்மகனுக்கு அவ் வெண்ணம் இன்மையோடு அவளைப் பார்த்தாலும் துன்புறுத்தும் காம நோக்கம் இன்மையின் தலைவிக்குரியதாகிக் கைக்கிளையாயிற்று. அவன் பார்வையை விரும்பியதால் புகுமுகம் புரிதல்.

"மாண்மறந் துள்ளா நாணிலிக் கிப்போர்
புறஞ்சாய்ந்து கண்டைப்பாய் நெஞ்சே யுறழ்ந்திவனைப்
பொய்ப்ப விடேஎ மெனநெருங்கிற் றப்பினே
னென்றடி சேர்தலு முண்டு"[1] (கலி. 89)

இதனுட், சிதைவு பிறர்க்கின்மை வந்தவாறு; ஒழிந்தனவும் அன்ன.

"நோய்சேர்ந்த திறம்பண்ணி நின்பாண னெம்மனை
நீசேர்ந்த வில்வினாய் வாராமற் பெறுகற்பின்" (கலி. 77)

என்பது, மடந்தபவுரைத்தல். இவை யெல்லாங் கற்பின்கண் வந்தன.

" அன்னை சொல்லு முய்க மென்னதூஉ
மீரஞ் சேரா வியல்பிற் பொய்ம்மொழிச்
சேரியம் பெண்டிர் கௌவையு மொழிக" (அகம். 65)

என்பதோவெனின், அது 'பாராட் டெடுத்தல் மடந்தப வுரைத்தல்' (264) என்புழி அடங்குமென்பது. (19)

சிவலிங்கனார்

அன்ன பிறவும் .... மென்ப.

இச் சூத்திரம் புறனடை

(இ-ள்) அன்ன பிறவும் - முன் சூத்திரங்களிற் சொல்லப்பட்ட மெய்ப்பாடுகள் போல்வன பிறவும், அவற்றொடு சிவணி - அவற்றொடு பொருந்தி, மன்னியபின் நிகழும் கற்பிலக்கணத்துக்குப் பொருந்திய, வினைய - நிமித்தங்களான நிகழ்ச்சிகள், என்ப - என்பர் முன்னோர் என்றவாறு.

'சிவணி' என்பதை எச்சமாகக் கொள்ளாமல் சிவணுவன எனக் காரணப்பெயராகக் கொண்டனர் உரையாளர் இருவரும்.

மேற்கூறிய மெய்ப்பாடுகளும் பிறவும் கற்பொழுக்கத்துக்கு நிமித்தங்கள் என்பதால் அம் மெய்ப்பாடுகள் நிகழ்ந்து முடிவில் கற்பொழுக்கம் மேற்கொள்ளல் வேண்டும் என்பது முடிவு.

264. வினையுயிர் மெலிவிடத் தின்மையும் உரித்தே. (20)

இலக்குவனார்

268. These will be nowhere when the spirit of action succumbs to the passion of love.

1. நெஞ்சமே! மிகவும் நம்மை மறந்து நினையாத நாண் இலியாகிய தலைவனுக்கு இப் போரில் (ஊடல்) புறமாகச் சாய்த்து ஏற்பாயாக அதுவன்று இவனொடு மாறுபட்டு நீ பொய் கூறுமாறு நின்னைவிடேம் என்று நெருங்கிக் கூறினால் உடனே தவறு செய்து விட்டேன் என்று கூறி நம் மடியில் வீழ்தலும் செய்வான். புறஞ்சாய்ந்துகாண் என்பது சிதைவு பிறர்க்கு இன்மையாம்.

இளம்பூரணர்

264. வினையுயிர் ------------------ உரித்தே.

என்-னின், மேலதற்கோர் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) கரணநிகழ்ச்சி[1] உயிர் மெலிந்தவிடத்து இன்மையும் உரித்து என்றவாறு.

எனவே, இயற்கையும்[2] நிகழும் என்றவாறாம். உம்மை எதிர்மறையாகலால், கரணநிகழ்தல் பெரும்பான்மை. உயிர் மெலிவிடம் என்றமையால் ஐந்தாவது முதலாக இயற்கை நிகழும் என்று கொள்க. அதனானேயன்றே யவ்வழி தெரிந்துடம்படுதல் என ஓதுவாராயிற்றென்க[3] (20)

பேராசிரியர்

268. வினையுயிர் .... முரித்தே.

இது, மேலனவற்றுக்கே ஆவதோர் விதி கூறுகின்றது

(இ-ள்) 'மன்னிய வினைய' (267) எனப்பட்ட புணர்ச்சி மேல் அறுவகையான் இருபத்து நான்கெனக் கூறப்பட்ட மெய்ப்பாட்டினை அம் முறையானே நிமித்தமாகக் கொண்டு வருதலின்மையும் உரித்தெனப்படும், ஆற்றாமை வந்தவிடத்து என்றவாறு.

மேற்கூறிய இருபத்து நான்கினை யின்மை உரித்தென்பது அதிகாரத்தாற் கொள்க.

"தன்னசை யுள்ளத்து நந்நசை வாய்ப்ப
வின்னுயிர் குழைய முயங்குதொறு மெய்ம்மலிந்து
நக்கனெ னல்லனோ யானே யெய்த்த
நோய்தணி காதலர் வரவீண்
டேதில் வேலற் குலந்தமை கண்டே"[4] (அகம். 22)

---

1. கரண நிகழ்ச்சி என்றது புணர்ச்சிக்கு நிமித்தமான முன்னைச் சூத்திரங்களிற் சொல்லப்பட்ட நிகழ்ச்சிகள்.
2. இயற்கை என்பது இயல்பாக எழும் புணர்ச்சி விருப்பம்.
3. முதல் நான்கு அவத்தைகளிற் சொல்லப்பட்ட புகுமுகம் புரிதல் முதலாகக் கொடுப்பவை கோடல் ஈறாகவுள்ள நிகழ்ச்சிகள் முறையானே நிகழ்வனவாம். ஐந்து ஆறாம் அவத்தைகளிற் சொல்லப்படுவன முறையாக நிகழ்தலும் புணர்ச்சி விருப்பம் முதலிய காரணங்களால் உயிர் மெலிவிடத்து அவை நிகழாமையும் உண்டு என்பதாம் பாராட்டெடுத்தல் முதலாகக் கொடுப்பவைகோடல் ஈறாக உள்ள நான்கும் நிகழ்ந்தபின் தெரிந்துடம்படுதல் முதலிய எட்டும் முறையானே உண்டு என்பதற்காகவே ஆசிரியர் கொடுப்பவை கோடல் என்பதையடுத்துத் தெரிந்துடம்படுதல் என்பதை வைத்தது, ஆராய்ந்து உடம்படாமல் ஆராயாமலே உடம்படுதலும் உண்டு என்பதற்காகவேயாம்.
4. வெறியாட்டெடுக்கத் தலைவியின் நோய் தணிந்தது எனத் தாயர் நினைக்கத் தலைவி தோழியிடம் கூறியதாவது இது. "நம் விருப்பம் அவர் விரும்பும் உள்ளத்தோடு பொருந்த அவர் இனிய உயிர் குழையுமாறு முயங்குதோறும் என் உடல் புளகித்து ஒன்று நினைத்து நகுதல் செய்தேன்; அதாவது பிரிந்த காதலர் வரவே என் உடல் மெலிவு தானாக நீங்கியதாக அது வேலன் வெறியால் நீங்கியது எனப் பிறர் நினைந்தனரே" என்பது.

"வனைந்துவர லிளமுலை ஞெமுங்கப் பல்லூழ்
விளங்குதொடி முன்கை வளைந்துபுறஞ் சுற்ற
நின்மார் படைதலி னினிதா கின்றே"

என இவை, களவியலுள் (111) உயிர் மெலிந்தவிடத்துப் புணர்ச்சி நிமித்தமெனக் கூறப்பட்டவை யின்றியும், புணர்ச்சி நிகழ்ந்தவாறு; என்னை? முயங்குதொறும் நகைதோன்றிற் றெனவே பாராட்டெடுத்தல் முதலாயின வின்றியும் புணர்ச்சி நிகழ்ந்ததாம், ஒழிந்தனவும் அவ்வாறே கொள்க. இவை கண்டவழி யுவத்தலாகாவோவெனின், ஆண்டுத்[1] தன்னுவகை கூறாளன்றே கரந்திடத் தொழிந்தாளாகலி னென்பது.

"தண்டுளிக் கேற்ற பலவுழு செஞ்செய்
மண்போன் ஞெகிழ்ந்தவற் கலுழ்ந்தே
நெஞ்சறை போகிய வறிவி னேற்கே"[2] (அகம். 26)

என்புழி, பாராட்டெடுத்தன் முதலாகிய பன்னிரண்டு நிமித்தமுமின்றி ஆற்றாமை நிமித்தமாகக் கற்பினுட் புணர்ச்சி நிகழ்ந்தது. உம்மை, எதிர்மறை; உயிர்மெலிவிடத்து உடைமையுடைத்துமாம். அவ் வினையென்பது.

"தொடிஞெகிழ்ந் தனவே தோள்சா யினவே" (குறுந்.239)

என்பதனுள், ஊழணி தைவரலென்னும் மெய்ப்பாடு வந்தது. பிறவும் அன்ன.

இனி, மேற்கூறிய ஆறுமேயன்றி இன்னும் இவற்றொடு நான்கு கூட்டிப் பத்தென்பாருமுளர்; அவை இன்பமாதற் குரியனவன்மையின் வரையறை கூறாதொழிந்தாெனென்பது. (20)

சிவலிங்கனார்

வினையுயிர் .... முரித்தே.

இச் சூத்திரமும் புறனடை.

(இ-ள்) புணர்ச்சிவிருப்பால் ஆற்றாமை வந்தபோது மேற் கூறப்பட்ட மெய்ப்பாட்டு வினைகள் நடவாமையும் உரியதாம் என்றவாறு.

உயிர் மெலிவிடத்து வினையின்மையும் உரித்து எனக் கூட்டுக.

உயிர் மெலிவிடம் என்றது ஆற்றாமையை உணர்த்திற்று.

இன்மையும் உரித்து என்றதன் உம்மை எதிர்மறை. உயிர் மெலிவிடத்து அனைத்து மெய்ப்பாடும் இன்மையுரித்து என்பதின்றி

1. கழாது என்பது.

2. மழைத்துளி வீழ்ந்த காரணத்தால் பல தடவை உழப்பட்ட வயலின் மண் நெகிழ்ந்து காணப்படுதல் போலத் தன்மனம் வருந்தி நெகிழ்ந்த தலைவனைப் பார்த்து அதனால் அழுது என்னைவிட்டு அவன்பால் போகிய நெஞ்சத்தையுடைய அறிவுடைய எனக்கு - தலைவன் மனநெகிழ்ச்சி கண்டு தன் நெஞ்சு அறைபோனது என்பது தான் அவன் புணர்ச்சிக்கு உடன்பட்டதாம்.

வரன்முறையாக யாவும் நிகழ்தல் இல்லை; சில நிகழும் சில நிகழா என்க.

265. அவையும் உளவே அவையலங் கடையே. (21)

இலக்குவனார்

269. The following will take place when those (above mentioned) have no place.

இளம்பூரணர்

265. அவையும் உளவே .... கடையே.

என்-னின், கைக்கிளைக் குரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) மேற்சொல்லப்பட்ட புகுமுகம் புரிதல் முதலாயின உள; நடுவணைந்திணை[1] யல்லாத கைக்கிளைப் பொருண்மைக்கண் என்றவாறு.

அவையலங்கடை என்றமையாற்[2] பாடாண்பாட்டிற் கைக்கிளையும் கொள்ளப்படும். அஃதேல், ஆண்டும் புகுமுகம் உளதோ வெனின், தலைமகள் காட்சி மாத்திரத்தைத் தனது வேட்கை மிகுதியாற் புகுமுகமாய்க் கொள்ளும் என்க.[3] பிற்கூறிய அவை என்பன களவும் கற்பும்; முற்கூறிய அவை என்பன புகுமுகம் புரிதல் முதலாயின. அவையலங்கடை யவையுமுளவே என மாறிக் கூட்டுக. (21)

பேராசிரியர்

269. அவையு முளவே .... கடையே..

இஃது, எதிரதுபோற்றி இறந்தது காத்தது.[2]

(இ-ள்) அவையு முளவே - எதிர்வருகின்றனவும் உளவாவது, அவையலங்கடையே - இறந்தனவற்றுக்கு இடனல்லாதவிடத்தே என்றவாறு.

இதனது கருத்து: மேற்கூறிய இருபத்துநான்கு மல்லாதவழி இன்பத்தை வெறுத்தன் (270) முதலாக இனிக் கூறுகின்ற மெய்ப்பாடும் உளவாம் என்றவாறு. அவையல்லாதவிடத்து இவையும் உளவாமெனவே, வருகின்ற மெய்ப்பாடுங்[4] களவிற்குங் கற்பிற்கு முரியவெனவும், களவிற்கு

---

1. என்றது களவு கற்புகளை

2. களவு கற்புகளல்லாத விடத்து என்னாமல் அவையலங்கடை என்றதனால்

3. பாடாண்பாட்டில் ஆடவன் ஒருவனைக் கண்டு காமம்கொண்ட ஒருத்தி அவன் எண்ணம் அறியாளாய்த் தான்மட்டும் அவன் காட்சியை விரும்பும். அவ் விருப்பமே புகுமுகம் புரிதலாம்.

4. அடுத்த சூத்திரத்து வரும் இன்பத்தை வெறுத்தல் முதலியவற்றை அகள் ஐந்திணைக்கு வரும் எனப் போற்றிக்கொண்டு புகுமுகம் புரிதல் முதலாயினவும் நிகழ்வனவே முன்கூறியதைக் காத்ததாம்.

வருங்கான் முதற்கூறிய இருபத்துநான்கின் பின்னுமே இவை[1] பெரும்பான்மையின் வருமெனவும், கற்பிற்காயிற் பயின்று[2] வருமெனவுங் கூறியவாறு. அவை இனிக் கூறுகின்றான். (21)

சிவலிங்கனார்

அவையு முளவே .... கடையே.

இச் சூத்திரமும் புறனடை.

இச் சூத்திரத்துக்கு "நடுவண் ஐந்திணைகள் அல்லாத கைக் கிளைக்கும் மேற்சொல்லப்பட்ட மெய்ப்பாடுகள் உள" என இளம் பூரணரும், "மேலே கூறப்பட்ட மெய்ப்பாடுகளுக்கு இடம் இல்லை யென்றால் அடுத்துக் கூறப்படும் இன்பத்தை வெறுத்தல் முதலிய மெய்ப் பாடுகளும் உளவாம்" எனப் பேராசிரியரும் உரை கூறினர். பேராசிரியர் உரையே சிறக்கும். கைக்கிளைக்குப் புகுமுகம் புரிதல் முதலிய மெய்ப் பாடுகளுள் பல நிகழாமையானும் அத்துணைச் சிறப்பின்மையானும் என்பது.

அடுத்து வரும் 'இன்பத்தை வெறுத்தல்' என்னும் சூத்திரம் பெருந்திணைக்குரியது என இளம்பூரணர் கூறுவதும் ஏற்புடைத்தன்று; பேராசிரியர் கூறுவதே ஏற்புடைத்தாம்.

266. இன்பத்தை வெறுத்தல் துன்பத்துப் புலம்பல்
எதிர்பெய்து பரிதல் ஏதம் ஆய்தல்
பசியட நிற்றல் பசலை பாய்தல்
உண்டியிற் குறைதல் உடம்புநனி சுருங்கல்
கண்துயில் மறுத்தல் கனவொடு மயங்கல்
பொய்யாக் கோடல் மெய்யே என்றல்
ஐயஞ் செய்தல் அவன்தம ருவத்தல்
அறனழிந் துரைத்தல் ஆங்குநெஞ் சழிதல்
எம்மெய் யாயினும் ஒப்புமை கோடல்
ஒப்புவழி யுவத்தல் உறுபெயர் கேட்டல்
நலத்தக நாடிற் கலக்கமும் அதுவே. (22)

230. Being disgusted at the objects of pleasure making lamentations, exhibiting distress, having the objects of the lover in imagination, feeling remorse, examining the obstacles, being subjected to the suffering of hunger, change of colour spreading

1. இன்பத்தை வெறுத்தல் முதலியன.

2. பயின்றுவருதல் - அடிக்கடி வருதல், இடையிடை வருதல்

over the body, having a little food, having the body fatigued, the eyes refusing to have sleep, having dreams mistaking the truth for lie, asserting lie to be true, having doubt, rejoicing on seeing his men, loving the God of justice, being broken - hearted, comparing any object with her lover being glad at the sight of the similar object, having pleasure in hearing the name of the lover, being bewildered not knowing what to do - all these belong to the category of *meyppādu.*

இளம்பூரணர்

266. இன்பத்தை வெறுத்தல் .... அதுவே.

என்-னின், மேல் நடுவ ணைந்திணைப் பகுதியாகிய களவிற்கும் கற்பிற்கு முரிய மெய்ப்பாடு உணர்த்தி, அதன்பின் கைக்கிளைக் குரியவாமாறு உணர்த்தினார். இனி இச் சூத்திரத்தாற் பெருந்திணைக் குரிய மெய்ப்பாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) இன்பத்தை வெறுத்தல் முதலாகச் சொல்லப்பட்ட இருபதும் ஆராயின் நடுவணைந்திணை யல்வழி வரும் என்றவாறு.

அது என்பது - 'அவையு முளவே யவையலங் கடையே' என்பதைச் சுட்டி நின்றது.[1] கலக்கமும் நாடின் என மாறுக. ஏற்புழிக்கோடல் என்பதனாற் பெருந்திணைப்பாற் கொள்ளப்படும்.[2] இது களவிற்கும் கற்பிற்கும் ஒக்கும். இவை தேறுதலொழிந்த காமத்தின்பாற்படுவனவும் மிக்க காமத்தின் மிடலின்பாற் படுவனவுமாம். (அகத்திணை. 54)

இன்பத்தை வெறுத்தல் என்பது - கோலஞ்செய்தல் முதலியன வற்றை வெறுத்தலும் தென்றலும் நிலவு முதலாயினவற்றை வெறுத்தலும். இவ்வாறு களவின்கண் வரிற் பிறர்க்கும் புலனாம். கற்பின்கண் வரிற் பிறர் இயல்வழி மயங்கல் இன்றாம்.

> "கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
> எழுதேங் கரப்பாக் கறிந்து"[3] **(குறள். 1127)**

---

1. அது என ஒருமையிற் கூறியது 'அவையும் உளவே' என்னும் சூத்திரத்தைக் குறித்தது.
2. அது என்பதன் பொருள் களவு கற்பு எனும் ஐந்திணையல்லாதது என்பதாகும். அது யாதெனின் முன் கைக்கிளை கூறப்பட்டுவிட்டமையின் இங்குப் பெருந்திணையை ஏற்புழிக்கோடலால் கொள்ளல் வேண்டுவதாயிற்று.
3. என் காதலர் என் கண்ணுள்ளே உள்ளார்; அதனால் என் கண்ணை மையிட்டு அணி செய்யேன்; ஏன்எனில் அணிசெய்யின் அவர் மறைவார்.

"சிறுகுழல் ஓசை செறிதொடீஇ வேல்கொண்
டெறிவது போலும் எமக்கு"[1]

என வரும்.

துன்பத்துப் புலம்ப லாவது - துன்பத்தின்கண்ணே புலம்புறுதல்.

"இன்பங் கடல்மற்றுக் காமம் அஃதடுங்கால்
துன்பம் அதனிற் பெரிது"[2] (குறள். 1126)

என வரும்.

எதிர்பெய்து பரிதல் என்பது - தலைமகன் முன்னின்றி அவனின்றாகப் பெய்துகொண்டு வருந்துதல்.

"கண்ணுள்ளிற் போகார் இமைப்பிற் பருவரார்
நுண்ணியர்எங் காத லவர்"[3] (குறள். 1126)

என வரும்.

ஏதமாய்தல் என்பது - குற்றமாராய்தல்.

"துப்பின் எவனாவர் மற்கொல் துயர்வரவு
நட்பினுள் ஆற்று பவர்"[4] (குறள். 1165)

என வரும்.

பசியட நிற்றல் என்பது - உண்ணாமை.

"நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக் கறிந்து"[5] (குறள். 1128)

பசலை பாய்தல் என்பது - பசலை பரத்தல்.

"பசந்தாள் இவளென்ப தல்லால் இவளைத்
துறந்தார் அவரென்பார் இல்"[6] (குறள். 1188)

என வரும்.

உண்டியிற் குறைதல் என்பது - உணவு சுருங்குதல்.

"பாலும் உண்ணாள் பழங்கண் கொண்டு" (அகம். 48)

என வரும்.

---

1. செறிந்த தொடியுடைய தோழியே! சிறிய குழல் ஓசையும் எனக்கு வேல்கொண்டு எறிவது போல இருக்கும்.
2. இன்பம் கடல்போற் பெரிது; அதனைக் காமம் சுடும்போது வரும்துன்பம் அக் கடலிற் பெரிதாகும்.
3. எம் காதலர் எம் கண்ணினின்றும் போகார்; கண் இமைத்தால் அதற்காகத் துன்புறார்; அதனால் அவர் மிக நுண்ணியர் - இது உருவைத் தன் எதிரே கொண்டு கூறியது.
4. நட்பில் துன்ப வரவினைச் செய்பவர் பகைமையில் என்ன துன்பம் செய்யமாட்டார்.
5. காதலர் எம் நெஞ்சத்திடத்தாராக அதனால் சூடாக உணவை உண்டலுக்கு அஞ்சுவேம், அவர் வேதனை அறிந்து.
6. இவள் பிரிவாற்றாது பசலைநிறம் கொண்டாள் என்று என்னைப் பழி தூற்றுவதல்லாமல், இவளை அவர் பிரிந்து சென்றார் என அவரது குறையைக் கூறுவார் இல்லை.

உடம்புநனி சுருங்கல் என்பது - உண்ணாமை காரணமாகத் தன்னுடம்பு மிகச் சுருக்கமுறுதல்.

"பணைநீங்கிப் பைந்தொடி சோருந் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள்"[1] (குறள். 1234)

என வரும்.

கண்டுயின் மறுத்தல் என்பது - உறங்காமை.

"மன்னுயிர் எல்லாந் துயிற்றி அளித்திரா
என்னல்ல தில்லை துணை"[2] (குறள். 1168)

என வரும்.

கனவொடு மயங்கல் என்பது - கனவை நனவென மயங்குதல்.

"நனவினால் நல்காக் கொடியார் கனவினால்
என்னெம்மைப் பீழிப் பது"[3] (குறள். 1168)

என வரும்.

பொய்யாக் கோடல் என்பது - தலைவன் கூற்றுத்தன்னைப்[4] பொய்யாக் கோடல்.

"வாயல்லா வெண்மை யுரையாது சென்றீநின்
மாய மருள்வா ரகத்து"[2] (கலி. 88)

மெய்யே யென்றல் என்பது - உரைத்த மாற்றத்தை மெய்யெனக் கூறுதல். ஏகாரம் வினா.

"மெய்யே வாழி தோழி! சாரல்
மைப்பட் டன்ன மாமுக முசுக்கலை
யாற்றப் பாயத் தப்பல் ஏற்ற
கோட்டொடும் போகி யாங்கு நாடன்
தான்குறி வாராத் தப்பற்குத்
தாம்பசந் தனவென் தடமென் தோளே"[6] (குறுந்.121)

இதனுட் 'கூறியது' என ஒரு சொல் வரவேண்டும்.

ஐயஞ் செய்தல் என்பது - தலைவன் குறிப்புக் கண்டு ஐயப்படுதல்.

---

1. ஒரு நாளாவது நனவில் வந்து நம்மைச் சேராத கொடிய தலைவர் கனவில் வந்து நம்மை வருத்துவது ஏன்?

2. கூற்றுத்தன்னை - கூற்றை

3. உண்மையல்லாத பொய்யை எம்மிடம் கூறாமல் நின் மாயப் பொய்மொழியைக் கேட்டு மயங்குவாரிடம் செல்க.

4. தோழீ! தலைவன் குறியிடம் வந்து பெயர்ந்தான் என நீ கூறியது மெய்யோ இல்லையோ? மலைச்சாரலில் முசுக்கலையானது கிளைவிட்டுக் கிளை பாயும்போது அதனைத் தாங்க முடியாது கொம்பு முறியக் குரங்கின் தவற்றுக்கு (கீழேவிழுந்ததற்கு) உரிய பழி குரங்குக் காகாது கொம்புக் காதல்போலத் தலைவன் குறியிடம் வாய்க்காது போன தவற்றுக்கு என் தோள் பசந்தன தாம் தவறு செய்தனபோல - இது தலைவி தோழியிடம் கூறியது.

5. அன்று துணைவன் நீங்கியதால் இயற்கையும் செயற்கையுமான அழகுகள் நீங்கின என் தோள்கள்; இன்றும் தன் பெருமை நீங்கி அதனால் பைந்தொடியும் வீழ்வதாயிற்று.

6. ஐயோ பாவம் இரவு! நிலைத்த உலகத்துயிர்களை யெல்லாம் தூங்கப் பண்ணியதால் என்னையன்றி வேறு துணையில்லாததாயிற்று.

"ஒண்ணுதல் நீவுவர் காதலர் மற்றவர்
கண்ணுவ தெவன்கொலோ அறியேன் என்னும்" (கலி.4)

என வரும்.

அவன்றம ருவத்தல் என்பது - தலைவன் தமரைக் கண்டவழி உவத்தல்.

"செய்வன சிறப்பிற் சிறப்புச்செய் திவ்விரா
எம்மொடு சேர்ந்துசென் றீவாயாய் செம்மால்
நலம்புதி துண்டுள்ளா நாணிலி செய்த
புலம்பெலாந் தீர்க்குவேம் மன்" (கலி. 83)

என வரும்.

அறனழித் துரைத்தல் என்பது - அறத்தினை யழித்துக் கூறுதல்.

"விளியுமென் இன்னுயிர் வேறல்லம் என்பார்
அளியின்மை யாற்ற நினைந்து"[1] (குறள். 1209)

என வரும்.

ஆங்குநெஞ் சழிதல் என்பது - அறனழிந் துரைக்குமிடத்து நெஞ்சழிந்து கூறுதல்.

"பெறாஅமை அஞ்சும் பெறிற்பிரி வஞ்சும்
அறாஅ விடும்பைத்தென் நெஞ்சு"[2] (குறள். 1295)

என வரும்.

எம்மெய் யாயினும் ஒப்புமை கோடல் என்பது - யாதானுமோர் உடம்பாயினுந் தன்னோடு ஒப்புமை கோடல் என்றவாறு.

"புன்கண்ணை வாழி மருள்மாலை எங்கேள்போல்
வன்கண்ண தோநின் துணை"[3] (குறள். 1222)

என வரும். அளியின்மை யறனின்மை கூறினாளுமாம்.

ஒப்புவழி யுவத்தல் என்பது - தலைமகனோடு ஒக்குமெனப் பிறிதொன்று கண்டவழி யுவத்தல்.

"யாவருங் காணுநர் இன்மையிற் செத்தனள் பேணி"

என வரும்.[4]

---

1. நாம் இருவரும் வேறு வேறானவர் அல்லேம் என்று முன் சொன்ன காதலரது இன்று இரக்கமில்லாமையை நினைந்து என் உயிர் தேயும்.

2. காதலரைப் பெறாத காலத்து அதற்கு அஞ்சும்; அவரைக் கூடின காலத்து மீண்டும் பிரிவுண்டு என அஞ்சும். ஆதலால் என் நெஞ்சம் அப்போதும் நீங்காத துன்பத்தை யுடையதாகும்.

3. மயக்கத்தையுடைய மாலைக் காலமே! நீ துன்பம் உடையையாய் இருப்பாய்; அதன் காரணம் எம் காதலர் போல நின் காதலரும் வன்கண்மையுடையரோ? சொல்.

4. என்னும் பாட்டில் ஒப்புவழி யுவத்தல் வரும் எனக் கொள்க.

உறுபெயர் கேட்டல் என்பது - தலைவன் பெயர் கேட்டு மகிழ்தல்.

"நகைஇயார் நல்காா் எனினும் அவர்மாட்
டிசையும் இனிய செவிக்கு"[1] **(குறள். 1199)**

என வரும்.

கலக்கம் என்பது - மனங்கலங்குதல். மேற் 'கலங்கி மொழிதல்' என்பது ஒருகாற் சொல்லின்கண் வந்து பெயர்வது. இது மனங்கலங்கி நிற்கும் நிலை.

"பொங்கிரு முந்நீர் அகமெல்லாம் நோக்கினை
திங்களுள் தோன்றி யிருந்த குறுமுயால்
எங்கேள் இதனகத் துள்வழிக் காட்டீமோ
காட்டீயா யாயிற் கதநாய் கொளுவுவேன்
வேட்டுவ ருள்வழிச் செப்புவே னாட்டி
மதியொடு பாம்பு மடுப்பேன் மதிதிரிந்த
என்னல்லல் தீரா யெனின்"[2] **(கலி. 144)**

"கோடுவாய் கூடாப் பிறையைப் பிறிதொன்று
நாடுவேன் கண்டனென் சிற்றிலுட் கண்டாங்கே
ஆடையான் மூஉ யகப்படுப்பேன் சூடிய
காணான் திரிதருங் கொல்லோ மணிமிடற்று
மாண்மலர்க் கொன்றை யவன்[3]" **(கலி.142)**

என வரும்.

இச் சூத்திரத்துள் 'நலத்தக நாடி' எனக் கலக்கத்தைப் பிரித்து வைத்தமையாற் சொல்லப்பட்ட பத்தொன்பதினும் முதிர்ந்துவந்த நிலை என்று கொள்ளப்படும். இச் சூத்திரம் பொதுப்படக் கூறினமையாற் றலைமகற்கு ஏற்ப வருவன கொள்க. (22)

பேராசிரியர்

270. இன்பத்தை வெறுத்த .... மதுவே.

இது, மேல் 'அவையுமுள' (269) எனப்பட்ட மெய்ப்பாடு கூறுகின்றது.

---

1. என்னால் விரும்பப்பட்ட காதலர் என்னிடம் வந்து அருள் செய்யார் என்றாலும் அவரைப்பற்றிய சொல் என் செவிக்கு இனிதாகும். (சொல் என்றது பெயரிட்டுக் கூறும் சொல்)

2. திங்களுள் தோன்றியிருக்கும் சிறுமுயலே! கடல்சூழ்ந்த உலகமெல்லாம் நீ பார்த்துள்ளாய். அதனால் என் கணவன் இருக்கும் இடம் அறிவாய். அவ்விடத்தை எனக்குக் காட்டுக; அவனைக் காணாமல் அறிவு திரிந்த என் துயரை அவனைக் காட்டுவதால் தீர்க்க மாட்டாய் எனின் நின்னைக் கதநாயை ஏவிக் கடிக்கவிடுவேன்; வேட்டையாடுவோர் உள்ள இடம் சென்று நின்னை வேட்டையாடச் சொல்வேன்; பாம்பைப் பிடித்தாட்டி நீ யிருக்கும் மதியோடு விழுங்கச் செய்வேன்.

3. இருமுனையும் கூடாத பிறையை என் சிற்றிலில் கண்டு அது முனைகூடி நிறை மதியாயின் வருத்தும் எனக் கருதி என் ஆடையால் மூடி என் அகப்படுத்துவேன்; அதனால் மணிமிடற்றையுடைய கொன்றை மலரணிந்த சிவன் தன் முடியிற் சூடக் கருதிப் பார்க்கப் பிறை காணாமை கண்டு திரிவானோ?

(இ-ள்) எண்ணப்பட்ட இருபதும் ‘மன்னிய வினைய நிமித்தம்’ (267) என்பான் ‘நலத்தக நாடின் அதுவே’ யாமென்றானென்பது. இவை புணர்ச்சிக்கு நிமித்தமாகாதனபோன்று காட்டினும் அவற்றை மிகவும் ஆராய்ந்துணரிற் புணர்ச்சி நிமித்தமேயாம் என்றவாறு.

இன்பத்தை வெறுத்தலென்பது, யாழுங்குழலும் பூவுஞ்சாந்தும் முதலாக இன்பத்திற்கேதுவாகிய பொருள் கண்டவழி அவற்றின்மேல் வெறுப்புத் தோன்றுதல். அவை காமத்திற்கு ஒரு வகையான் ஏதுவாகலின்[1] ‘மன்னிய வினைய நிமித்தம்’ (267) எனப்படுமாகலான் அவற்றை வெறுத்தல் புணர்ச்சிக் கேதுவாகா தன்றே யாயினும் அதனை ஆராய்ந் துணரின் நிமித்தமென வேண்டுமென்பான் ‘நலத்தக நாடி னதுவே’ என்றானென்பது ‘கலக்கமும்’ என நின்ற உம்மை மேற்கூறிய பத்தொன் பானையுந் தழுவலின் இறந்தது தழீஇயிற்றாம்.

“ கல்லாக் கோவல ரூதும்
வல்வாய்ச் சிறுகுழல் வருத்தாக் காலே” (அகம். 74)

என்புழி, இன்பத்தை வெறுத்தனளாயினும் புணர்ச்சிக் கேதுவாமென்பது கருத்து.

“எல்லி, மனைசேர் பெண்ணை மடிவா யன்றி
றுணையொன்று பிரியினுந் துஞ்சா காணெனக்
கண்ணிறை நீர்கொண்டு கரக்கு
மொண்ணுத லரிவையா னென்செய்கோ வெனவே”[2] (அகம்.50)

என்பதும் அது.

துன்பத்துப் புலம்பல் என்பது, பிரிவாற்றாது தன்புறுங்காலை அவ் வாற்றாமை தலைமகற்கின்றித் தானே துன்புறுகின்றாளாகச் சொல்லுதல். அவை கூட்டத்தை வெறுத்த குறிப்பாயினும் அக் கூட்டத்திற்கே நிமித்தமாகும், ஆராய்ந்துணரி னென்றவாறு; அவை,

“ நின்னுறு விழுமங் களைந்தோ
டன்னுறு விழும நீந்துமோ வெனவே”[3] (அகம். 170)

என வரும்.

எதிர்பெய்து பரிதலென்பது, உருவு வெளிப்பாடு; அது, தலைமகனையும் அவன் தேர்முதலாயினவற்றையுந் தன்னெதிர் பெய்துகொண்டு பரிந்து கையறுதல்; அது,

---

1. காமத்துக்கு ஏதுவாவது தலைவனொடு கூடியிருப்பின் இவை இனிமை தருமே என எண்ணுதலால் என்க.

2. அரிவையே! இரவில் மனைக்கண் உள்ள பனைமரத்தில் உள்ள அன்றிலானது தன் துணை பிரியின் துயிலாது என்று சொல்லித் தன் கண்ணில் நிரம்ப நீர் கொண்டு என் செய்வேன் எனத் தன்றுயரை மறைக்கும்.

3. நினக்குற்ற துன்பத்தைக் களைந்தவள் தானுற்ற துன்பத்தை நீந்துமோ?

"வாரா தாயினும் வருவது போலச்
செவிமுத லிசைக்கு மரவமொடு
துயின்மறந் தனவாற் றோழியென் கண்ணே"[1] (குறுந். 301)

என்புழி, வாராதென் றுணர்ந்தது இக்காலத்தாகலான் அதற்குமுன் இன்னவாறு பட்டதன்று என்றமையின் எதிர்பெய்து பரிதலாயிற்று.

ஏதமாய்தலென்பது, கூட்டத்திற்கு வரும் இடையூறு உண்டென்று பலவும் ஆராய்தல்; அது, நொதுமலர் வரையக் கருதுவர்கொல்லெனவும், பிரிந்தோர் மறந்து இனி வாரார்கொல்லெனவுந் தோன்றும் உள்ள நிகழ்ச்சி; அது,

"வாரார் கொல்லெனப் பருவருந்
தாரார் மார்பநீ தணந்த ஞான்றே" (அகம். 150)

என வரும்.

பசியட நிற்றலென்பது, பசி வருத்தவும் அதற்குத் தளராது உணவு மறுத்தல்.

"அன்னாய் வாழிவேண் டன்னை நின்மகள்
பாலு முண்ணாள் பழங்கண்[2] கொண்டு
நனிபசந் தனளென வினவுதி" (அகம். 48)

எனவும்,

"இனியா னுண்ணலு முண்ணேன் வாழலும் வாழேன்"
(கலி. 23)

எனவும் வரும்.

பசலை பாய்தலென்பது, பசலைபரத்தல்; அது,

"கன்று முண்ணாது கலத்தினும் படாது
நல்லான் றீம்பா னிலத்துக் காஅங்
கெனக்கு மாகா தென்னைக்கு முதவாது
பசலை யுணீஇயர் வேண்டுந்
திதலை யல்குலென் மாமைக் கவினே"[3] (குறுந். 27)

என வரும்.

உண்டியிற் குறைத லென்பது, பசியட நிற்றலே யன்றிச் சிறிது உண்டி யூட்டியவழிப் பண்டுபோலாது கழியவுஞ் சிறிதுண்டல்; அது,

1. தோழி! தலைவன் தேர் என் எதிர் வாராதாயினும் வருவதுபோல என் செவியில் இசைக்கும் ஒலியொடு என் கண்கள் துயிலை மறந்தன. வாராதாயினும் வருவதுபோல என்றது எதிர்பெய்தல்.

2. பழங்கண் - துன்பம்

3. நல்ல பசும்பால் கன்றுக்கும் உண்ணப்பயன்படாமல் கறக்கும் கலத்தினும் வீழாமல் நிலத்தில் சொரிந்தாற்போல என் அல்குலின் மணி நிறம் எனக்கும் அழகு தாராமல் என் தலைவனுக்கும் பயன்படாமல் பசலையால் உண்ணப்படுவதாயிற்று.

"தீம்பா லூட்டினும் வேம்பினுங் கைக்கும்
வாரா யெனினு மார்வமொடு நோக்கு
நின்னிற் சிறந்ததொன் றிலளே
யென்னினும் படாஅ ளென்னிதற் படலே"[1] (இ.வி.ப. 537)

என வரும்.

உடம்புநனி சுருங்கலென்பது, அவ்வுண்ணாமை உயிரிற் செல்லாது உடம்பிற் காட்டுதல்; அது,

"தொடிநிலை நெகிழச் சாஅய்த் தோளவர்
கொடுமை கூறிய வாயினுங் கொடுமை
நல்வரை நாடற் கில்லை தோழியென்
நெஞ்சிற் பிரிந்ததூஉ மிலரே
தங்குறை நோக்கங் கடிந்ததூஉ மிலரே"[2]

என வரும்.

கண்டுயின் மறுத்தலென்பது, இரவும் பகலுந் துஞ்சாமை. அது;

"புலர்குர லேனற் புழையுடை யொருசிறை
மலர்தார் மார்ப நின்றோற் கண்டோர்
பலர்தில் வாழி தோழி யவரு
ளாரிருட் கங்கு லணையொடு பொருந்தி
யோர்யா னாகுவ தெவன்கொ
னீர்வார் கண்ணொடு நெகிழ்தோ ளேனே"[3] (அகம்.82)

என வரும்.

கனவொடு மயங்கலென்பது, அரிதினில் துயிலெய்தியவழித் தலைமகனைக் கனவிற் கண்டு பின்னர் அவனன்மையின் மயங்கும் மயக்கம்.

"அலந்தாங் கமையலே னென்றானைப் பற்றியென்
னலந்தாரா யோவெனத் தொடுப்பேன் போலவுங்
கலந்தாங் கேயென் கவின்பெற முயங்கிப்
புலம்ப லோம்பென வளிப்பான் போலவும்"[4] (கலி. 128)

---

1. தலைவ! இனிய பாற்சோறு ஊட்டினும் வேம்புபோலக் கசக்கும் என்பாள்; நீ வரவில்லையென்றாலும் ஆர்வமொடு பார்க்கும் அவட்கு நின்னினும் சிறந்தது ஒன்றும் இல்லை; என்வழிப் படாமலும் உள்ளாள், இதற்கு யான் என்செய்வேன் - தோழி கூற்று.

2. தோழீ! என் தோள் தொடி நெகிழுமாறு இளைத்து அவர் கொடுமையைக் கூறுவனவாக இருந்தாலும் அக் கொடுமை மலைநாடனாகிய அவர்க்கு இல்லை. அவர் என் நெஞ்சிற் பிரியவில்லை தம் குறைபாடாகிய நோக்கத்தையும் போக்கிலர். என் செய்வன்? - தலைவி கூற்று.

3. தினைப்புனத்து ஒருபக்கமாக நின்ற அவனைக் கண்டோர் பல மகளிராவர். அவருள் யான்மட்டும் இரவில் படுக்கையில் நீர்வாரும் கண்ணேனாய் நிற்றற்குக் காரணம் என்?

4. நின்னைப் பிரிந்து அவ்விடத்தே உயிர்வாழேன் என்ற தலைவனைப் பற்றி நீ கொண்ட என் நலனைத் தந்து செல் என்று கூறி வளையது போலவும், அப்போதே கூடி முயங்கி வருந்தாதே என்று அருள் செய்வான் போலவும் கனவு கண்டேன்.

என்பது, கனவொடு மயங்கிற்று.

பொய்யாக் கோடலென்பது, மெய்யைப் பொய்யாக் கோடல்; அது,

"கனவினா னெய்திய செல்வத் தனையதே
யைய வெமக்குநின் மார்பு"[1] (கலி. 68)

எனவும்,

"வானி னிலங்கு மருவித்தே தானுற்ற
சூள்பேணான் பொய்த்தான் மலை"[2] (கலி. 41)

எனவும்,

"வருதுமென்ற நாளும் பொய்த்தன
வரியே ருண்க ணீரு நில்லா"[3] (அகம். 144)

எனவும் வரும்.

மெய்யேயென்றலென்பது, பொய்யை மெய்யென்று துணிதல்; அது,

"கழங்கா டாயத் தன்றுநம் மருளிய
பழங்க ணோட்டமு நலிய
வழுங்கின னல்லனோ வயர்ந்ததன் மணனே"[2] (அகம். 66)

என்பது, தானே தன் மகனை வாயில் கொண்டு புக்கானாயினும் அதனைப் பழங்கண்ணோட்டம் முன் நலிதரப் பொய்யே புகுந்தானென்று மெய்யாகத் துணிந்துகோடலின் அப் பெயர்த்தாயிற்று.

ஐயஞ்செய்த லென்பது,

"தூதவர் விடுதரார் துறப்பார்கொ னோதக
விருங்குயி லாலு மரோ"[5] (கலி. 33)

என்புழி, நம்மை இம்மைப பிறப்பினுள் துறப்பார்கொல்லென வாளாதே ஐயஞ்செய்தமையின் ஐயமாயிற்று.

அவன்றம ருவத்தலென்பது,

"ஊர னூரன் போலுந்
தேரும் பாணன் றெருவி னானே"[6] (இ.வி.ப. 537)

---

1. எமக்கு நின் மார்பு புணர்ச்சி கனவில் கிடைத்த செல்வம்போல் நில்லாது. புணர்ச்சி மெய்மையானது. அது நிலையாது எனப் பொய்யாகக் கொள்ளப்பட்டது.
2. பொய்த்தான் மலையாகியும் இலங்கும் அருவியுடையதாயிற்று இலங்கும் அருவி மெய்மை. அதை மறுப்பது பொய்யாக் கோடல்.
3. வருதும் என்ற நாளில் வாராமையின் மெய்யும் பொய்யாகக் கோடல்.
4. கழங்கு விளையாடிய தோழியர் கூட்டத்தில் அன்று நம்மை அருள் செய்த பழைய அருட்செயலும் தன்னை வருத்தத் தான் (தலைவன்) பரத்தையரொடு கொண்ட மணத்தை நிறுத்தினான் - இது மகனை வாயிலாகக் கொண்டு புக்க தலைவனைப் பற்றித் தலைவி தோழியிடம் கூறியது.
5. நாம் துன்புறக் குயில் கூவவும் அவர் யாதொரு தூதும் நம்மிடம் விடுவாரல்லர், நம்மைத் துறப்பரோ? - இது ஐயம்.
6. நம்மை ஆயும் பாணன் தெருவில் உள்ளான்; அதனால் ஊரனாகிய தலைவன் நம்மூரில் உள்ளான் போலும்.

என்பது, அவன் றமரைக் கண்டு உவந்தது. இது முனிவெனப்படாதோ வெனின், அது தலைமகனைப் புலந்தாற் போல்வதோர் முனிவாயினல்லது பகைபட நிகழாக் குறிப்பெனப்படும்; அல்லாக்கால், அது பெண்டன்மை யன்றாமாகலின்.

"அவர்நாட்டு, மாலைப் பெய்த மணங்கம ழுந்தியொடு
காலை வந்த காந்தண் முழுமுதன்
மெல்லிலை குழைய முயங்கலு
மில்லுய்த்து நடுதலுங் கடிய தோட்கே"[1] (குறுந். 361)

என்பதும் அது.

அறனளித் துரைத்தலென்பது, அறக்கிழவனை அன்பு செய்தல்; அது,

"பாங்கர்ப் பல்லி படுதொறும் பரவிக்
கன்றுபுகு மாலை நின்றோ ளெய்தி" (அகம். 9)

என வரும்.[2]

ஆங்கு நெஞ்சழிதலென்பது, அங்ஙனம் உரைக்குங்கால் நெஞ்சழிந் துரைத்தல்; எனவே, அறனளித்துரைத்தல் அழிவின்றொன்றாமென்பது சொல்லினானாம்; அது,

"பழிதபு ஞாயிறே பாடறியா தார்கட்
கழியக் கதழ்வை யெனக்கேட்டு நின்னை
வழிபட் டிரக்குவேன் வந்தே னென்னெஞ்ச
மழியத் துறந்தானைச் சீறுங்கா லென்னை
யொழிய விடாதீமோ வென்று"[3] (கலி. 143)

எனவும் வரும்.

எம்மெய்யாயினு மொப்புமை கோட லென்பது, யாதானும் ஒரு பொருள் கண்டவிடத்துத் தலைமகனோ டொப்புமை கோடல்; அது,

"கணைகழி கல்லாத கல்பிறங் காரிடைப்
பணையெருத் தெழிலேற்றின் பின்னர்ப்
பிணையுங் காணிரோ பிரியுமோ வவையே"[4] (கலி. 20)

---

1. அவர் நாட்டின் மலையில் மாலைப் பெய்த மழைவெள்ளத்தால் நம்மூரில் காலையில் அடித்துவரப் பெற்ற காந்தளின் முழுச் செடியை மெல்லிய இலை குழையுமாறு நம் உடம்பில் தழுவுதலையும் அச் செடியை நம் மனைக்கண் நடுதலையும் விலக்காதவளாகிய தாய் - இதில் தலைவன் நாட்டுக் காந்தனைக் கண்டு உவந்தது.

2. பல்லி ஒலிப்பதைப் பரவுதலின் அறனளித்து உரைத்தலாயிற்று. பல்லி சொல்லும் சொல் அறனெனப்பட்டது.

3. பழிதீர்ந்த ஞாயிறே! உலகியலறியாதாரை மிகச் சீறுவாய் எனக் கேட்டு என்னை மனமழியத் துறந்த தலைவனைச் சீறும்போது யான் இறக்குமாறு அவனைச் சீறாதே என்று நின்னை வழிபட்டு இரப்பேன் வந்தேன்.

4. விடும் அம்பும் நுழையாதபடி பாறைகள் நெருங்கிய அரிய வழியில் பருத்த அழகிய எருதாகிய ஏற்றின் பின்னர் அதன் பிணையும் காண்பீர்; அவை பிரியுமோ - எருதும் பிணையும் பிரியாமைபோல் நீயும் தலைவியும் பிரியாமை வேண்டும் என ஒப்புமை காண்க.

என, எம்மெய்யாயினும் ஒப்புமை கொண்டவாறு. 'எம்மெய் யாயினும்' என்றமையாற் கண்ட பொருளும் கேட்ட பொருளும் ஒப்புமை கொள்ளப்பெறு மென்றவாறு.

ஒப்புவழி யுவத்த லென்பது, ஒப்புமையுண்டாகிய வழியே உவமை கொண்டு அதனானே உவகை தோன்றுவது எனவே, முன்னது ஒப்பின்றி ஒப்புமை கொண்டதாயிற்று. என்னை? எம்மெய்யாயினு மென்றமையின்.

> "காமரு நோக்கினை யத்தத்தா வென்னுநின்
> றேமொழி கேட்ட லினிதுமற் றின்னாதே"[1] (கலி. 80)

என்பது, ஒப்புவழி யுவந்தது, என்னை? காமரு நோக்கினை யென்றமையின்.[2]

> "பால்கொள லின்றிப் பகல்போன் முறைக்கொல்கா
> கோல்செம்மை யொத்தி பெருமமற் றொவ்வாதி" (கலி. 86)

என வருவதூஉஞ் சொல்லுப.

உறுபெயர் கேட்டலென்பது, தலைமகன் பெரும்புகழ் கேட்டு மகிழ்தல்; அது,

> " பலவின் பழத்துட் டங்கு மலைகெழு வெற்பனைப்
> பாடுகம் வா" (கலி.41)

எனவும்,

> " மென்றோ ணெகிழ்த்தான் றிறமல்லால் யான்காணே
> னன்றுதீ தென்று பிற" (கலி.142)

எனவும் வரும்.[3]

கலக்கமென்பது, சொல்லத்தகாதன சொல்லுதல்; அது,

> " பையெனக் காண்கு விழிப்பயான் பற்றிய
> கையுளே மாய்ந்தான் கரந்து."[4] (கலி.142)

எனவும்

> " பிறங்கிரு முந்நீர் வெறுமண லாகப்
> புறங்காலிற் போக விறைப்பேன் முயலி
> னறம்புணை யாகலு முண்டு"[5] (கலி. 144)

---

1. விருப்பந்தரும் நோக்குடைய குழந்தையே! நீ அத்தா அத்தா எனக் கூறும் மழலை கேட்பதற்கு இனியது.
2. காமரு நோக்குடையை எனக் குழந்தையைக் கூறியது தலைவன் நோக்குங் காமரு நோக்காதலின் ஒப்புமை கண்டு கூறியதாம்.
3. வெற்பன் புகழ் பாடுவேம் என்பதானும், தோள் நெகிழ்த்தான் திறம் (புகழ்) அல்லால் காணேன் என்பதாலும் புகழ் கேட்டலாயிற்று.
4. திடீரெனக் காண விழித்தேன்; பிடித்திருந்த கையிலேயே மறைந்துவிட்டான் - இது தலைவனைப் பற்றியதாகக் கண்ட கனவு கூறியது. இது கலக்கமாம்.
5. கடல் தெய்வமே! நின் நீரிடம் எல்லாம் வெறும் மணலாகும்படி என் புறங்காலால் இறைப்பேன்; இதற்கு யான் முயலின் அறக்கடவுள் துணையாகவும் அமைதல் உண்டு.

எனவும் வரும். ‘கலக்கமு நலத்தக நாடி னதுவே’ (270) என்னாது, கலக்க மென்பதனை வேறுபெயர்த்து வைத்ததென்னையெனின், இக் காலத்து அதனினூங்கு நிகழும் மெய்ப்பாட்டுக் குறிப்புளவல்ல தலை மகட்கென்பது அறிவித்தற்கென்பது. இன்னும் அதனானே தலைமகற் காயின் அதனினூங்கு வருவதோர் கலக்கமும் உளதா மென்றது; அவை, மடலூர்தலே வரை பாய்தலே என்றற் றொடக்கத்தன; அது,

“மாவென மடலு மூர்ப பூவெனக்
குவிமுகி ழெருக்கங் கண்ணியுஞ் சூடுப
மறுகி னார்க்கவும் படுப
பிறிது மாகுப காமங்காழ்க் கொளினே”[1] (குறுந். 17)

இதனுள் சாதல் எல்லையாகக் கூறியவாறு கண்டுகொள்க.

இவ்வாறு கூறவே, இச் சூத்திரத்துளோதிய இருபது மெய்ப்பாடுந் தலைமகற்கும் ஏற்றவகையானே கொள்ளப்படுமென்பது; அது,

“எவ்வி யிழந்த வறுமையாழ்ப் பாணர்
பூவில் வறுந்தலை போலப் புல்லென்
றினைமதி வாழிய நெஞ்சே மனைமரத்
தெல்லுறு மௌவ னாறும்
பல்லிருங் கூந்தல் யாரளோ நமக்கே”[2] (குறுந். 19)

என்பது, துன்பத்துப் புலம்பலாம்; என்னை? தானே துன்புறுகின்றானாகத் தலைமகன் உரைத்தமையின்.

“அந்தீங் கிளவி யாயிழை மடந்தை
கொடுங்குழைக் கமர்த்த நோக்கம்
நெடுஞ்சே ணாரிடை விலங்கு ஞான்றே”[3] (அகம். 3)

என்பது, எதிர்பெய்து பரிதல்;[4] என்னை? முற்காலத்து எதிர்ப்பட்டமை பிற்காலத்துச் சொல்லினமையின். ஒழிந்தனவுந் தலைமகற் குரியனவாகி வருவன வந்தவழிக் கண்டுகொள்க.

இவையெல்லாம் அறனும் பொருளுமன்றி இன்பப் பொருள் நிகழ்ந்தவிடத்து அவரவருள்ளத்து நிகழ்வன வாதல் வழக்கு நோக்கி உணரப்படுமென்பது. மேற்கூறிய நகை முதலாயவற்றுக்கும் இஃது ஒக்கும். இவ்வெண்ணப்பட்டனவெல்லாம் உள்ளத்து நிகழ்ந்தனவற்றை வெளிப்

---

1. காமம் மிகுமாயின் குதிரையெனப் பனைமடலாற் செய்யப்பட்ட குதிரையும் ஊர்வர்; சூடத்தகாத எருக்கம் பூவையும் பூ எனச் சூடுவர்; ஊர்த்தெருவில் மடற்குதிரையில் ஏறி இழுக்கவும்படுவர்; வேறும் ஆவர் (சாவர்) என்றபடி.

2. நெஞ்சமே! எவ்வி என்னும் வள்ளலை இழந்த பாணர் தலை பூவில்லாமல் வறியதாதல் போல நீயும் வருந்துக. மனையில் உள்ள மரத்தில் படர்ந்த முல்லைக்கொடியின் மலர் நாறும் கூந்தலுடைய இவள் நமக்கு என்ன உறவுடையள்?

3. இனிய சொல்லும் இழையும் உடைய மடந்தையது மதர்த்த நோக்கமானது நீண்ட அரிய சுரவழியில் வந்து நம்மைத் தடுக்கும்போது.

4. இது பிரிவிடைத் தலைவன் தலைவி உருவை எதிரே மனத்தால் வருவித்துக் கொண்டு கூறியது.

படுப்பனவாகலான் மெய்ப்பாடெனப்பட்டன. மேல்வருவன வற்றுக்கும் இஃது ஒக்கும். (22)

267. முட்டுவயிற் கழறல் முனிவுமெய்ந் நிறுத்தல்
அச்சத்தின் அகறல் அவன்புணர்வு மறுத்தல்
தூதுமுனி வின்மை துஞ்சிச் சேர்தல்
காதல் கைம்மிகல் கட்டுரை யின்மையென்
றாயிரு நான்கே அழிவில் கூட்டம். (23)

இலக்குவனார்

271. Making assertions when having no union with him, exhibiting disgust, leaving him for fear of any harm being done to him, refusing to have his union, having no disgust in sending messengers, remaining in the house having false sleep, love being exceeded and being speechless - these eight lead to unbroken union.

இளம்பூரணர்

267. முட்டுவயிற் கழறல் .... கூட்டம்.

என்-னின், மேற்கூறப்பட்டன வெல்லாம் மனனழிவு[1] நிகழ்ந்தவழி நிகழ்வன வாதலின், இவை மனன் அழியாதவழி நிகழ்வன என உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) முட்டுவயிற் கழறல் என்பது - களவு இடையீடுபட்டுழி யதற்கு வருந்தாது இவ்வாறாகி நின்றதென அவனைக் கழறியுரைத்தல் என்றவாறு.

முனிவுமெய்ந் நிறுத்தல் என்பது - வெறுப்பினைப் பிறர்க்குப் புலனாகாமல் மெய்யின்கண்ணே நிறுத்தல்.

அச்சத்தி னகறல் என்பது - இவ் வொழுக்கம் பிறர்க்குப் புலனாம் எனக் கூட்டத்தின் அகன்றொழுகல்.

அவன்புணர்வு மறுத்தல் என்பது - இது தலைமகன் புணர்ச்சிக்கண் வாராக்காலத்துத் தானும் மனனழியாது நிற்கும் நிலை.

தூதுமுனி வின்மை என்பது - தூதுவிட்டவழி வெறாமை.

---

1. மனன் அழிதலாவது மனம் நெகிழ்ந்து புணர்ச்சியை விரும்புதல். மனன் அழியாமையாவது மனம் நெகிழ்ந்து புணர்ச்சியை விரும்பாமை.

2. உரிமை - தனக்கு அவனும் அவனுக்குத் தானும் உரிமை என்ற எண்ணம் கொண்ட அமைதியால்

துஞ்சிச் சேர்தல் என்பது - கவற்சியான் உறங்காமையன்றி யுரிமை பூண்டமையான்[3] உறக்கம் நிகழ்தல்.

காதல் கைம்மிகல் என்பது - அவ்வழியும் அன்பின்மையின்றிக் காதல் கைமிக்கு வருதல்.

கட்டுரை யின்மை என்பது - கூற்று நிகழ்த்துதலன்றி யுள்ளக் கருத்தினை மறைத்தமர்ந்திருத்தல்.

இவை நடுவணைந்திணைக்குரிய. இவற்றிற்குச் செய்யுள் களவியலுட் காட்டப்பட்டது. வரைந்தோதாமையான்.[1] (23)

பேராசிரியர்

271. முட்டுவயிற் கழறல் .... கூட்டம்.

இது, வரைந்தெய்தும் கூட்டத்திற்கு ஏதுவாகிய மெய்ப்பாடு இவை எட்டுமென்ப துணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) முட்டுவயிற் கழறல் - தலைக்கூட்டத்திற்கு முட்டுப் பாடாகியவழிக் கழறியுரைத்தலும்; அது,

"நொச்சி வேலித் தித்த னுறந்தைக்
கன்முதிர் புறங்காட் டன்ன
பன்முட் டின்றாற் றோழிநங் களவே"[1] **(அகம். 122)**

என்பது. இது தலைமகன் கேட்பக் கழறியுரைத்தது.

முனிவுமெய்ந் நிறுத்தல் - தலைமகளுள்ளத்து வெறுப்பு வெளிப்பட நிற்குநிலைமையும்; அஃது,

"இன்னுயிர் கழிவ தாயினு நின்மக
ளாய்மல ருண்கட் பசலை
காம நோயெனச் செப்பா தீமே"[2] **(அகம். 52)**

என்புழி, வாழ்க்கை முனிந்து தலைமகள் சொல்லியது.

அச்சத்தி னகறல் - தலைமகன்கண் வரும் ஏதமஞ்சி அவனை நீங்குங் குறிப்பும்;

"மன்றுபா டவிந்து .... மயங்கி
இன்ன மாகவு நன்னர் நெஞ்ச
மென்னொடு நின்னொடுஞ் சூழாது கைம்மிக்
கிறும்புபட் டிருளிய விட்டருஞ் சிலம்பிற்

---

1. வரைந்தோதாமையின் இவை நடுவண் ஐந்திணைக்குரிய என்றிருத்தல் வேண்டும்
2. தித்தனது உறையூரைச் சார்ந்த புறங்காடு வழிப்போவார்க்குப் பல முட்டுப்பாடுகளைத் தருவது போல நம் களவொழுக்கத்துக்கு முட்டுப்பாடுகள் பலவுள. இது தோழி தலைவியிடம் கூறியது. தலைவன் சிறைப்புறத்தானாகக் கழறிக் கூறியது.
3. தோழீ! நம் தாயிடம் நின் மகளுக்குக் கண்ணில் பசலையுண்டானமைக்குக் காரணம் அவளின் காமநோய் என்று உயிர்போனாலும் சொல்லாதே.

குறுஞ்சுனைக் குவளை வண்டுபடச் சூடிக்
கான நாடன் வரூஉம் யானைக்
கயிற்றுப்புறத் தன்ன கன்மிசைச் சிறுநெறி
மாரி வானந் தலைஇ நீர்வார்
பிட்டருங் கண்ண படுகுழி யியவி
னிருளிடை மிதிப்புழி நோக்கியவர்
தளரடி தாங்கிய சென்ற தின்றே"[1] (அகம். 128)

என்னும் பாட்டினை முழுதுங்கொள்க; அதன் கருத்தாவது : நாம் அவர் இருளிடை வருத லேதமஞ்சி அகன்று (அ)வலித்திருப்பவும் என்னையும் நின்னையுங் கேளாது என்னெஞ்சு போவானே னென்றவாறாயிற்று.

அவன்புணர்வு மறுத்தல் - இரவுக்குறியும் பகற்குறியும் விலக்குதற் கெழுந்த உள்ள நிகழ்ச்சியும்; அது, தமரையஞ்சி மறுத்தமையானும் இது வரைவு கடாவுதற்குக் கருத்தாகலானுந் திணைப்புவினை மறுத்தலொடு (265) இது வேற்றுமையுடைத்து.

"நல்வரை நாட நீவரின்
மெல்லிய லோருந் தான்வா ழலளே" (அகம். 12)

என்பது, தலைமகள் குறிப்பினைத் தோழி கூறியதாகலான் அஃது அவன் புணர்வு மறுத்தலெனப்படும். இஃது 'ஒன்றித் தோன்றுந் தோழி மேன' (39) என்னும் இலக்கணத்தால் தோழி குறிப்பாயினுந் தலைமகள் குறிப்பெனவே படுமென்பது (508) கொள்க.

தூதுமுனி வின்மை[2] - புள்ளும் மேகமும் போல்வன கண்டு சொல்லுமின் அவர்க்கென்று தூதிரந்து பன்முறையானுஞ் சொல்லுதலும்: அவை,

"கானலுங் கழறாது கழியுங் கூறாது,
தேனிமிர் நறுமலர்ப் புன்னையு மொழியா
தொருநின் னல்லது பிறிதியாது மிலனே
யிருங்கழி மலர்ந்த கண்போ னெய்தற்
கமழிதழ் நாற்ற மமிழ்தென நசைஇத்
தண்டா தூதிய வண்டினங் களிசிறந்து
பறைஇ தளருந் துறைவனை நீயே
சொல்லல் வேண்டுமா லலவ"[3] (அகம். 170)

1. தோழி! (காமம்மிக்கு) மயங்கி நாம் இப்படி வருந்தவும் என் நல்ல நெஞ்சம் என்னையும் நின்னையும் கேளாமல் இரும்புபோல் இருண்ட அரிய பக்கமலையில் குவளை மலரைச் சூடித் தலைவன் வரும்படியான யானை உடலில் கயிறுபோல உள்ள சிறிய வழியில் மழைநீர் உள்ள படுகுழியிடத்தில் இருளில் கால் மிதிக்கும் இடம் பார்த்துத் தலைவனின் தளிர்போலும் அடியைத் தாங்குதற்குச் செல்லாநின்றது.

2. தூது அனுப்புதலில் வெறுப்பின்மை; அதாவது அனுப்ப உடன்படல்.

3. நண்டே! என் குறையைத் தலைவனிடம் சென்று கழிக்கானலும் கூறாது. உப்பங்கழியும் கூறாது; புன்னைமரமும் கூறாது; நின்னையன்றிப் பிறிது யாதும் யான் தூது அனுப்ப இல்லேன். அதனால் நெய்தற்பூ நாற்றத்தை அமிழ்து எனக் கருதித் தாது ஊதும் வண்டுகள் களித்துப் பறந்து திரியும் துறைவனிடம் நீயே தூதாகச் சென்று சொல்லல் வேண்டும்.

என்புழி, கூறப்பட்டனவெல்லாந் தூதாகலின், தூது விடுதலை வெறாத தன்மை கூறியதாம் இப் பாட்டென்பது.

"புல்வீ ழிற்றிக் கல்லிவர் வெள்வேர்
வரையிழி யருவியிற் றோன்று நாடன்
றீதி னெஞ்சத்துக் கிளவி நம்வயின்
நயந்தன்று வாழி தோழி நாமு
நெய்பெய் தீயி னெதிர்கொண்டு
தாமணந் தனையமென விடுகந் தூதே"[1] (குறுந். 106)

என்பதோவெனின், அது கற்பிற்கல்லது ஏலாது; என்னை? களவினுள் நெய்பெய் தீயின்வந்து எதிர்கொளலாகாமையின்.

துஞ்சிச் சேர்தல் - மனையகத்துப் பொய்த்துயிலோடு மடிந்து வைகுதலும்;

துஞ்சுதலெனினும் மடியெனினும் ஒக்கும். வேண்டியவாறு கூட்டம் நிகழப்பெறாமையின் தலைமகனொடு புலந்தாள்போல மடிந்தொன்று மாதலின் அதனைத் துஞ்சிச் சேர்தலென்றானென்பது:

எங்ஙனமோவெனின்,

"என்மலைந் தனன்கொ றானே தன்மலை
யார நாறு மார்பினன்
மாரி யானையின் வந்துநின் றனனே" (குறுந். 161)

என்புழி, என்ன காரியம் மேற்கொண்டு வந்தானென்றமையின் இது துஞ்சிச் சேர்தலாயிற்று. அல்லாக்கால் அங்ஙனஞ் சொல்லுதல் அன்பழிவெனப் படும்.

"ஆமிழி யணிவரை" (கலி. 48)

என்னுங் குறிஞ்சிப்பாட்டினுள்,

"பின்னீதல் வேண்டுநீ பிரிந்தோணட் பெனநீவிப்
பூங்கண் படுத்தலு மஞ்சுவ றாங்கிய
வருந்துய ரவலந் தூக்கின்
மருங்கறி வாரா மலையினும் பெரிதே"[2]

என்னுஞ் சுரிதகமும் அது.

காதல் கைம்மிகல் - காமங் கையிகந்தவழி நிகழும் உள்ள நிகழ்ச்சியும்; அது,

1. தோழீ! இற்றிமர வெள்ளிய வேர்கள் மலையிலிருந்து இழியும் அருவி போலத் தோன்றும்படியான நாடனானவன் தீதில் நெஞ்சத்தோடு சொல்லி விடுத்த செய்தி நம்மிடம் நயப்புடையதாயிற்று; அதனால் நாமும் நெய்பெய்யப் பெற்ற தீ நெய்யை ஏற்று மிகுவதுபோல அவர் சொல்லையேற்று அச் சொல் தாமே வந்து நம்மை மணந்தது போலும் என்று சொல்லித் தூது விடுவேம்.

2. தடவிக் கொடுத்துக் கண்துயிலப் பண்ணுதற்கும் யான் அஞ்சுவன்; ஏன்எனின் கனவில் அவள் கண்டு தாங்கிய அவலத்தை ஆராயின் அதற்கு எல்லையறியப்படா; மலையினும் பெரிதாம்; ஆதலின் நின்னாற் பிரிதலுற்ற தலைவியின் நட்பை மீண்டும் பின்னுதலாம்படி அருள்வாயாக - தோழி தலைவனிடம் கூறியது.

"உள்ளி னுள்ளம் வேமே யுள்ளா
திருப்பினெம் மளவைத் தன்றே வருத்தின்
வான்றோய் வற்றே காமஞ்
சான்றோ ரல்லர்யா மரீஇ யோரே"[1] (குறுந். 102)

என வரும்.

கட்டுரையின்மை - உரைமறுத்திருத்தலும்; அதனானே அதற்குத தோழிகண் ணாயினுந் தலைமகன்கண் ணாயினும் உரைமுறை நிகழ்வ தல்லது தலைமகள் உரையாளென்பது பெற்றாம்; அது,

"யான்ற னறிவ றானறி யலளே
யாங்கா குவள்கொ றானே
பெருமுது செல்வ ரொருமட மகளே"[2] (குறுந். 337)

என்பது, தலைமகள் கட்டுரையாதிருத்தலின் தலைமகன் தமரினெய்தல் வேண்டினமையிற் கட்டுரையின்மையின் வரைவுகடாவுதலாயிற்றென்பது. ஒழிந்தனவும் அவ்வாறே வரைவுகடாதற்கு ஏற்றவாறு உரையிற் கொள்க.

என் றாயிரு நான்கே அழிவில் கூட்டம் - என்றெண்ணப்பட்ட மெய்ப் பாடெட்டும் பின் அழியாத கூட்டத்திற்கு ஏதுவாம் என்றவாறு. அஃதாவது வரைந்தெய்தும் கூட்டமென உணர்க. (23)

சிவலிங்கனார்

முட்டுவயிற் .... கூட்டம்

அழிவுக் கூட்டம் என்பது மனம் நெகிழ்ந்து புணர்ச்சியை விரும்பி அதற்கான மெய்ப்பாடுகளைக் கொண்டு கூடும் கூட்டம் என்றும், அழிவில் கூட்டம் என்பது மனம் நெகிழாதிருந்து மாறுபடுவதுபோல் சில மெய்ப்பாடுகளை மேற்கொண்டு கூடும் கூட்டம் என்றும் இளம்பூரணர் கொண்டார். அதற்கேற்ப முட்டுவயிற் கழறல் முதலியன அழிவில் கூட்டத்துக்குரிய மெய்ப்பாடுகள் என்றார்.

பேராசிரியர் அழிவுக்கூட்டம் என்பது களவுக்கூட்டம் என்றும் அழிவில் கூட்டம் என்பது வரைந்து எய்தும் கூட்டம் என்றும் கொண்டார். அழிதல் என்பது புணர்ச்சியை விரும்பி மனம் நெகிழ்தல். அழிவின்மையாவது முறையாக வரைந்து கூடுதலையே குறிக்கொண்டு அதனால் மனம் புணர்ச்சி ஒன்றையே கருதாமை.

இச் சூத்திரத்துக்கும் பேராசிரியர் உரையே சிறக்கும்.

மெய்ப்பாட்டியல்
சிவலிங்கனார் எளிய உரை முற்றிற்று

---

1. தலைவர் பிரிவை நினைப்பின் அது உள்ளத்தைச் சுடும். நினையாதிருப்பேம் எனின் அது முடியாதது. காமமானது வானைத் தொடுமளவிற் பெரியது; அதனால் யாம் கலந்து மருவிய தலைவர் அறவோர் அல்லர்.

2. பெரிய வழிவழிச் செல்வர் மகளாகிய தலைவி எப்படிப்பட்டவளோ? யான் அவளை அறிவேன்; அவள் என்னையறியாள்

268. தெய்வம் அஞ்சல் புரையறந் தெளிதல்
இல்லது காய்தல் உள்ள துவர்த்தல்
புணர்ந்துழி யுண்மை பொழுதுமறுப் பாதல்[1]
அருண்மிக உடைமை அன்புமிக[2] நிற்றல்
பிரிவாற் றாமை மறைந்தவை யுரைத்தல்
புறஞ்சொல் மாணாக் கிளவியொடு தொகைஇச்
சிறந்த பத்துஞ் செப்பிய பொருளே. (24)

இலக்குவனார்

272. Fearing the God, realising the great virtue of family life, being angry with the fault which is not found in him. being disgusted with what is found in him, having the benefit of having pleasure apportioned into fixed periods after the marriage, being in possession of graciousness in abundance, having all the love concentrated on domestic duties, inability to bear the pain of separation, expressing what happened during the secret love - period and unwanted expression of exposing secret including, these excellent ten belong to the above said topic (of unbroken union).

இளம்பூரணர்

268. தெய்வம் அஞ்சல் .... பொருளே.

என்-னின், இஃது அழிவில் கூட்டத்திற்குரிய பொருள் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) தெய்வ மஞ்சல் என்பது - தெய்வத்தினை யஞ்சுதல்.

"மன்ற மராத்த பேமுதிர் கடவுள்
கொடியோர்த் தெறூஉம் என்ப" (குறுந். 87)

எனவும்,

"நீயுறும் பொய்ச்சூள் அணங்காகின் மற்றினி
யார்மேல் விளியுமோ கூறு" (கலி. 88)

எனவும் வரும்.

புரையறந் தெளிதல் என்பது - 'கடன்மிக் கனவே' என்றவழிப் பரத்தைமை கண்டு புலவாது 'இதனைப் போற்றல் இல்லுறை மகளிர்க் கியல்பென்னும் அறத்தினானே' எனக் கூறியவாறு கண்டுகொள்க.[3]

---

1. மறுப்பாக்கம் - பாடம்
2. அன்புதொக - பாடம்
3. 'கடன்மிக் கனவே' என்பது ஒரு பாடலின் முதற்குறிப்பு; அதில் கூறப்படும் செய்தி 'பரத்தைமை கண்டு ---- அறத்தினானே' என்பதாகும். அறத்தினான் பரத்தைமை போற்றல் இயல்பு என்றது புரையறம் தெளிதலாகும்.

இல்லது காய்தல் என்பது - தலைமகன்க ணில்லாத குறிப்பினை யவன்மாட்டு உளதாகக் கொண்டு காய்தல்.

"யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று"[1] (குறள். 1314)

இதனுள் சொன்ன மாற்றத்தை வேறாகப் பொருள் கொண்டு இல்லாததனைச் சொல்லிக் காய்ந்தவாறு காண்க.

உள்ளதுவர்த்தல் என்பது - உள்ளதனை யுவர்த்துக் கூறுதல். அது தலைவன் செய்கின்ற தலையளியை வெறுத்தல்.

"வெய்யாரும் வீழ்வாரும் வேறாகக் கையின்
முகையலர்ந் தன்ன முயக்கின் தொகையின்றே
தண்பனி வைகல் எமக்கு"[2] (கலி. 78)

என வரும்.

புணர்ந்துழி யுண்மை என்பது - புணர்ந்தவழி யூடலுள்வழி மறைத்துக் கூறாது அவ்வழி மனநிகழ்ச்சியுண்மை கூறுதல்.

"குளிரும் பருவத்தே ஆயினுந் தென்றல்
வளியெறியின் மெய்யிற் கினிதாம் - ஒளியிழாய்
ஊடி யிருப்பினும் ஊர னறுமேனி
கூடல் இனிதா மெமக்கு"[3] (ஐந்.ஐம். 30)

என வரும்.

பொழுது மறுப்பாதல் என்பது - தலைவன் வரும்பொழுது நியமமின்றி மறுப்பு வந்துழிப் பொழுதினைப்பற்றி நிகழும் மனநிகழ்ச்சி.

"புல்லிய கேளிர் புணரும் பொழுதறியேன்
அல்லியா கெல்லையென் றாங்கே பகல்முனிவேன்
எல்லிய காலை யிராமுனிவேன் யானுற்ற
அல்லல் களைவார் இலேன்"[4] (கலி. 144)

என வரும்.

---

1. உலகத் தலைவன் தலைவியருள் நாம் மிக அன்புடையோம் என்ற பொருளில் 'யாரினும் காதலம் நாம்' என்றேன். அவளோ என்னோடு தொடர்புடைய மகளிர் யாவரினும் யானு நீயுமே காதலுடையோம் என்று யான் கூறியதாகக் கொண்டு யாரைக் காட்டிலும் யாரைக் காட்டிலும் என்று கேட்டுக் கண்ணீர் நிறைந்தாள்.

2. நின்னை விரும்பியவரும் நீ விரும்பியவரும் ஆகிய பரத்தையர் மனம் வேறாம்படி நீ எம்மைத் தானே மலராமல் கையினால் மலர்த்தப்பட்ட மலர் மலர்வதுபோல் விருப்பமின்றி முயங்கும் முயக்கம் தண்பனிக்காலத்தில் மிக்க இன்பம் தருவதன்றோ இல்லையோ.

3. குளிர்காலமாயினும் தென்றல்வரின் உடம்புக்கினிதாகும். ஒளியுள்ள அணிகலனு டையவளே! ஊடியிருந்தாலும் ஊரனின் நல்ல மேனியைக் கூடுவது எமக்கு இனிதாகும்.

4. கேளிரான தலைவன் என்னைப் புணரும் காலம் அறியேன்; அதனால் இராப்பொழு தாகுக எனப் பகலை வெறுப்பேன். இரவுவரின் பகலாகுக என்பேன். ஏன்எனின் யானுற்ற துயரைக் களைவாரை யில்லாதவளானேன்.

இது பெருந்திணைக்கு உரியதன்றோ எனின், ஆண்டு 'மரபுநிலை திரியா மாட்சிய வாகி விரவும் பொருளும்' (அகத்திணை. 48) விரிந்ததெனக் கொள்க.[1]

அருண்மிக வுடைமையாவது - தலைமகன்மாட்டு அருள் புலப்பட நிற்கும் நிலை.

"முதைச்சுவற் கலித்த"

என்னும் அகப்பாட்டினுள்,

"நடுங்குதுயர் களைந்த நன்ன ராளன்
சென்றனன் கொல்லோ தானே
....
வடுவாழ் புற்றின வழக்கறு நெறியே" (அகம். 88)

என வரும். அவன் போனபின்பு இடையூறின்றிப் பெயர்ந்தான் கொல்லென அருள் மிகுத்தவாறு காண்க.

அன்புமிக நிற்றல் என்பது - அன்பு புலப்பட நிற்றல்.

"கொடிய னாயினும் ஆக
அவனே தோழிஎன் னுயிர்கா வலனே" (சிற்றட்டகம்)

என்றவழி, அன்புதோன்ற நின்றவாறு காண்க.

பிரிவாற்றாமை என்பது - பிரிவின்கண் ஆற்றாமை.

"செல்லாமை யுண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை" (குறள். 1151)

என வரும்.

மறைந்தவை யுரைத்த புறஞ்சொன் மாணாக் கிளவியொடு தொகைஇ என்பது - மறைந்த ஒழுக்கத்தைக் கூறிய புறஞ்சொல்லாகிய அலர் மாட்சிமைப்படாத கிளவியொடுகூட என்றவாறு.

மறைந்தவை யுரைத்த புறஞ்சொல்லாவது - அலர். மாணாமை யாவது, அவ் வலர் மாட்சிமைப்படாமற் கற்புக்கடம் பூண்டல். அன்றியும்,

"மாண[2] மறந்துள்ளா நாணிலி" (கலி. 89)

என்றாற் போல மாணாமை என்பது மிகாமையென வுரைப்பினும் அமையும். அலர் மிகாமைக் கூறுங் கூற்றினும் கற்புக்கடம் பூண்டு கூறுதல்.

---

1. யானுற்ற அல்லல் களைவார் இலேன் எனத் தலைவி வெளிப்படையாகக் கூறுவது பெருந்திணையாகும் எனக் கொண்டு இவ் வினா எழுந்தது. அதற்கு விடை அகத்திணை மரபு திரியா மாட்சியவாகிப் பிரிவிடை வந்த துன்பம் கூறுதலாதலின் பெருந்திணைப்படாது என்பது.

2. மாண - மிகுதியாக

"நடுநாள் வரூஉம் இயல்தேர்க் கொண்கனொடு
செலவயர்ந் திசினால் யானே
அலர்சுமந் தொழிகவிவ் அழுங்க லூரே" (நற். 149)

என வரும்.[1]

அலர்மிகாக் கிளவி யாவது - அதற்கு உள்ளம் நாணுதல்.

"களிறுகவர் கம்பலை போல
அலரா கின்றது பலர்வாய்ப பட்டே" (அகம். 66)

என வரும்.[2]

சிறந்த பத்துஞ் செப்பிய பொருளே என்பது - இச் சொல்லப்பட்ட பத்தும் மேற்சொல்லப்பட்ட அழிவில்கூட்டப் பொருள் என்றவாறு. என்றவழி நடுவணைந்திணைக்குரிய பொருள் என்றவாறு. (24)

பேராசிரியர்

272. தெய்வ மஞ்சல் .... பொருளே.

இஃது, அழிவில் கூட்டம் நிகழ்ந்தபின்னர் வருதற்குரிய மெய்ப்பாடு இவையென்கின்றது.

(இ-ள்) இவ் வெண்ணப்பட்ட பதினொன்றும் மேற்கூறிய அழிவில் கூட்டமெனப்படும் என்றவாறு.

'செப்பிய பொருள்' என்பது அழிவில் கூட்டமன்றே, அதற்கு முற்படும் மெய்ப்பாடெட்டனையும் அழிவில் கூட்டமென்றதுபோல அதற்குப் பிற்படும் மெய்ப்பாட்டினையும் அழிவில் கூட்டமென்பான் மேற்கூறிய அழிவில் கூட்டமே இவையுமெனக் கூறியவாறு. எனவே, வரைந்தெய்திய பின்னர்த் தலைமகள் மனத்து நிகழ்வன இவையென்பது கூறினானாம்.

தெய்வ மஞ்சலென்பது, தலைமகற்குத் தொழுகுலமாகிய தெய்வமும் அவற்கு ஆசிரியராகத் தாபதரும் இன்னாரென்பது அவனானுணர்த்தப் பட்டு உணர்ந்த தலைமகள் அத் தெய்வத்தினையஞ்சி ஒழுகுமொழுக்கம் அவள்கட்டோன்றும்; அங்ஙனம் பிறந்த உள்ள நிகழ்ச்சியைத் 'தெய்வ மஞ்சல்' என்றானென்பது. மற்றுத் தனக்குத் தெய்வந் தன் கணவனாத லான் அத் தெய்வத்தினைத் தலைமகளஞ்சுதல் எற்றுக்கெனின், அவனின் தான் வேறல்லளாக மந்திரவிதியிற் கூட்டின மையின் அவனான் அஞ்சப் படுந் தெய்வந் தனக்கும் அஞ்சப்படுமென்பது. அல்லதூஉந் தலைவற்கு ஏதம் வருமெனவும் அஞ்சுவளென்பது.

---

1. இதில் அலர்சுமந்து ஒழிக; யான் கொண்கனொடு செல்ல ஒருப்பட்டேன் என வருவதால் ஊரவர் அலர் சிறப்பு அடையாமல் அதாவது அலரே சிறப்பாகக் கூறப்படாமல் தான் செல்ல விரும்பிக் கூறுதல் மாணாக்கிளவியாம். மாணாக்கிளவி என்பது மாண்பு அடையாமைக்குக் காரணமான சொல் என்பதாம்.

2. மாணா என்பதற்கு மிகா என்ற பொருளுக்குரிய உதாரணம். அலர் மிகாக் கிளவி - அலர் மிகாதபடி நாணிக் கூறும் சொல்.

"சினைவாடச் சிறக்குநின் சினந்தணிந் தீகெனக்
கனைகதிர்க் கனலியைக் காமுற லியைவதோ"[1] (கலி. 16)

என்பது, தெய்வத்திறநோக்கித் தெருமந்ததாம்; என்னை? அவற்கிலவெனவும் அன்னவெனவுந்[2] தாம் வேண்டிய குறைமுடியாது பிரிந்தார் மாட்டு ஏதஞ் செய்யுங்கொ லென்றஞ்சி உரைத்தவாறு.

"அச்சா றாக வுணரிய வருபவன்
பொய்ச்சூ ளஞ்சிப் புலவே னாகுவல்" (கலி. 75)

என்பதும் அது. இது,

"ஐயர் பாங்கினு மமரர்ச் சுட்டியுஞ்
செய்பெருஞ் சிறப்பொடு சேர்தற்கண்" (146)

தலைமகள் கருத்தின்கண் நிகழுங் குறிப்பென்பது.

புரையறந் தெளிதலென்பது, தனக்கொத்த இல்லறம் இன்ன தென்று தலைமகள் மனத்துப்படுதல்; அது,

"விரியுளைக் கலிமான் றேரோடும் வந்த
விருந்தெதிர் கோடலின் மறப்ப லென்றும்"[3] (கலி. 75)

என வரும்; இஃது அவனொடு சொல்லாடாது ஊடியிருப்பேனாயின், விருந்துகொண்டு புகுதரும்; அதனான் ஊடலை மறப்பே னென்றமையிற் புரையறந் தெளிதலாயிற்று.

இல்லது காய்தலென்பது, களவின்கட் போலாது தலைமகற்கு இல்லாததனை உண்டாக்கிக் கொண்டு காய்தல்; அது.

"நற்றா ரகலத்துக் கோர்சார் மேவிய
நெட்டிருங் கூந்தற் கடவுள ரெல்லார்க்கு
முட்டுப்பா டாகலு முண்டு"[4] (கலி. 93)

என வரும்; இது கடவுளரையே கண்டு தங்கினானாயினும் நெட்டிருங் கூந்தற் கடவுளரையே கண்டாயென்று இல்லது சொல்லிக் காயுமாகலின் அப் பெயர்த்தாயிற்று.

---

1. மிக்க கதிருடைய ஞாயிற்றைக் கிளைகள் வாடுமாறு மிகும் நின் சினம் (வெப்பம்) தலைவன் செல்லும் சுரவழியில் தணிவதாக என இறைஞ்சுவதோ?

2. அவற்கில எனவும் அன்ன எனவும் - புரியவில்லை.

3. விரிந்த தலையாட்டத்தையுடைய குதிரை பூட்டிய தேரொடும் வந்த விருந்தினரை எதிர்கோடல் காரணமாகத் தலைவன்மீது ஊடலை மறப்பல்.

4. நல்ல தாரணிந்த மார்பின் ஒரு பக்கமாகப் பொருந்திய நெடிய கரிய கூந்தலுடைய பரத்தையராகிய கடவுளர்க்கெல்லாம் நீ இங்கு வருதல் முட்டுப்பாடாகும்; ஆதலின் அங்குச் செல்க - நேற்றுக் கடவுளரை வழிபட்டமையின் அங்கே தங்கினேன் என்ற தலைவனை அது உண்மை எனக் கொள்ளாது. பரத்தையரிடம் தங்கினான் என இல்லாததைக் கூறிக் காய்ந்தது.

உள்ளதுவர்த்தலென்பது, தலைமகனாற் பெற்ற தலையளி உள்ளதே யாயினும், அதனை உண்மையென்றே தெளியாது அருவருத்து நிற்கும் உள்ள நிகழ்ச்சி; அது,

"கடல்கண் டன்ன கண்ணகன் பரப்பின்" (அகம். 176)

என்னும் பாட்டினுள்,

"வேப்புநனை யன்ன நெடுங்கண் ணீர்ஞெண்
டிரைதேர் வெண்குரு கஞ்சி யயல
தொலித்த பகன்றை யிருஞ்சேற் றள்ளற்
றிதலையின் வரிப்ப வோடி விரைந்துதன்
னீர்மலி மண்ணளைச் செறியு மூர"[1]

என்புழி, தலைமகன் வாயில்வேண்டச் சென்றானைப் பிறர் கூறும் பழிக்கு வந்தா யென்றமையின் இஃது உள்ளதுவர்த்தலாயிற்று.

"பட்டுழி யறியாது பாகனைத் தேரொடும்
விட்டவள் வரனோக்கி விருந்தேற்றுக் கொளநின்றாய்"[2]
(கலி. 69)

என்பதும் அது,

புணர்ந்துழி யுண்மையென்பது, முற்கூறிய இல்லது காய்தலும் உள்ளதுவர்த்தலுமாகிய விகாரமின்றிப் புணர்ச்சிக் காலத்துச் செய்வன சென்ற உள்ளநிகழ்ச்சி; அது,

"குளிரும் பருவத்தே யாயினுந் தென்றல்
வளியெறியின் மெய்யிற் கினிதா - மொளியிழா
யூடி யிருப்பினு மூர னறுமேனி
கூட லினிதா மெனக்கு" (ஐந்.ஐம். 30)

என்பது; என்னை? புணர்ந்துழி உண்மை கூறினாள் விகாரமின்றி யாதலின்.

பொழுதுமறுப் பாக்கமென்பது, களவின்கட் பகற்குறியும் இரவுக் குறியுமென வரையறுத்தாற் போல்வதோர் வரையறையின்மையின் அப் பொழுதினை மறுத்தலாகிய ஆக்கமென்றவாறு; எனவே, களவுக்காலத்துப் பொழுது வரைந்துபட்ட இடர்ப்பாட்டினீங்கிய மனமகிழ்ச்சி ஆக்கமெனப்படும்; அது,

"அயிரை பரந்த வந்தண் பழனத்
தேந்தெழின் மலர்ந்த தூம்புடைத் திரள்கா

1. வேப்பமலர்போலும் கண்ணுடைய நீர்நண்டு இரைதேடும் குருகுக்கு அஞ்சிப் பக்கத்துள்ள பகன்றை தழைத்த சேற்றில் திதலைபோல் வரிகள் எழ ஓடி விரைந்து தன் நீர்மிக்க வளையிற் சேரும் ஊரனே. இதில் நண்டு குருகுக்கு அஞ்சி வளை சேர்ந்ததுபோல ஊர் கூறும் பழிக்காக இங்கு வந்தாய் என உள்ளுறை கொள்க.

2. தலைவன் பரத்தையர்பால் பட்ட வழியை நீ அறியாமல் நின்பால் தன் தேரொடு பாகனை வாயிலாக விடவே அவன் வரவை விருந்தாய் ஏற்றுக்கொள நின்றாய். தோழி தலைவியிடம் கூறியது.

லாம்பல் குறுநர் நீர்வேட் டாங்கிவ
ளிடைமுலைக் கிடந்து நடுங்க லானீர்
தொழுதுகாண் பிறையிற் றோன்றி யாநுமக்
கரியே மாகிய காலைப்
பெரிய நோன்றனிர் நோகோ யானே"[1] (குறுந். 178)

என்பதனுள், தொழுதுகாண் பிறையில் தோன்றின என்பது, களவுக் காலத்து இடையீடு பெருகிற்றெனக் கூறி அங்ஙனம் வரைந்த பொழுதினை மறுத்தகாலத்து[2] நடுங்கலானீ ரென்றமையின் இஃது அப்பொருட்டாயிற்று.

அருண்மிக வுடைமை யென்பது, களவுக்காலத்துப் போலத் துன்ப மிகுதலின்றி அருண்மிகத் தோன்றிய நெஞ்சினளாதல்; அது,

"நின்ற சொல்லி னீடுதோன் றினிய
ரென்று மென்றோள் பிரிபறி யலரே" (நற். 1)

என வரும்.

அன்புதொக நிற்றலென்பது, களவுக்காலத்து விரிந்த அன்பெல்லாம் இல்லறத்தின்மேற் பெருகிய விருப்பினானே ஒருங்குதொக நிற்றல்.

"எம்போற், புல்லுளைக் குடுமிப் புதல்வற் பயந்து
நெல்லுடை நெடுநகர் நின்னின் றுறைய
வென்ன கடத்தளோ மற்றே" (அகம். 176)

என்புழி, புதல்வற் பயந்து நின்னின்றுறையுங் கடத்தினம் யாமென்றமையின் இஃது அன்புதொக நிற்றலாயிற்று.[3]

பிரிவாற்றாமையென்பது, களவிற் பிரிவாற்றுதல் வேண்டுமாறு போலக் கற்பினுட் பிரிவாற்றுதல் வேண்டப்படாமை; என்னை? புறத்தார்க்குப் புலனாகாமை மறைத்தல் கற்பிற்கு வேண்டுவதன்றாகலி னென்பது.

"இடனின்றி யிரந்தோர்க்கொன் றீயாமை யிழிவெனக்
கடனிறந்து செயல்சூழ்ந்த பொருள்பொரு ளாகுமோ
வடமீன்போ றொழுதேத்த வயங்கிய கற்பினா
ளடமென்றோள் பிரியாமை பொருளாயி னல்லதை"[4] (கலி.2)

---

1. அயிரைமீன் மிகுந்த வயலில் ஆம்பலைக் களைவோர் நீரிடை இருந்தும் நீர் வேட்கை கொண்டாற் போல இவள் முலையிடைத் துயின்றும் ஆராமையுடையவராகின்றீர். இக் கற்புக்காலத்து இப்படியாகும் நீர் களவுக்காலத்துத் தொழுது காணத்தகும் மூன்றாம் பிறையைக் காணவும் காணாமையுமாக மக்கள் தடுமாறுவதுபோல யாங்கள் இடையீடுபட்டு அரிதாகத் தோன்றிய காலங்களில் பெரிதும் துன்பத்தைத் தாங்கினீர் போலும். அது நினைத்து யான் வருந்துகிறேன். - இது தோழி தலைவனிடம் கூறியது.

2. வரைந்தபொழுதினை மறுத்தலாவது இரவுக்குறி பகற்குறி என வரையறுத்த காலங்களை நீக்குதல் - நீக்கியது மணந்து கற்பொழுக்கத்தை மேற்கொள்ள.

3. என்ன கடப்பாடுடையள் பரத்தை என்றமையின் பெறப்படுவது " புதல்வற் பயந்து நின்னின்றுறையும் கடத்தினேம் யாம்" என்பது பெறப்படுதலின் இவ்வாறு எழுதினார்.

4. பொருளில்லாமல் வந்து இரந்தவர்க்கு ஒரு பொருள் கொடாமையே இழிவாகும் என்று நினைந்து சுரவழி கடந்து ஈட்ட நினைத்த பொருள் சிறந்த பொருளாகுமோ? எது பொருள் எனின் அருந்ததி போலும் தொழும் கற்புடைய இவளின் தோளைப் பிரியாமையே பொருளாகும்.

என்புழி, இனைய கற்பினாளைப் பிரியாமை பொருளாயினன்றி நும்மால் தரப்படும் பொருள் பொருளாகுமோ என்றதன் கருத்தாவது: பிரிவாற்றாமையின் இவள் இறந்துபடுவள், பின்னை அப் பொருள் கொண்டு ஆற்றும் இல்லறம் யாண்டையதெனத் தலைமகள் பிரிவாற்றாமை கூறியவாறாயிற்று.

மறைந்தவை யுரைத்தலென்பது, களவுக்காலத்து நிகழ்ந்தனவற்றைக் கற்புக்காலத்துக் கூறுதல்; அவை,

"களவினு ணிகழ்ந்த வருமையைப் புலம்பி
யலமர லுள்ளமோ டளவிய விடத்தும்" (146) (146)

என்புழித் தோன்றிய மனக்குறிப்பு; அது,

"முயங்கல் விடாஅ லிவையென மயங்கி
யானோ மென்னவு மொல்லார் தாமற்
றிவைபா ராட்டிய பருவமு முளவே
யினியே, புதல்வற் றடுத்த பாலொடு தடைஇத்
திதலை யணிந்த தேங்கொண் மென்முலை
நறுஞ்சாந் தணிந்த கேழ்கிள ரகலம்
வீங்க முயங்கல் யாம்வேண் டினமே
தீம்பால் படுத றாமஞ் சினரே"[1] (அகம். 26)

என்பது. முன்னிலைப் புறமொழியாகலான் மறைந்த ஒழுக்கத்துக்கண் நிகழ்ந்த பொருளைக் கற்பினுள் உரைத்தவாறாயிற்று.

புறஞ்சொன் மாணாக் கிளவியென்பது, தலைமகற்கு வந்த புறஞ் சொல்லின் பொல்லாங்கு குறித்து எழுந்த கிளவி; அவற்கு வரும் பழி காத்தலுந் தனக்கு அறமாதலின் அதுவுங் கற்பின்கண்ணே நிகழுமென்பது; அது,

"களிறுகவர் கம்பலை போல
வலரா கின்றது பலர்வாய்ப் பட்டே" (அகம். 96)

என்றாற் போல்வன.

கிளவியொடு தொகைஇ யென்பது, இதனொடுந் தொகுத்தென்ற வாறு; **சிறந்த பத்தும் என்பது,** விதந்தோதிய பத்தும்; **செப்பிய பொருள் என்பது,** அழிவில் கூட்டமெனச் செப்பிய கற்பின்கண் வரும் மெய்ப் பாடெனப்படும் இவையும் என்பது.

மற்றுப் பதினொன்றனை யெண்ணிச் சிறந்த பத்து இவை என்ற தென்னையெனின், - அதனை

" ஒன்பதுங் குழவியோ டிளமைப் பெயரே"[2] (556)

---

1. என் முலைகள் தலைவன் மார்பை இறுகப் பற்றி முயங்குதற்கு விடாதனவாகுக என்று சொல்லி யான் அவற்றை வெறுத்து நீங்குக என்று சொல்லவும் அவற்றைத் தலைவர் பாராட்டிய காலமும் உண்டு. இப்போதோ புதல்வனுக்கு ஊறுதலைத் தடுத்த பாலொடு சரிந்து தேமலை அழகுறக் கொண்ட இனிய முலைகள் தலைவனின் சாந்தணிந்த மார்பை வீங்கும்படியாகப் புணர்தலை யாம் விரும்பினேமாக அவனோ முலைப்பால் தன் மார்பிற் படுதற்கு அஞ்சி விலகினான்.

2. குழவி என்னும் சொல்லோடு மேற்கூறிய ஒன்பதும் இளமையை உணர்த்தும் பெயராம்.

என்ற மரபியற் சூத்திரம்போல மொழிமாற்றி யுரைக்கப்படும். அங்ஙனஞ் சிறந்த பத்தும் புறஞ்சொன் மாணாக் கிளவியொடு தொகைஇயெனக் கூட்டியுரைக்க. சிறந்த பத்தென்றதனான் இவையன்றிக் கற்பினுள் வரும் மெய்ப்பாடு பிறவுமுளவேற் கொள்க. (24)

269. பிறப்பே குடிமை ஆண்மை யாண்டோ
டுருவு நிறுத்த காம வாயில்
நிறையே யருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே. (25)

இலக்குவனார்

273. Nativity, family trait, strength, age, the means of enjoying love, chastity, graciousness, understanding and wealth - these being said in order - are the kinds of similarity between the lover and the love.

பி.இ.நா.

இ.வி.488 மேற்சூத்திரமே.

இளம்பூரணர்

266. பிறப்பே குடிமை .... வகையே.

என்-னின், இது களவியலுட் கூறப்பட்ட தலைவற்குந் தலைவிக்கும் உளதாகும். ஒப்புப் பாகுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இதற்குப் பொருள் களவியலுள் உரைத்தாம்.[1] (25)

பேராசிரியர்

273. பிறப்பே குடிமை .... வகையே.

இதுவும் அம் மெய்ப்பாட்டுப் பகுதியே கூறுகின்றது; மேற் களவியலுள்,

"ஒத்த கிழவனுங் கிழத்தியுங் காண்ப" (2)

என்றான், அவ் வொப்பினது பகுதி இத்துணைக் குறிப்பு உடைத்தென்ப துணர்த்தினமையின்.

(இ-ள்) ஒத்த பிறப்பும், ஒத்த ஒழுக்கமும், ஒத்த ஆண்மையும், ஒத்த பிராயமும், ஒத்த உருவும், ஒத்த அன்பும், ஒத்த நிறையும், ஒத்த அருளும், ஒத்த அறிவும், ஒத்த செல்வமுமெனப் பத்து வகைய தலைமகளொப்பினது பகுதி என்றவாறு.

---

1. களவியல் சூத்திரம்

இவை தலைமகற்கு மெய்ப்பாடெனப்படாவோ வெனின் படுமாயினும் அஃது ஒப்பினது வகையென்றதனானே தலைமகட்கே உரிமை கொள்ளப்படும்.

குடிமையொடு பிறப்பிடை வேற்றுமை யென்னையெனின், பிறப்பென்பது குடிப்பிறத்தல்; அதற்குத் தக்க ஒழுக்கங் குடிமை எனப்படும்; குடிப்பிறந்தாரது தன்மையைக் குடிமையென்றானென்பது; அதனை ஊராண்மை யெனவுஞ் சொல்லுப. ஆண்மை புருடர்க்காம். அஃது ஆள்வினை யெனப்படும். இது தலைமகட் கொப்பதன்றாலெனின், குடியாண்மை யென்புழி (146, 244) ஆண்மையென்பது இருபாற்கும். ஒக்குமாதலின் அமையுமென்பது. யாண்டென்பது ஒத்தவாறென்னையெனின், பன்னீரியாண்டும் பதினாறியாண்டுமே பெண்மையும் ஆண்மையும் பிறக்கும் பருவமென்பது. ஒத்தினுள்[1] ஒப்ப முடிந்தமையின் அதுவும் ஒப்பெனவே படும். 'உருவு நிறுத்த காம வாயில்' என்பது, பெண்மை வடிவும் ஆண்மை வடிவும் பிறழ்ச்சியின்றி அமைந்தவழி அவற்றுமேல் நிகழும் இன்பத்திற்கு வாயிலாகிய அன்பென்றவாறு.

இங்ஙனம் ஓதியவகையான் இவை ஒன்பதாகலிற் பத்தாமா றென்னையெனின், காமவாயி லெனப்பட்ட இயற்கையன்பு வடிவு பற்றியல்லது தோன்றாமையானும், குணம்பற்றித் தோன்றுவன செயற்கை யன்பாகலானும், உருவினை அன்பிற்கு அடையாகக் கூறினானாயினும் உருவு சிறப்புடைமையின் அதனை நாம் பகுத்தெண்ணிக் கொண்டா மென்பது; என்னை?

> "வன்கண் குடிகாத்தல் கற்றறித லாள்வினையோ
> டைந்துடன் மாண்ட தமைச்சு" (குறள். 632)

என்புழி, கற்றறிதலென்பதனை இரண்டாக்கி ஐந்தென்பவாகலின்.[2]

அஃதேல், உருவென்பது குறிப்பின்றாகலின்[3] மெய்ப்பாடாமா றென்னையெனின், அவ் வுருவுபற்றி மனத்தின்கட் பிறப்பதோர் தருக்குண்டன்றே அதனான் அது மெய்ப்பாடெனப்படும். நிறையென்பது மறைபிற ரறியாமை (கலி. 133) நெஞ்சினை நிறுத்தல். அருளென்பது எல்லாவுயிர்க்கும் இடுக்கண் செய்யாத அருளுடையராயிருத்தல். அதுவுங் காமத்திற்கு இன்றியமையாததோர் குறிப்பு. உணர்வென்பது, அறிவுடைமை; அஃதாவது, உலகியலாற் செய்யத்தகுவது அறிதல். திரு வென்பது, பொருளுடைமையும் பொருள் கொணர்ந்து துய்த்தலுமின்றி எஞ்ஞான்றுந் திருத்தகவிற் றாகியதோர் உள்ளநிகழ்ச்சி. அது வினையுளுடைமையெனவும் படும். இவையெல்லாம் இருவர்க்குந் தம்மின் ஒக்கும் பகுதியெனவும் அவைபற்றி மெய்ப்பாடு பிறக்குமெனவுங் கூறியவாறு.

---

1. ஒத்து - நூல்
2. கற்றறிதல் என்பது கற்றலும் அறிதலும் எனப் பிரித்துக் கூறப்பட்டமைபோல 'உருவு நிறுத்த காமவாயில்' என்பது உருவும் உருவுநிறுத்த காமவாயிலும் என இரண்டாகக் கொள்ளப்பட்டது.
3. உரு-வடிவு. வடிவு என்பது குறிப்பாற் கொள்ளப்படுவது இன்றும் வெளிப்படையில் தெரிவது ஆதலின் குறிப்பாற் கொள்ளப்படும் மெய்ப்பாட்டில் சாராது என்பது வினா.

'வகை' என்றதனான், ஆண்மை, பெண்மை என்பது பிறப் பொப்புமை யெனவும், குடிமைவகையென்பது இருவர்க்கும் இளமைப் பருவத்தே தங்கிய ஒழுக்கமெனவும் பிறப்பினதுவகை யென்பது அந்தணர்க்கு நான்கும் அரசர்க்கு மூன்றும் வணிகர்க்கு இரண்டும் வேளாளர்க்கு ஒன்றுமெனவுங் கூறுக.[1] இனி, 'ஏவன் மரபி னேனோர் பாங்கினும்' (24) 'அடியோர் பாங்கினும் வினைவல பாங்கினும்' (23) தம்மின் ஒத்த பிறப்புக் காரணமாக உள்ளத்து வருங் காமக்குறிப்பு முதலாயினவுங் கொள்க. இவ் வெண்ணப்பட்டன ஒத்துவரினன்றி அறிவுடையார்கட் காமக்குறிப்பு நிகழாமையின் இவற்றையும் ஈண்டு மெய்ப்பாடென் றோதினானென்பது. அடியோர் பாங்கினும் வினைவல பாங்கினும் (23) வரும் இக் குறிப்பு முதலாயவற்றை இலேசினாற் கொண்டான். அவை பிறழ்ந்து வருமாகலினென்பது.

(உ-ம்)"அவனுந்தா
னேன லிதணத் தகிற்புகை யுண்டி யங்கும்
வானூர் மதியம் வரைசேரி னவ்வரைத்
தேனி னிறாலென வேணி யிழைத்திருக்குங்
கானக நாடன் மகன்"[2] (கலி. 39)

என்பது பிறப்பொப்புமை.

"உள்ளினெ னல்லனோ யானே யுள்ளிய
வினைமுடித் தன்ன வினியோள்
மனைமாண் சுடரொடு படர்பொழு தெனவே"[3] (நற். 3)

என்பது, தலைமகன் தனது இல்லறத்தைத் தலைமகள்மேல் வைத்துச் சொல்லினமையிற் குடிமையாயிற்று.

"கேள்கே டூன்றவுங் கிளைஞ ராரவுங்
கேளல் கேளிர் கெழீயின ரொழுகவு
மாள்வினைக் கெதிரிய வூக்கமொடு புகல்சிறந்து"[4] (அகம். 93)

---

1. அந்தணர் பிறப்பு நான்கு: அந்தணன் அந்தணிக்குப் பிறத்தல், அந்தணன் அரசிக்குப் பிறத்தல், அந்தணன் வணிகச்சிக்குப் பிறத்தல், அந்தணன் வெள்ளாளச்சிக்குப் பிறத்தல் என்பன. இப்படியே மற்றையோர்க்கும் கொள்க. (கீழிருந்து மேல் நோக்கின் வேளாளர்க்கு நான்கும் அந்தணர்க்கு ஒன்றும் என அமையும் இம் முறையைக் கூறாமை விளங்கவில்லை)

2. அவன் (தலைவன்) தினைப்புனத்தில் பரணமிசை யிருந்து மகளிர் புகைத்த அகிற்புகையைக் கலந்து இயங்கும் வான்மதியானது மலையைச் சேரின் அதைத் தேன்கூடு என்று எண்ணி அதைக் கொள்ள ஏணியைச் சரிசெய்து பார்த்திருக்கும் படியான காட்டுவாழ்வார் மகன் ஆவான். - இது தலைவன் பிறப்புப்பற்றியது. இதன் முன்னர்த் தலைவியின் பிறப்புப்பற்றிக் கூறி இது கூறலின் பிறப்பு ஒப்புமை.

3. நினைத்த வினையை முடித்தால் உண்டாம் இன்பம் போன்ற என் தலைவி மனைக்கண் இருந்து விளக்கொடு திரியும் மாலைக்காலம் இது என நினைத்தேன் அல்லனோ?

4. உறவினர் துன்பம் தாங்கவும், கிளைஞர் உண்ணவும், உறவல்லாரும் கூடி மகிழவும் ஆள்வினையை ஏற்ற ஊக்கத்தொடு விருப்பம் மிக்கு - பொருள்வயிற் பிரிபவன் கருதிய காரணங்கள் இவை.

என்புழி, இன்ன காரணத்திற் பிரிந்து போந்து வினை முடித்தனமாயினும் அவளை 'முயங்குகஞ் சென்மோ' என்றமையின் தன் ஆள்வினைக்குத் தக்க பெண்மையான் அவள் ஆற்றியிருந்தாளென்பதூஉம் கருதிய கருத்தினாற் காமக்குறிப்புப் பிறந்தமையின், அஃது ஆண்மையாயிற்று.

"என்றோ ளெழுதிய தொய்யிலும் யாழநின்
மைந்துடை மார்பிற் சுணங்கு நினைத்துக்காண்"[1] (க.லி. 18)

என்பது, யாண்டு.

"முல்லை முகையு முருந்துநிரைத் தன்ன
பல்லும் பணைத்தோளும் பேரம ருண்கண்ணு
நல்லேன்யா மென்று நலத்தகை நம்பிய
சொல்லாட்டி நின்னொடு சொல்லாற்ற கிற்பாரியார்" (கலி. 108)

என்பது உருவு.

"நின்மக ளுண்கண் பன்மா ணோக்கிச்
சென்றோன் மன்றவக் குன்றுகிழ வோனே
பகன்மா யந்திப் படுகட ரமையத்
தவன்மறை தேஎ நோக்கி மற்றிவன்
மகனே தோழி யென்றனள்" (அகம். 48)

என்பது, உருவுநிறுத்த காமவாயில்.

"கண்ணியன் வில்லன் வருமென்னை நோக்குபு
முன்னத்திற் காட்டுத லல்லது தானுற்ற
நோயுரைக் கல்லான் பெயருமாற் பன்னாளும்
பாயல் பெறேஎன் படர்கூர்ந்து" (கலி. 37)

என்புழி, முன்னத்திற் காட்டுதலல்லது தானுரையானென்பது தலைமகனிறையுடைமை கூறியவாறு.

"அவன்வயிற்
சேயேன்மன் யானுந் துயருழப்பேன்"[2] (கலி. 37)

எனத் தன்னிறையுடைமை காரணத்தாற் காமக்குறிப்பு நிகழ்ந்தவாறு.

"பெண்ணன் றுரைத்த னமக்காயின்"[3] (கலி. 37)

என்பதும் அது. இது, தோழி கூற்றன்றோ வெனின். அதுவுந் தலைமகள் குறிப்பெனவே படுமென்பது முன்னர்க் (273) கூறினாமென்பது.

---

1. தொய்யில் எழுதும்படியாகத் தலைவி தோளும் தலைவன் மார்பிற் சுணங்கும் கூறியமையால் இருவரும் யாண்டால் ஒத்தனர் என்பதாம். யாண்டு என்றது இருவரின் காமவுணர்வுப் பருவம்.
2. அவனுக்குச் சேயளாகிய யானும் துன்புறுவேன்
3. நாமே சென்று நம் துயரை அவனிடம் உரைத்தல் பெண்மையன்று.

"தாதுண் பறவை பேதுற லஞ்சி
மணிநா வார்த்த மாண்வினைத் தேரன்"[1] (அகம். 4)

என்பது, அருள்பற்றிப் பிறந்த காமக்குறிப்பு.

"அணங்குடை நெடுவரை யுச்சியி னிழிதரும்" (அகம். 22)

என்னும் பாட்டினுள்,

"தன்னசை யுள்ளத்து நந்நசை வாய்ப்ப"

என்பது, இருவருணர்வும் ஒத்தவாறு; தலைமகள் குறிப்பு உணர்ந்து வந்தன னென்றமையின். இது 'செல்வம்புலன்' (259) என்புழிப் புலனெனப்படாது காமத்திற்கே உரித்தாகிய உணர்வாகி வேறு கூறப்பட்டது.

"நெய்த னெறிக்கவும் வல்ல னெடுமென்றோட்
பெய்கரும் பீர்க்கவும் வல்ல னிளமுலைமேற்
றொய்யி லெழுதவும் வல்லன்றன் கையிற்
சிலைவல்லான் போலுஞ் செறிவினா னல்ல
பலவல்லன் றோளாள் பவன்"[2] (கலி. 143)

என்பது, திருவினாற் காமக்குறிப்புப் பிறந்தவாறு; என்னை? இனையன வல்லனாதல் செல்வக் குடிப்பிறந்தாரை அறிவிக்குமாகலின் அது காமக் குறிப்பினை நிகழ்த்துமென்பது. இது தலைமகட்கும் ஒக்கும்.

" உழுந்தினுந் துவ்வாக் குறுவட்டா நின்னி
னிழிந்ததோ கூனின் பிறப்பு"[3] (கலி. 94)

என்பதும், பிறப்புவகையின் பாற்படும். பிறவும் இவ்வாறே கொள்க (25)

**270. நிம்பிரி கொடுமை வியப்பொடு புறமொழி
வன்சொற் பொச்சாப்பு மடிமையொடு குடிமை
இன்புறல் ஏழைமை மறப்போ டொப்புமை
என்றிவை யின்மை என்மனார் புலவர். (26)**

இலக்குவனார்

274. The poets say that jealousy, crookedness, wondering, slander, harsh word, carelessness in duty,

1. மலரில் தாது உண்ணும் வண்டுகள் மணியோசை கேட்கின் அஞ்சும் என்பதற்குத் தான் அஞ்சி மணியின் நாக்கை ஆடாதபடிட் கட்டிய தேருடையான் - இது தலைவன் மீளும்போது இடைவழியில் செய்த அருட்செயல்.

2. என் தோளை ஆள்பவனான தலைவன் நெய்தல் மலர்களை இதழ்பிரித்துக் கட்டவும் வல்லன்; என் தோளில் கரும்பு எழுதவல்லன்; என் இளமுலைமேல் தொய்யில் எழுதவல்லன்; தன் அடக்கத்தால் கையில் கரும்புவில்லுடைய மன்மதன் போல்வான்; எனக்கு நல்ல பலவும் செய்ய வல்லவன்.

3. உளுந்தைக் காட்டிலும் சிறிய குள்ளனே! உன் பிறப்பைவிட என் கூன்பிறப்பு இழிந்ததோ - இது குள்ளனைக் கூனி கூறியது.

laziness, thinking highly of one's family, indulging always in pleasure, ignorance, forgetfulness and idea of comparison are not to be found in lovers.

இளம்பூரணர்

270. நிம்பிரி கொடுமை .... புலவர்.

என்-னின், இது தலைமக்கட்காகாத குணம் வரையறுத்து உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) நிம்பிரி என்பது - அழுக்காறு. அவ்வியம் என்பதும் அது.

கொடுமை என்பது - அறனழியப் பிறரைச் சூழும் சூழ்ச்சி.

வியப்பு என்பது - தம்மைப் பெரியராக நினைத்தல்.

புறமொழி என்பது - புறங்கூறுதல்.

வன்சொல் என்பது - கடுஞ்சொற் கூறல்.

பொச்சாப்பு என்பது - தம்மைக்[1] கடைப்பிடியாமை. அது சோர்வு.

மடிமை என்பது - முயற்சியின்மை.

குடிமையின்புறல் என்பது - தன் குலத்தினானுந் தன் பிறப்பினானுந் தம்மை மதித்து இன்புறுதல்.

ஏழைமை என்பது - பேதைமை.

மறப்பு என்பது - யாதொன்றாயினுங் கற்றதனையுங் கேட்டதனையும் பயின்றதனையும் மறத்தல். ஒடு எண்ணின்கண் வந்தது.

ஒப்புமை என்பது - ஆண்பாலாயினும் பெண்பாலாயினுந் தான் காதலிக்கப்பட்டாரைப் போல்வாரைக் கண்டவழி அவர் போல்வர் என ஆண்டு நிகழும் உள்ளநிகழ்ச்சி. அது உலகின்கட் கீழ்மக்கள்மாட்டுங் கண்ணிலோர்மாட்டும்[2] நிகழ்தலின் அது தலைமக்கட் காகாதென விலக்கப்பட்டது.

என்றிவை யின்மை யென்மனார் புலவர் என்பது - இச் சொல்லப்பட்டன இல்லையாதலும் வேண்டும், மேற்சொல்லப்பட்ட வற்றோடுங் கூட்ட என்றவாறு.

மேற்சொல்லப்பட்டவற்றொடுங் கூடுதல் அதிகாரத்தான் வந்தது.

இவ் விரண்டு சூத்திரத்தானும் ஒருமுகத்தானாய[3] இலக்கணங் கூறியவாறு. (26)

---

1. தம்மை - தம் பெருமையை
2. கண்ணிலோர்மாட்டு நிகழ்தலாவது காணாதபோது குரல்கேட்டு ஒப்புமை கண்டு நிகழும் உள்ளநிகழ்ச்சி.
3. ஒருமுகத்தானாய - ஒப்புமையானாய

பேராசிரியர்

274. நிம்பிரி கொடுமை .... புலவர்.

இது, காமக்குறிப்பாகாதன கூறுகின்றது.

(இ-ள்) நிம்பிரி - பொறாமை தோன்றுங் குறிப்பும்; அவை 'இந்நாட் சிறிது பொறுத்தாய்' என்றாற்போல்வன. கொடுமை - கேடுசூழ நினையுந் தீவினையுள்ளமும்; வியப்பு - தலைமகள்பால் தெய்வத்தன்மை கண்டான்போல் வியந்தொழுகுதலும்; இனி, குணத்தின்மேற் கொண்டு தன்னை வியத்தலெனினும் அமையும். புறமொழி - புறங்கூற்றும்; வன் சொல் - கண்ணோட்டமின்றிச் சொல்லுஞ் சொற்களும்; பொச்சாப்பு - கடைப்பிடியின்றி நெகிழ்ந்திருத்தலும்; மடிமை - சோம்புள்ளமும்; குடிமை - இவள் இழிந்த பிறப்பினளெனத் தன்னை நன்கு மதித்தொழுகுதலும்; இன்புறல் - ஒருவரொருவரிற் றாமே இன்புறுகின்றாராக நினைத்தலும்; ஏழைமை - நுழைந்த வுணர்வினரன்றி வரும் வெண்மையும்; மறப்பு - மறவியும்; ஒப்புமை - இன்னாளை யொக்கும் இவளென்று அன்பு செய்தலும்; என்றிவை இன்மை என்மனார் புலவர் - இவையெல்லாம் இன்றிவருந் தலைமகன்கண் நிகழும் மெய்ப்பாடென்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

எனவே, அவை[1] தம்மை வரையறுத்துக் கூறாது, அவற்றுக்கு ஆகாதன வரையறுத்துக் கூறினானென்பது, தலைமகட்குரிய மெய்ப் பாடாயின. வரையறுத்துக் கூறினமையின் அவற்றுக்கு[2] உதாரணங் காட்டலாவதில்லை. (26)

271. கண்ணினுஞ் செவியினுந் திண்ணிதின் உணரும்
உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின்
நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே. (27)

இலக்குவனார்

275. It is difficult to understand the significance of *meyppādu* for the people other than those who have the capacity of understanding well by means of eyes and ears.

இளம்பூரணர்

271. கண்ணினுஞ் .... குரைத்தே.

1. அவை - வேண்டும் மெய்ப்பாடுகள்
2. அவற்றுக்கு - நிம்பிரி முதலியவற்றுக்கு

என்-னின், இது அதிகாரப் புறனடை.

(இ-ள்) ஈண்டுச் சொல்லப்பட்ட நல்ல நயத்தினையுடைய மெய்ப் பாடெல்லாம் ஆராயுங்காற் கண்ணானுஞ் செவியானும் விளங்க உணரும் அறிவுடை மாந்தர்க் கல்லது கருதல் அரிது என்றவாறு. (27)

மெய்ப்பாட்டியல் இளம்பூரணர் உரை
முற்றிற்று.

பேராசிரியர்

275. **கண்ணினுஞ்** .... குரைத்தே.

இது, மேற்கூறிய மெய்ப்பாட்டிற்கெல்லாம் புறனடை.

"எள்ள லிளமை பேதைமை மடனென்
றுள்ளப் பட்ட நகைநான்கு" (252)

என்புழி, நகைக்கேதுவாகிய பொருள் கூறியதல்லது அப் பொருள்பற்றிப் பிறந்த நகையுணர்வு புலப்படுமாறு இன்னவாறென்றிலன். இனி, 'உடைமை இன்புறல்' (260) என்றற்றொடக்கத்தனவினும் அவ்வாறு எண்ணியதல்லது அவை உணருமாற்றுக்குக் கருவி கூறியதிலன். அங்ஙனமே பிறவுங் கூறியதிலனாகலான் அதனை ஒருவாற்றாற் கூறுகின்றான்.

(இ-ள்) கண்ணானுஞ் செவியானும் யாப்புற அறிவும் அறிவுடையார்க்கல்லது மெய்ப்பாட்டுப் பொருள்கோடல் ஆராய்தற்கு அருமையுடைத்து என்றவாறு.

மற்று மனத்து நிகழ்ந்த மெய்ப்பாட்டினைக் கண்ணானுஞ் செவியானு முணர்தலென்ப தென்னையெனின், மெய்ப்பாடு பிறந்தவழி உள்ளம் பற்றி முகம் வேறுபடுதலும் உரை வேறுபடுதலுமுடைமையின் அவை கண்ணானுஞ் செவியானு முணர்ந்துகோடல் அவ்வத் துறை போயினாரது ஆற்றலென்பது கருத்து.

"இரண்டறி கள்விநங் காத லோளே
முரண்கொ டுப்பிற் செவ்வேன் மலையன்
முள்ளூர்க் கான நாற வந்து
நள்ளென் கங்கு லெம்மோ ரன்னள்
கூந்தல் வேய்ந்த விரவுமல ருதிர்த்துச்
சாந்துளர் நறுங்கதுப் பெண்ணெய் நீவி
யமரா முகத்த ளாகித்
தமரோ ரன்னள் வைகறை யானே"[1] (குறுந். 312)

1. நெஞ்சமே! நம் காதலி இருவேறுபட்ட ஒழுக்கத்தையறிந்து ஒழுகும் கள்வியாவாள். நள்ளிரவில் மலையனது முள்ளூரில் உள்ள காட்டின் மணம்போலத் தன் மணம் கமழ கமழ வந்து நம் விருப்புக்குரியவளானாள்; ஆனால், பகற்பொழுதில் தன் கூந்தலில் மலரை உதிர்த்து எண்ணெய் தடவி இரவு நிகழ்ச்சியை மறைப்பாளாய் வந்து நம்மொடு கூடியிராத முகத்தளாய்த் தன் சுற்றத்தாரோடு ஒத்து நடப்பாளானாள்.

என்பதனுள், அமரா முகத்தளாகுதலும் தமரோரன்ன ளாகுதலும் தலைமகற்குப் புலனாகலின் அவை கண்ணுணர் வெனப்படும்.

"ஒழிகோ யானென வழிதகக் கூறி" (அகம். 110)

என்புழி[1], தலைமகன் மனத்து நிகழ்ந்த வழியெல்லாம் ஒழிகோ யானென்ற உரையானே உணர்ந்தமையின் அது செவியுணர் வெனப்படும். இங்ஙனம் உணர்தலும் உணர்வுடையார்க்கன்றிப் பெரிதும் அரிதென்பான் எண்ணருங்குரைத்து என்றானென்பது. (27)

மெய்ப்பாட்டியல் பேராசிரியர் உரை
முற்றிற்று

தொல்காப்பியம் உரைவளம்
மெய்ப்பாட்டியல்
முற்றிற்று.

1. என்புழி - என்ற பாடலிடத்து

சூத்திர முதற்குறிப்பு அகராதி

(எண் - பக்க எண்)

அணங்கே விலங்கே	30
அல்குல் தைவரல்	60
அவையும் உளவே	79
அன்ன பிறவும்	72
ஆங்கவை ஒருபால்	40
இழிவே இழவே	16
இன்பத்தை வெறுத்தல்	80
உறுப்பறை குடிகோள்	34
எள்ளல் இளமை	12
கண்ணினுஞ் செவியினுந்	112
கல்வி தறுகண்	32
கூழை விரித்தல்	57
செல்வம் புலனே	37
தெய்வம் அஞ்சல்	98
தெரிந்துடம் படுதல்	66
நகையே அழுகை	10
நாலிரண் டாகும்	8
நிம்பிரி கொடுமை	110
பண்ணைத் தோன்றிய	1
பாராட் டெடுத்தல்	64
பிறப்பே குடிமை	106
புகுமுகம் புரிதல்	52
புதுமை பெருமை	24
புறஞ்செயச் சிதைதல்	70
முட்டுவயிற் கழறல்	93
மூப்பே பிணியே	20
வினையுயிர் மெலிவிடத்	76

சொல்லகராதி

(எண் - சூத்திர எண்)

அ

அகறல் - 267
அச்சம் - 247, 252
அசை - 249
அஞ்சல் - 268
அடக்கம் - 256
அணங்கு - 252
அப்பால் - 247
அரற்று - 256
அருள் - 269
அருளல் - 256
அல்குல் - 259
அல்லல் - 255
அலங்கடை - 265
அலை - 254
அழிதல் - 266
அழிவில் - 267
அழுகை - 247
அன்பு - 256, 268

ஆ

ஆக்கம் - 251
ஆண்மை - 269
ஆய்தல் - 266
ஆராய்ச்சி - 256
ஆறு - 262

இ

இடுக்கண் - 256
இருகை - 259
இல்வலி - 259
இழவு - 249
இழிவு - 249
இளமை - 248
இளிவரல் - 247, 250
இறை - 252
இன்புறல் - 256, 270
இன்மை - 257, 264, 267

ஈ

ஈரம் - 260

உ

உடம்படுதல் - 261
உண்டி - 268
உண்மை - 268
உடுத்தல் - 258
உடை - 258
உடைமை - 256
உயிர் - 264
உயிர்ப்பு - 256
உரைத்தல் - 260
உருவு - 269
உவகை - 247, 255
உவத்தல் - 261, 266
உறுத்தல் - 259
உறுப்பறை - 254

ஊ

ஊழணி - 258

எ

எட்டு - 247
எடுத்தல் - 250, 259
எண்ணான்கு - 245
எள்ளல் - 248

ஏ

ஏதம் - 260
ஏழைமை - 270
ஏற்றவர் - 260

ஐ

ஐந்து - 261
ஐயம் - 256, 266

ஒ

ஒப்புமை - 266
ஒப்புவழி - 266
ஒழிதல் - 261

க

கட்டுரை - 267
கடை - 256
கண் - 266, 271
கண்ணிய - 245
கருதல் - 256
கல்வி - 253
கலங்கிய - 262
கழறல் - 267
கள்வர் - 252
களைதல் - 258
கனவு - 256, 266
காதல் - 267
காது - 258
காமவாயில் - 269
காய்தல் - 268
குடிகோள் - 254
குடிமை - 210, 269
குறைதல் - 266
கூட்டம் - 267
கூழை - 258
கூற்றம் - 260
கேட்டல் - 266
கைம்மிகல் - 256
கையறவு - 262
கொடை - 253
கொடுமை - 270
கொலை - 254
கொள்கை - 249
கோடல் - 260

ச

சாலா - 251, 252
சிதைத்தல் - 262
சிதைவு - 257
சிவணி - 263
சிறுமை - 251
சுருங்கல் - 266
சூழ்ச்சி - 256
செல்வம் - 255
செவி - 271

த

தகுமுறை - 257
தறுகண் - 253
தன்மை - 251
திருத்தல் - 259
திளைப்பு - 261
துஞ்சல் - 256
துயில் - 266
துவர்த்தல் - 268
தூது - தூ
தெய்வம் - 268
தெளிதல் - 268
தைவரல் - 258, 259
தொகை - 268
தோன்றல் - 262

ந

நகுநயம் - 257
நகை - 247, 248
நடுநிலை - 256
நலிதல் - 256
நாணல் - 260
நாணுதல் - 256
நாலிரண்டு - 246
நான்கு - 248, 249
நானான்கு - 245
நிம்பிரி - 270

நிமித்தம் - 262
நிற்றல் - 266
நிறுத்தல் - 267
நினைதல் - 256
நீத்த - 255
நுதல் - 257

ப

பசலை - 266
பண்ணை - 245
பணி - 250
பத்து - 268
பரிதல் - 266
பாய்தல் - 266
பாராட்டு - 260
பிணங்கல் - 252
பிரிவாற்றாமை - 268
பிறப்பு - 269
புகழ் - 253
புகுமுகம் - 257
புணர்வு - 255, 267
புதுமை - 251
புரிதல் - 257
புரையறம் - 268
புலம்பல் - 266
புலவர் - 270
புலன் - 255
புறஞ்சொல் - 268
புறம் - 262
புறமொழி - 270
புறன் - 245
பெருமிதம் - 253
பெருமை - 251
பொச்சாப்பு - 256, 270
பொய் - 266
பொருள்கோள் - 271
பொழுது - 268
பொறாமை - 256
பொறி - 257

ம

மடன் - 248
மடிமை - 256, 270
மதிமை - 251
மயங்கல் - 266
மருட்கை - 427, 251
மறுத்தல் - 261, 266, 267
மறைத்தல் - 257
மாந்தல் - 211
மிகை - 256
முனிதல் - 256
மூப்பு - 250
மூன்று - 259
மெய்ப்பாடு - 247
மென்மை - 250
மொழிதல் - 262

ய

யாப்பு - 250

வ

வரைதல் - 256
வருத்தல் - 256
வறுமை - 249
வன்சொல் - 270
வாழ்த்தல் - 256
வியர்த்தல் - 256, 257
விரைவு - 256
விலங்கு - 259
விளி - 249
விளையாட்டு - 255
வினை - 261
வெகுளி - 247, 254
வெரூஉதல் - 256
வெறுத்தல் - 268
வெறுப்பு - 254

பயன்படுத்தப்பெற்ற நூல்கள்

1. தொல்காப்பியம் - பொருளதிகாரம் - இளம்பூரணர் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1953

2. தொல்காப்பியம் - பொருளதிகாரம் - பேராசிரியர் இரண்டாம் பாகம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1935

3. தொல் - பொருள் - செய்யுளியல், நச்சினார்க்கினியர் உரை - மேற்படி கழக வெளியீடு, 1965

4. தொல்காப்பியம் பொருளதிகாரம் (இரண்டாம் பாகம்) பின்னான் கியல்களும் பேராசிரியரும், பிரமஸ்ரீ சி. கணேசையர் பதிப்பு, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1943

5. இறையனாரகப்பொருள் - மேற்படி கழக வெளியீடு, 1953

6. நம்பி அகப்பொருள் - மேற்படி கழக வெளியீடு, 1966

7. இலக்கண விளக்கம் - மேற்படி கழக வெளியீடு, 1973

8. முத்துவீரியம் - மேற்படி கழக வெளியீடு, 1972

9. தொன்னூல் விளக்கம் தமிழ்ப் பதிப்பகம், அடையாறு, சென்னை, 1978

10. Tolkappiyam With Critical Studies - Prof . Ilakkuvanar, Kural Neri Publishing House, Madurai - 6, 1963

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை – 600 113

அண்மை வெளியீடுகள்

	ரூ.காசு
யாப்பருங்கல விருத்தி	170.00
இராசேந்திரன் (நாடகம்)	55.00
முல்லை	25.00
திராவிட மொழியின் மூவிடப்பெயர்	40.00
தமிழ்நாட்டு வரலாற்றின் இலக்கிய ஆதாரங்கள் கி.மு. 200 – கி.பி. 1300	100.00
வெள்ளுடை வேந்தர் தியாகராயரின் வாழ்வும் பணியும்	65.00
தமிழ் நாடகமேடை முன்னோடிகள்	40.00
தமிழ்வள்ளல் பாண்டித்துரையார்	25.00
தேவநேயப் பாவாணரின் மொழியியல் – வரலாற்றுக் கொள்கை	35.00
தமிழ்விடு தூது	20.00
கபிலர்	70.00
கன்னடத்தில் காரைக்காலம்மையார் வரலாறு	20.00
நாட்டிய நன்னூல்	25.00
சங்க இலக்கியத்தில் கலையும் கலைக்கோட்பாடும்	65.00
கதிர்வேற் பிள்ளை – தமிழ்ச் சொல்லகராதி. மூன்று பாகங்கள்	600.00
எண்பத்து மூன்றில் தமிழ், பகுதி –3	30.00
காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோவில் – ஓர் ஆய்வு	60.00
திருக்குற்றாலநாத சுவாமி கோவில் வரலாறும் பண்பாடும்	60.00
உத்தர ராம சரிதம்	30.00
பம்மல் சம்பந்த முதலியாரின் உரைநடை நூல்கள் தொகுதி –1	50.00
பம்மல் சம்பந்த முதலியாரின் உரைநடை நூல்கள் தொகுதி –2	40.00
சதாசிவப் பண்டாரத்தார் ஆய்வுக் கட்டுரைகள்	40.00
சங்கத் தமிழர் வாழ்வியல்	75.00
வேதகிரியார் சூடாமணி நிகண்டு	65.00
தமிழக மேடைநாடகப் பெண்கலைஞர்கள் குறிப்பேடு	25.00
A Grammar of Contemporary Literary Tamil	80.00
Cilappatikaram	100.00
காதம்பரி மூலமும் வசனமும்	125.00
Tamil Culture and Civilization	60.00
Tolkappiyam and Astadhyayi	110.00
தமிழக மகளிர் தொடக்ககாலம் முதல் ஆறாம் நூற்றாண்டு வரை	50.00
தொல்காப்பியம் உரைவளம் – பொருள் – செய்யுளியல் பகுதி –1	50.00
தடிவீர சுவாமி கதை, வன்னியராயன் கதை	55.00
சடத்தலம்	40.00
காத்தவராய நாடகம்	30.00
மதங்க சூளாமணி	40.00
பண்டைத் தமிழ் எழுத்துக்கள்	32.00
தமிழில் நவீன நாடகம்	70.00
இலக்கியத்தில் சோதிடம்	65.00
சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும்	80.00